REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

புதிய பூமி

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 09 | மார்ச் 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்சி 45

# ஒப்பந்தத்தை எதிர்த்து பேரினவாதக் கூச்சலிடும் ஜே.வி.பி.



நாட்டில் துப்பாக்கி வேட்டுகளும் குண்டு வெடிப்புகளும் ஓய்ந்திருக்கின்றன. தேடுதல்களும் கைதுகளும் நிறுத்தப் பட்டுள்ளன. தடைகளும் கட்டுப்பாடு களும் தளர்த்தப்பட்டுள்ளன. பாதைகள் திறக்கப்பட்டும் வருகின்றன. இவை எத்தனை நாளைக்கு நீடிக்கப் போகின்றது என்ற கேள்வி எழுந்தாலும் மக்கள் மத்தியில் நிம்மதிப் பெருமூச்சு விடப்படுகின்றது.

கடந்த இருபது வருடங்களாக இரத்தத்தாலும் கண்ணீராலும் யுத்தத்தை அனுபவித்து வந்த வடக்கு கிழக்கு மக்கள் உட்பட அனைத்து மக்களாலும் யுத்த நிறுத்தத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. யுத்தம் இழைத்த கொடுமைகளில் இருந்து இன்னும் மீளமுடியாத நிலையில் இருந்து வரும் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்கள் யுத்த நிறுத்தத்தையும் அதற்கு காரணமாக அமைந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் வரவேற்கிறார்கள்.

புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத் திற்கு மிடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு நிரந்தர சமாதானம் வரை முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதே சகல மக்களின் விருப்பமாகும். கடந்த காலம் போன்று பேச்சுவார்த்தை முயற்சிகள் இடை நடுவில் முறிவடைந்து தடைப்பட்டு போவதை மக்கள் விரும்பவில்லை.

ஆனால் கடந்த இருபது வருடங்களாக இவ் யுத்தத்தால் பெரு நன்மைகளும் லாபங்களும் அடைந்து கொண்ட ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு யுத்த நிறுத்தமும் சமாதான முயற்சிகளும் மிகக் கசப்பானவைகளாக விளங்குகின்றன. அரசியல் பிழைப்பு நடாத்தி பாராளுமன்றம் சென்றவர்கள், ஆயுத வியாபாரத்தில் கோடிக்கணக்கில் தரகுப் பணம் பெற்றவர்கள், வர்த்தக வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடித்து லட்சாதிபதியானவர்கள், லஞ்சம் ஊழல் மோசடி நடாத்தி வந்த கும்பல்கள் போன்ற சக்திகள் யுத்த நிறுத்தம் குழம்பிப் போவதையே விரும்புகிறார்கள்.

## ஜனாதிபதி சந்திரிகா என்ன முடிவு எடுக்கப் போகிறார்?

அதற்கான அரசியல் சூழலை ஏற்படுத்த முனைந்து நிற்கிறார்கள்.

அந்தவகையிலே தான் புலிகள்-அரசாங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்க்கும் பேரினவாத சக்திகள் திரள ஆரம்பித்திருக்கிறார்கள். இதில் ஜே.வி.பி. தனது முழுப் பலத்தையும் காட்டி வருகிறது. சிஹல உறுமயவும் வீதியில் இறங்கியுள்ளது. பொதுசன முன்னணி முடிவு செய்யவில்லையாயினும் ஜனாதி பதி தனது அதிருப்தியை வெளியிட்டுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜே.வி.பி. கடுமையான எதிர்ப்பிர சாரத்தில் இறங்கியுள்ளது. ரணில் புலி கூட்டு நாட்டைப் பிரிக்கும் சதி என்று ஓலமிடுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் புலிகளின் ராணுவத்தை சட்ட ரீதியாக ஏற்றுள்ளதாகவும், இரண்டு நாடுகள் இருப்பதை உறுதிப்படுத்தி யுள்ளதாகவும் பிரச்சாரம் செய்கிறார்கள். சிங்கள மக்களுக்குரிய ஒரே நாடு இந்த நாடு மட்டுமே என்றும் அதனைப் புலிகளுக்குப் பிரித்துக் கொடுத்து விட ஒப்பந்தம் வழிவகுப்ப தாகக் குற்றம் சாட்டுகிறார்கள். நாட்டின் இறைமை, தேசப்பற்று, மேற்குலக ஊடுருவல் என்றெல்லாம் உரத்துப் பேசி வருகிறார்கள்.

இவ்வாறெல்லாம் பேசிவரும் ஜே.வி.பி நாட்டில் தேசிய இனப்பிரச்சினை பற்றி எதுவும் கூறாது சோஷலிசம் வந்ததும் சமத்துவமாகப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று மட்டுமே கூறுகின்றது. இவர்கள் கூறும் சோஷலிசம் எத்தகையது. அது பேரினவாத பௌத்த சோஷலிசம் தான். அதன் நிறம் சிகப்பு அல்ல. அது மஞ்சளேயாகும். சிஹல உறுமய பிடித்திருக்கும் மஞ்சள் கொடியை ஜே.வி.பி.யினர் தமது கரங்களுக்கு எடுத்துக் கொள்வார்கள் என்றே நம்பலாம்.

ஜே.வி.பி. யினர் பேசிவரும் பௌத்த சிங்களப் பேரினவாதம் இன்று திடீரென அவர்களால் பேசும் ஒன்றல்ல. அவர்களது ஆரம்பமே பேரினவாதம் தான். 1966ம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜனவரி எட்டாம் திகதி இடம் பெற்ற பேரினவாத ஊர்வலத்தில் மறைந்த ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயவீராவும் அவரது கூட்டாளிகளும் பங்கு கொண்டு 'மசாலவடே அப்பிட்ட எப்பா' என முழக்கமிட்டவர்கள். அதன் அடிப்படையில் தான் ஜே.வி.பி தனது அரசியலை ஆரம்பித்தது. அதன் நீடிப்புத் தான் இன்றைய பேரினவாத நிலைப்பாடு.



அன்று ஆயுதப் போராட்டம் எனப் புறப்பட்ட ஜே.வி.பி. இனவாதத்தைக் கொண்டிருந்த தென்றால் இன்று பாராளுமன்றத்தில்

தொடர்ச்சி 12ம் பக்கம்

# நூறு நாள் வேலைத் திட்டம் வெறும் பம்மாத்துப் பிரச்சாரம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வகுத்து நடைமுறைப்படுத்தி வருவ தாகக் கூறப்படும் நூறு நாள் வேலைத் திட்டம் ஒரு வகையான பம்மாத்துப் பிரசாரம் மட்டுமேயாகும். ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த பொருளாதாரத் திட்டங்களில் மாற்றம் எதுவும் செய்யாமல் அவற்றை மேலும் சீர்திருத்தி வேகமாக முன்னெடுப்பதே நூறு நாள் வேலைத்திட்டமாகும். அந்நிய மூலதனத் தை ஆர்வத்துடன் வரவேற்பதும் பொதுத்துறைகளை பல்தேசியக் கம்பனிகளுக்கு கையளிப்பதும், உலக வங்கி சர்வதேசிய நாணய நிதியத்திடம் அவர்களது நிபந்தனைகளுக்கு ஏற்ப கடன் பெறுவதும் மேற்படி நூறு நாட்கள் திட்டத்தில் அடங்குகின்றன.

அவை மட்டுமன்றி அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றன. மின்சாரப் பாவிப்பு ஐந்து மணி நேரமாக உயர்த்தப்பட்டுள்ளது. அடுத்து வரும் வரவு செலவுத் திட்டம் மிகவும் மோசமானதாக அமைய உள்ளது. இவை யாவும் நூறு நாட் திட்டத்திற்குள் தான் வருகிறது. நாட்டில் வேலை இல்லாதோர் தொகை பதினாறு லட்சமென அரசாங்க புள்ளி விபரம் கூறுகிறது. முப்பதினாயிரம் பட்டதாரிகள் வேலையின்றி இருக்கிறார்கள். கோட்டைப் புகையிரத நிலைய முன்பாக அவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

எனவே உலக மயமாதல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவான பொருளாதார வேலைத்திட்டத்தை வைத்துக் கொண்டு நூறு நாட்களாயினும் ஆயிரம் நாட்களாயினும் வெற்றி பெற முடியாது. யூ.என்.பி. பதினேழு ஆண்டுகளிலும் பொதுசன முன்னணி ஏழு ஆண்டுகளிலும் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாகச் சாதிக்க முடியாமல் போனதை நூறு நாள் திட்டங்களால் எவ்வாறு சாதிக்க முடியும். அப்படிக் கூறுவது வெறும் பம்மாத்துப் பிரசாரமாகவே இருக்க முடியும்.

# மலையக ஐக்கியம் எங்கே போயிற்று இ.தொ.கா.-ம.ம.மு. ஏமாந்து அம்பலம்

மாநகரசபை, நகரசபை பிரதேசசபைக் கான தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் மலையகத் தலைவர்களின் தனித்துவம் தலைதூக்கியுள்ளது. இ.தொ.காவும், ம.ம.முன்னணியும் ஐ.தே.கட்சியின் பட்டியலில் போட்டியிட்டு அவற்றின் பாராளுமன்ற பதவிகளை உறுதிசெய்து கொண்டன அல்லது பகிர்ந்து கொண் டன என்று கூறலாம். ஆறுமுகம் தொண்டமானும் சந்திர சேகரனும் கூட்டுச்சேர்ந்து ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிட்டதை முழு மலையகமும் ஐக்கியப்பட்டு விட்டதாக அவர்களும் கதை சொன்னார்கள். ஊடகங்களும் அதே கதையையே கூறின. மலையகத் திலுள்ள சில படித்தவர்கள் எனப்படுவர் களும் அதே கதையை விட்டனர். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட ஏறக்குறைய பெரும்பான்மை யான மலையகத் தமிழ் மக்கள் நம்பினர்.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் தற்போது இந்த ஐக்கியம் தோல்வியடை ந்துவிட்டது. ஏனெனில் இ.தொ.கா. ம.ம.மு. ஆகியவற்றின் அபேட்சகர்களும் இடம் கொடுக்கக் கூடியளவுக்கு ஐ.தே.கட்சி பட்டியலில் இடமளிக்கப் பட்டது. அதனால் இ.தொ.கா.வும் ம.ம.மு. தலைமையும் பிரிந்தன. இ.தொ.கா. ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிட ம.ம.மு. தனியாக போட்டியிடுகின்றது. சில இடங்களில் ஒன்று இரண்டு ப.ம.மு. அபேட்சகர் களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளன. அதனால் கடந்த பாராளுமன்ற தேர்தலில் அன்னியோன்னியமாக இருந்த இ.தொ.கா. ம.ம.மு. தலைமைகள்

12ம் பக்கம்

# இனப் பிரச்சினையில் காய்களை நகர்த்தும் அமெரிக்காவும் இந்தியாவும்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையை யுத்தமாக்கி இன்றைய நிலைக்கு கொண்டு வந்ததில் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் முதன்மை இடத்தை வகித்து வந்துள்ளன. அதே வேளை அவர்களுக்கு ஆலோசனைகள், நிதி உதவிகள், ராணுவ தளபாடங்கள், பயிற்சிகள் போன்றவற்றை காலத்துக்கு காலம் வழங்கி வழிநடாத்தி வந்ததில் அமெரிக்காவும் இந்தியாவும் முன்னணியில் இருந்து வந்துள்ளன. கடந்த கால் நூற்றாண்டின் இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றை ஆராயும் எவரும் இந்த உண்மையைத் தவறவிடமாட்டார்கள்.

அவ்வாறு அமெரிக்காவும் இந்தியாவும் நடந்து கொண்டமைக்கு அடிப்படைக் காரணம் அவர்களது உலக-பிராந்திய மேலாதிக்க எண்ணங்களேயாகும். தத்தமது நலன்களுக்காக எமது இனப் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டனர். இன்றும் இது தான் திரை மறைவில் இடம்பெறுகிறது.

தற்போதைய சூழலில் அமெரிக்கா ஒரு புறமாகவும் இந்தியா மறுபுறமாகவும் தமது காய்களைத் திரைமறைவில் நகர்த்தி வருகின்றன. கூர்ந்து நோக்கினால் தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னால் அமெரிக்கா இருப்பதன் நிழல் தெரிகின்றது. முன்பு ஆயுதங்கள் ஆலோசனை பயிற்சி வழங்கி வந்த அமெரிக்கா இன்று புதுப்பாடல் இசைக்கிறது. அமெரிக்கா விற்கான தூதுவர் இப்போது வடக்கு கிழக்கிற்குச் சென்று சமாதானச் சிறகடித்து வாயில் ஒலிங் இலையுடன் வெள்ளைப் புறாவாக வலம் வருகிறார். அவர் நன்றாகக் கீழிறங்கி சந்திக்க வேண்டியவர்களின் இல்லங்களுக்கும் கட்சிக் காரியங் களுக்கும் கூடச் சென்று வருகிறார். யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி நவீன மருத்துவ உபகரணங்களையும் வழங்கி இருக்கிறார். விடுதலைப் புலிகளுடன் நட்புறவுடனும் நெருக்கமாகவும் இருப்பது போன்ற தோற்றத்தை வழங்கி வருகிறார் அமெரிக்கத் தூதுவர்.

அதேவேளை இந்தியா வெறும் ஒப்பாசாரத்திற்கு மட்டும் ஒத்துழைப்பு ஆதரவு என்று கூறிக்கொள்கிறது. ஆனால் புலிகள் இய்க்கத்துடன் தொடர்ந்தும் தனது சகப்புணர்வு வன்மத்தைத் தொடர்கின்றது.

12ம் பக்கம்

# வாக்களித்த மக்கள் பசித்த வயிற்றோடு!

யாழ்ப்பாண நிருவாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் குறிப்பிட்டது போல் உள்ளூர் அதிகார சபைகளுக்கான வேட்பு மனுக்கள் தாக்கலாகி விட்டன. இலங்கையில் ஆட்சியில் இருக்கும் கட்சியும் சகல சபைகளிலும் போட்டியிடுகின்றது. ஆட்சியில் இருக்கும் கட்சி வெல்லும் பட்சத்தில் அது ஆட்சி செய்வதற்கு பதில் அதிகாரம் செலுத்தும் என்பதை கட்டியம் கூறுவதாக உள்ளது "அதிகார சபை" என்ற பதம். எது எவ்வாறு இருப்பினும் முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்கள் (தற்போது) குடியிருக்கும் தமிழ் பிரதேசத்தில், வடக்கு கிழக்கு பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்கமாட்டேன் என்று பௌத்தமத பீடாதிபதிகட்கு உறுதி அளித்த பிரதமரின் கட்சியின் சார்பில் போட்டியிடும், தமிழர்கள் ஆங்கில மொழியில் தத்தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய வைத்துள்ளமை தமிழ் மந்திரியாரின் உள்ளார்ந்த தமிழ்ப்பற்றின் வெளிப்பாடு வேதனைக்குரியது மட்டும் இன்றி பரிசோதனைக்குட் படுத்த வேண்டியதாகும்.

பொங்குதமிழ் நிகழ்வில் பங்குபற்றியதுடன் கையொப்பமிட்ட இவரா? இப்படிச் செய்துள்ளார் என்று இவரின் ஒப்பத்தைப் பெற்றவர்கள் அங்கலாய்த்து அவஸ்தைக்குள்ளாகி யுள்ளனர். அம்மையாரின் ஆட்சியில் எரிபொருள் விலையேற்றத்திற்கு ஆட்சேபனை தெரிவித்து மாட்டு வண்டியில் பாராளுமன்றம் தனது கட்சி சகாக்களுடன் சென்றவர், மந்திரியானதும் தான் பிரதிநிதித்துவம் செய்யும் வடபகுதி மக்கள் சகலரையும் மாட்டு வண்டியில் பயணிக்கும் நிலையை உருவாக்கியவர். அன்று "தந்தை" செல்வாவின் காலத்தில் அன்றைய இளைஞர் திருமலையில் ஏற்றப்பட்ட சிங்கக் கொடியை இறக்கியதால் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகினர். மிக நீண்ட இடைவெளிக்குப் பின்பு வடபகுதி மீனவர்கள் வரலாற்றுப் பதிவாக யாழ் செயலகத்தை முற்றுகையிட்டதுமின்றி சுதந்திரத் தினத்தன்று கறுப்புக் கொடியேற்றி தமது உயிர்வாழும் இடையூறை வெளியுலகிற்கு அம்பலப்படுத்தினர் இன்று. இவர் என்னடா என்றால் சிங்கக்கொடியை செயலகத்தில் ஏற்றுவதற்கும் சுதந்திரதின வைபவத்தை கொண்டாடுவதற்கும் மீனவர்களே விட்டுக்கொடுங்கள் போராட்டத்தை ஒத்திவையுங்கள் என்கின்றார். இதே மந்திரியார் சென்ற வருடம் வெறும் எம்.பீ யாக இருந்த வேளையில் மேதினத்தை துக்கதினமாகக் கொண்டாடி மேதினக் கூட்டங்கள் நடத்தத் தேவையில்லை என்று கூறியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். புலிகளின் பேச்சாளர் தான்தானே என்கிற மாயையை மக்கள் மத்தியில் உண்டு பண்ணியவாறே தமிழ் மக்கள் விரோத விலையேற்றம், பதுக்கல், செயற்கைத் தட்டுப்பாடு போன்றவற்றை ஊக்குவித்த வண்ணமுள்ளார். ''விவசாயின் பொங்கலை'' ''வியாபாரியின் பொங்கலாக" மாற்றிய உலகிலேயே முதலாவது தமிழர் என்ற பெருமை பெற்றுள்ளார். தினமும் ஏழை மக்களின் வயிற்றில் அடித்துக் கொண்டே ஆலயங்களுக்கு நன்கொடை கொடுப்பதால் தன் பழிபாவம் தீரும் என நம்புகிறார். பாவம், ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். தாவரபட்சினிகள் ஆலய அர்ச்சகர்கள் போன்றோர்க்கு குறிப்பாகவும் ஏனையோருக்கும் தேவையான உருளைக் கிழங்கை கிலோ 160 ரூபாவிற்கு விற்கவைத்துவிட்டு நாதஸ்வர கலைஞர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து ஈழத்துச்சிதம்பரத்தில் கச்சேரி வைப்பதால் கூத்தன் ஆனந்த நடனம் ஆடுவானா? அல்லது சங்கார நடனம் ஆடுவானா? கூத்தனுக்கு எது பிரியமோ அதை ஆடட்டும். வாக்களித்த மக்கள் பசித்த வயிற்றோடு கிடக்கட்டும்.

~ சிவகாம மைந்தன் ~

# ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர்

ஊழல் சக்கரவர்த்தினி எனப் பெயரெடுத்த செல்வி ஜெயலலிதா மீண்டும் தமிழ் நாட்டில் முதலமைச்சராகி இருக்கிறார். தமிழகத்தில் திராவிட இயக்கத்தின் வழி வந்தவர்களே அண்ணாத்துரை. கருணாநிதி. எம்.ஜி.ஆர். என ஆண்டு வந்தனர். அதன் தொடர்ச்சியாகவே ஜெயலலிதா அ.இ.தி.மு.க வின் பேரில் முன்பும் ஆட்சி செய்தார். இப்போதும் ஆட்சி செய்கிறார். தனது ஆட்சிக் காலத்தில் ஊழலில் உச்சத்திற்குச் சென்றதுடன் அதிகார துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டார். பழிவாங்குவதிலும் பேர் போனவராக விளங்கினார். தனது சொத்து, சுகம், கூட இருப்பவர்களின் தேவை என்பனவற்றுக்காகவே பல முக்கிய அரசியல் முடிவுகளை எடுப்பவர் எனப் பெயர் பெற்றவர் தான் இந்தச் செல்வி. கருணாநிதியால் பல வழக்குகளில் இழுத்து விடப்பட்ட போதிலும் யாவற்றையும் தனது அதிகாரம் பணம் அந்தஸ்தால் முறியடித்து மீண்டும் பதவிக்கு வந்து விட்டார். இனிமேல் கருணாநிதி பாடு மிகவும் திண்டாட்டம் தான். கூட்டிக் கழித்து பெருக்கிப் பிரித்துப் பார்த்தால் எல்லாத் திராவிடப் புள்ளிகளும் ஒரே குட்டையில் ஊறிய ஊழல் மோசடிக் கும்பல்களே தான். யார் பதவிக்கு வந்தாலும் தமிழக மக்களது வாழ்க்கை அப்படியே தான்.

தமிழகத்தை இந்தியாவில் முதல்தர மாநிலம் ஆக்குவேன் என்றும் ஆண்டிப்பட்டித் தொகுதியை முதல்தர தொகுதியாக்குவேன் என்றும் சபதம் எடுத்துள்ள ஜெயலலிதா எதனையும் கிழிக்கப் போவதில்லை. உலகமயமாதலுக்கு வழிவிட்டுக் கொடுத்து கொள்ளை நடாத்துவதைத் தவிர அவரால் வேறு எதையும் சாதிக்க முடியாது.

• • • • • •

# காரிருள் நேரம் : சில சிந்தனைகள்

### மின்வெட்டு நேரங்களின் மருமம் என்ன?

| மின் வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் நேரங்கள் | | |
|---|---|---|
| 5.30 | – | 8.00 |
| 6.30 | – | 9.00 |
| 8.00 | – | 10.30 |
| 9.00 | – | 11.30 |

இவை தொடர் சுற்றில் நிகழுகின்றன. ஒரு (அ) பிரதேசத்தை எடுத்தால் அங்கு 5.30க்கு மின் வெட்டு தொடங்கும். (ஆ) என்ற இடத்தில் 8.00 மின்வெட்டு தொடங்கும் என்றால் அப்போது (அ) வில் மின்வெட்டு முடியும். இப்படியே (அ) வில் 9.00க்கு முடியும் போது (ஆ) வில் தொடங்கும். மறுநாள் (ஆ) வில் 8.00க்கு முடியும் போது (அ) வில் தொடங்கும் அடுத்தநாள் (ஆ)வில் 9.00க்கு முடிய (அ)வில் தொடங்கும். கொழும்பில் ஒருவருக்கு இப்படிப்பட்ட இரு பகுதிகளில் வீடுகள் இரண்டு இருந்தால், அவர் மின்வெட்டை அனுபவிக்காமலே நாளைக் சமாளிக்கலாம். அதாவது ஒரு இடத்திலிருந்த மற்றதற்குப் போகும் நேரம் தவிர மின்வெட்டு ஏன் 3மணி நேரமாக இல்லை என்பதற்கும், மின்வெட்டு ஏன் 5.30, 6.30, 7.30, 8.30 என்ற விதமாகத் தொடங்கவில்லை என்பதற்கும் பொருத்தமான வேறு காரணம் ஏதும் தெரியவில்லை. தலைநகரில் மின்வெட்டு நடைமுறையாகும் பகுதிகளையும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் வாழும், மின்சார சபைக்கு நெருக்கமான, பிரமுகர்களையும் பற்றி ஆராய்ந்தால் புதிய தகவல் ஏதும் புலப்படுமா?

## காரிருள் ஜயசூரிய

அமைச்சர் ஜயசூரிய இரண்டு மாதத்தில் மின்வெட்டைத் தளர்த்தும் நடவடிக்கைகள் நடைமுறைக்கு வரும் என்றார். வரவில்லை. மின்வெட்டு நேரம் கூடிவிட்டது. மின் தட்டுப்பாடு நிரந்தரமாக ஆறுமாதத்தில் தீரும் அல்லது பதவி விலகுவேன் என்றார். தீருவது நிச்சயமில்லை. பதவி விலகமாட்டார் என்பது மட்டும் நிச்சயம். யூஎன்.பி வட்டாரங்களுக்குள்ளேயே கறுவல ஜயசூரிய காரிருள் ஜயசூரிய என்ற கேலி பேசத் தொடங்கிவிட்டார்கள். எருமை மாட்டில் மழை பெய்த மாதிரி இதெல்லாம் ஒரு அமைச்சருக்கு ஒரு பொருட்டா?

# ராமன் ஆண்டாலென்ன, ராவணனன் ஆண்டாலென்ன!

அரசாங்கங்கள் மாறலாம். பிரதமர் மாறலாம். சனாதிபதி மாறலாம். கால் பிடிக்கும் கலையில் வல்ல நிபுணர்கள் மட்டும் திரும்பவும் தமது நாற்காலிகளில் அமர்ந்து கொள்வார்கள்.

சென்ற ஆண்டு மின்சாரசபை ஊழல்கள் பற்றி யூஎன்.பி. சார்பு ஏடுகள் பலர் மீது குற்றப்பத்திரிகை வாசித்தன. அதிகாரிகள் பலரது பொட்டுக் கேடுகள் அம்பலமாயின. ஆனாலும் என்ன! அதே அதிகாரிகள், அதே நிபுணர்கள், அதே ஆலோசகர்கள்.

அதே பிரச்சினைகள், அதே ஊழல்கள், அதே அயற் கொம்பனிகள், இந்த நாட்டை அந்நியர்களுக்கு முழுவதுமாக விற்பதற்கு மின்சாரக் கட்டுப்பாடும் ஒரு வசதியாகி விடுகிறது. மின்சார சபையை மூன்றாகப் பிரித்துத் தனியார் மயமாக்குவதன் மூலம் அரசாங்கம் கையைக் கழுவிடும். அதன் பிறகு நடக்கிற விலை ஏற்றங்கள் பற்றி யாருக்கு என்ன கவலை?

அவரவருக்கு உரிய கொமிசன்கள் குறைவறக் கிடைக்கும்வரை யாரும் பெரிதாக மூச்சுவிடப் போவதில்லை. பாராளுமன்றத்தில் பேசப்படுகிறவை நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதும் இல்லை.

பாராளுமன்ற நாற்காலிகளை யாருடைய பிட்டங்கள் சூடேற்றினாலும் மக்கள் வயிற்றில் எரிவது அதே நெருப்புத்தான்.

# நாலும் நடக்கும் உலகிலே

## மனித உரிமைகள் அன் கோ (லிமிற்றட்)

இன்று மனித உரிமைகள் போல விற்பனைக்குச் சிறந்த பண்டம் கிடையாது. அந்தப் பேரை வைத்து எக்கச்சக்கமாக உழைக்கலாம். அதை வைத்துப் பிற பதவிகளைப் பெறலாம். அதிகாரத்தில் உள்ளவர்களுடன் நெருக்கமாகிக் கொள்ளலாம். விசேடமாக, மனித உரிமைகளை மீறும் அதிகார வர்க்கத்துடன் கைகோர்த்து உலாவலாம்.

தனிப்பட்ட அரசியற் காழ்ப்பை வைத்து அரசியல் வணிகம் நடத்தி வந்த மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) என்ற கம்பெனியில் இரண்டு பங்காளிகளும் அரசாங்க மானியத்தில் ஊதியம் பெறும் சில தொண்டர்களுமே இருந்து வந்துள்ளனர்.

முதலில் விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்களை மிகைப்படுத்தவும் இந்தக் கம்பெனியின் மாதாந்த அறிக்கைகள் இப்போதெல்லாம் பச்சையான பொதுசன முன்னணியின் பிரசார நோக்கில் வருகின்றன. அண்மைய அறிக்கை ஒன்று சென்ற தேர்தலில் டக்ளஸ் தேவானந்தாவின் தொண்டரடிப்பொடிகளின் கைங்கரியங்களை மழுப்பும் முயற்சியில் தன்னை அழித்துக்கொண்டது.

தமிழ் மக்கள் பற்றியே பேசுகிற இந்தக் கம்பனி அறிக்கைகள் ஏன் ஆங்கிலத்தில் மட்டுமே வருகின்றன? இதன் அறிக்கைகள் ஏன் ஐலன்ட் போன்ற சிங்கள இனவெறி ஏடுகளில் முழுதாக வெளியாகின்றன? யாராவது சொல்வார்களா? அல்லது சொல்லத்தான் வேண்டுமா?

இப்போது இந்தக் கம்பனி தனக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் தொடர்பே இல்லை என்ற அறிவிப்புடனேதான் வருகின்றன. இதற்கும் கடந்த ஆறேழு வருடமாக இந்தக் கம்பனியின் பேருக்கு யாழ்ப்பாணத்துக்கும் பல்கலைக்கழகத்துக்கும் மனித உரிமைக்கும் ஒரு உறவுமில்லை என்று தோலுரித்துக் காட்டப்பட்டதுக்கும் ஏதாவது உறவு இருக்குமா? யாராவது...

## ஜே.வி.பி. ஒரு இனவாதக் கட்சி குறிப்பிடத்தக்க அரசியற் கண்டுபிடிப்பு

ஜே.வி.பி ஒரு இனவாதக் கட்சி என்ற இரகசியத்தை இப்போது சுயாதீனமான ஆய்வுகள் மூலம் காலஞ்சென்ற நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தினா ஆராய்ந்து கண்டுபிடித்ததற்காக அவருக்கு அரசியற் கலாநிதி பட்டம் வழங்கப்படுமா?

அப்படி வழங்கப்பட்டால் இலங்கை அரசியலில் இரட்டைக் கலாநிதிப்பட்டம் பெற்ற இரண்டாவது அரசியல்வாதி என்ற பெருமை அவருக்குரியதாகும். அவருக்கு முதல், இத் தகுதி என்.எம்.பெரேரா என்னும் அவரது குருநாதருக்கே கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது

ஜே.வி.பி பற்றி அறிந்து சொன்னார் என்ற செய்தியை மறுத்தும் அது ஒரு ஸ்றாலிஸ்ற் பொய் என்றும் திருநாவுக்கரசு (அப்பர்) சுவாமிகள் இதுவரை அறிக்கை விடவில்லை. விடமாட்டார் என்று ஒரு உத்தரவாதமும் இல்லை என்பது குறிப்பிடத்தகாதது.

## அவர் சொல்லவில்லை, அவருடைய சட்டப்படிப்பு சொல்கிறது!

கொலைச் சம்பவத்தைப் பற்றிக் கண்டிக்கக் கொலை செய்யப்பட்டவர்கட்கே உரிமை உண்டு! கால் நூற்றாண்டுக்காலச் சட்டத்துறை அனுபவம் பெற்ற அறிஞரும் சட்ட மேதையுமான தமிழ்மாறன் ஞாயிறு வீரகேசரியில் முன்வைத்துள்ள வாதங்களின் தர்க்க ரீதியான நீட்சி இது. அமிர்தலிங்கம் கொலையைப் பற்றி ஆட்சேபிக்கவோ த.வி.கூட்டணியின் தில்லுமுல்லுகள் பற்றிக் கேட்கவோ பேராசிரியர் சிவசேகரத்துக்கு உரிமை கிடையாது என்று சட்டரீதியாக விளக்கமளித்த தமிழ்மாறன், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்து ஏமாந்த ஒருவருக்கு மட்டுமே த.வி.கூட்டணி பற்றி விமர்சிக்க உரிமையுண்டு என்று அறிவித்துள்ளார்.

தமிழ்மாறனுடைய தமிழ்த்தேசிய விளக்கத்தை ஏற்காத வரை. சிவசேகரத்துக்கு அரசியலே தெரியாது என்றும் தனது தீர்ப்பில் கனம் நீதிபதி தமிழ்மாறன் அவர்கள் தெரிவித்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

## தமிழ்த் தெரியாத மாறன்


தேர்தலுக்காகத் தான் தமிழ்த் தேசியவாதம் கண்டுபிடிக்கப்பட்டதகாக இடதுசாரிகள் சொன்னதாக தமிழ் மாறன் என்கிற அறிஞர் சொல்லியுள்ளார். மெய்யாகவே, இந்த அறிஞருக்குத் "தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தது தேர்தலுக்காகவே" என்ற வாக்கியத்தின் கருத்து விளங்கவில்லையா? இந்த லட்சணத்தில் வாரா வாரம் வீரகேசரியில் அரைப்பக்க நீள உள்றல் வேறு! அதைவிட, வீரகேசரி வேறு எதையாவது போடலாமே. தமிழ்மாறனை வாசிப்பதை விட வேறு விடயங்களில் அறிவு வளர அதிகம் வாய்ப்பு உண்டு.

## விடிவெள்ளியா, மின்மினிப் பூச்சியா?

தமிழ் அரசியலில் ஒரு புதிய நம்பிக்கை நட்சத்திரமென்று சென்ற ஆண்டு யோதிலிங்கம் என்பவர் தனது நூலில் அறிவித்த மனோ கணேசன் இப்போது யூஎன்.பியில் சங்கமமாகி அடையாளம் இழந்து போய் விட்டாரே.

நம்பிக்கை நட்சத்திரம் எரிநட்சத்திரமாகிப் பொசுக்கென்று வெந்து போய் விட்டதா? அல்லது இது நேற்று ஒளிர்ந்து இன்று இறந்து போய்விட்ட மின்மினிப் பூச்சியா? யோதிலிங்கம் என்ன அரசியல் விளக்கம் சொல்கிறார். அந்த ஆலோசனையைத் தனது ஆய்வுக் திறத்தால் கணேசனுக்கு அருளுரை வழங்கியவரே அவர்தானாம்.

## திருப்புகழ் கதிர்காமப் பெருமான்



பெரும்பான்மை இனவாதர்
பணியாளாய் உயர்வாகி
அரசான பீ. ஏ யின்
அதிகாரம் பரிபோயும்
பரிவாரம் பல கார்கள்
படைகாவல் பரிபோகா
கரியானைக் கினியோனே
கதிர்காமப் பெருமானே



அருண்ட கிரிநாதர்.

# உழவர் திருநாளும் ஊடகங்களும்

ஏர்பிடித்துழுபவன் தான் உழவன். விஞ்ஞான வளர்ச்சியினால் ஏர் - இழுபொறியாக மாறியிருப்பினும், வயலை உழுது பயிரிட்டு, நெல்மணியை அறுவடை செய்பவனே நெல்மணியின் உரித்தாளி. அவன்தான் பூமித் தாய்க்கு நன்றிக் கடனாக தை முதல் நாள் தைப்பொங்கல் பொங்கி, மறுநாள் அவனுக்கு ஒத்தாசை புரிந்த எருதுகளுக்கு நன்றி செலுத்தவென பட்டிப் பொங்கல் பொங்குகிறான். ஏனைய மக்கள் நெல்லை விவசாயிடம் வாங்கி விற்கும் வியாபாரியென்றா லென்ன, பணம் கொடுத்து பச்சையரிசி வாங்கி பொங்கும் சாதாரண மக்கள் ஆயினும் சரி பொங்கல் பொங்குவது நமது வழமை நிகழ்வு. நெல்லை விளைவித்த உழவனே பொங்கல் பண்டிகையின் மூலாதாரமானவன். அவனுக்கு அடுத்தவர்கள் தான் மற்றெல்லோரும். இதனையே "உழுதுண்டு வாழ்வரே வாழ்வர் மற்றெல்லார் தொழுதுண்டு பின் செல்பவர்" என்றார் வள்ளுவர். மழை வேண்டி கொடும்பாவி எரிப்பதும் விவசாயியே. அதைப் பார்த்து பிரதி பண்ணிய நடவடிக்கையே அரசியல் வாதிகட்கு எரிக்கப்படும் கொடும்பாவி. முன்னையது "மழை வேண்டி" எரிப்பது. பின்னையது "அநீதியை அழிக்க வேண்டி" எரிப்பது.

நெல் விளைவிக்கும் அதே விவசாயி தான் ஏனைய மரக்கறி வகைகளையும் பயிரிடுபவன். அவன் தனது பயிரிற்கு நீர் பாச்சுவதற்கு எரிபொருள்தேடி கச்சேரி வாசலில் சாத்வீகப் போராட்டம் நடாத்தும் வேளையில், எரிபொருளைள மொத்தமாக வாங்கிப் பதுக்கிய (Eelam Sole Proprietor இன்) மாடி வீட்டில் பொங்கல் பொங்கியது. இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில் இச்செயலை இலங்கையின் அரச ஒலிபரப்பு, ஒளிபரப்பு ஊடகங்கள் பிரமாதமாக ஒலி, ஒளி பரப்பியது. விவசாயிகளின் "உரிமைப் பொங்கல்" யாழ்ப்பாணத்தில் "வியாபாரிகளின் விளம்பரப் பொங்க லாக" மாறியுள்ளது.

அரச ஊடகங்களை தனது சுய விளம்பரத்துக்குப் பயன்படுத்துவதில் அம்மையாரின் மந்திரியாரிற்கு தானும் சற்றேனும் சளைத்தவன் அல்ல என்பதை ஐயாவின் மந்திரியாரும் நிரூபித்துள்ளார். ஐயாவின் மந்திரியாரை ஆளாக்கிய "பொங்கு தமிழ்" பொங்கும் இளைஞர்கள் இதைக் கண்டும் காணாது இருப்பதும் கவலை மேல் கவலை. இவ்விளைஞர்கள் தமது கல்விப் புலத்திற்கு அப்பால் சில நல்ல பணிகளை மேற்கொள்வதை நாடறியும், இருப்பினும், ஒரு விவசாயின் வீட்டிலோ அன்றி கமநல சேவை நிலையத்திலோ இப் பொங்கல் விழாவை நடாத்துவதற்கு தமது அறிவாற்றல் மூலம் நெறிப்படுத்தயிருப்பின் எத்தனை பொருத்தமாயிருந்திருக்கும். தமிழுக்கு பல விழாக்களும், இலக்கிய நாயகிகளின் பெயரால் பட்டிமன்றங்களும் நடாத்தும் பொன்னாடைகள் போர்த்தப்பெற்ற பட்டம் பல பெற்ற கனவான்கள், இது பற்றி மவுனம் காப்பது ஏனோ தெரியவில்லை? உழவர் திருநாள் எனப் பெயர் பெற்ற "தைப்பொங்கல்" நல்நாள் வியாபாரிகளின் விளம்பர நாளாகியது கண்டு இயற்கையே சீற்றம் கொண்டு நெல் மணிகளை நீரில் மிதக்க வைத்து தனக்கே உணவாக்கிக் கொண்டு விவசாயிகளை தாங்கொணத் துயரத்துக்கு ஆளாக்கியதுடன் தமிழர்களை சிந்திக்கவும் வைத்துள்ளது.

– சிரகசியன் –

# இரத்தத்தை இழுத்து ஒரு விளம்பரம்

கடந்த 9-02-2002 அன்று கொழும்பின் யூஎன்.பி. பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையில் மேற்பார்வையில் இரத்ததான நிகழ்ச்சி பலத்த விளம்பரத்துடன் இடம் பெற்றது. ஏன் இந்த இரத்த தானம் என்றால் அதற்கு கிடைத்த பதில் தான் வேடிக்கையானது. "சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கான பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் பொது மக்களின் மனச் சாட்சியைத் தட்டியெழுப்பவும்" தான் இவ்வாறு செய்யப்பட்டதாம். சிறையில் வாடும் தமிழர்களுக்கு தேவை விடுதலையே தவிர இரத்தம் அல்ல. தான் அங்கம் பெறும் அரசாங்கத்திடம வற்புறுத்தி சிறையில் வாடுவோரை விடுவிக்க முடியாத மனோ கணேசன் வீணாக இளைஞர்களின் இரத்தத்தை தானம் செய்து தனக்கு விளம்பரம் தேடிக்கொண்டார். விளம்பரம் ஏன் தெரியுமா?

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் தமது குடும்பத்தவர்களை நெருங்கியவர்களை ஏணிச் சின்னத்தில் இறக்கி வெற்றிபெறச் செய்வதற்கேயாகும். அரசியலில் மேலே போக வேண்டும் என்றால் "அப்படிப் போடு விடயத்தை" என்று யாரோ கூறியது பொய் இல்லைத்தான்.

# சட்ட வலையில் சிறிய மீன்களும் பெரிய சுறாக்களும்

கண்டி மடவல உடத்தலவின்னப் பகுதியில் தேர்தல் தினமான டிசம்பர் 5ம் திகதி பத்து முஸ்லீம் இளைஞர்கள் துடிக்கத்துடிக்கப் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை சம்மந்தமாக முப்பது படையினர் சம்மந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் இருந்து வருகின்றனர். இக் கொலையில் சம்மந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தையும் அவரது இரண்டு புதல்வர்களான லோஹான், சானுக்க ஆகியோரும் கைதாகி விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். இவர்கள் கொழும்பு கண்டி வைத்திய சாலைகளில் வைத்தியத்திற்காக சேர்க்கப்பட்டுள்ளனர், ஆனையும் ஒரு நாள் அறுகம் புல்லில் தடக்கும் தானே என்று சிலர் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் சட்டம் எல்லோருக்கும் சமம் என்று கூறுவது ஒரு தோற்றம் மட்டும் தான் என்பதை நாட்கள் செல்லவே கண்டு கொள்ள முடியும். சட்டம் என்ற வலையில் அகப்படுவது சிறிய மீன்களே பெரிய சுறாக்கள் தப்பிக் கொள்ளவே செய்யும்.

# தியாகங்கள் யாருக்கு?

மின் வெட்டுக்கான காரணம் மின் உற்பத்திப் பற்றாக்குறை எனப்படுகிறது. அது மட்டுந்தான் காரணமா? சிலபேர் அளவுக்கு அதிகமாக மின்சாரத்தைப் பாவிப்பதும் பலபேர் குறைந்தளவே பாவிப்பதும் மட்டுமில்லாமல் நாட்டில் மூன்றிலொரு பகுதியினருக்கும் மேல் மின்சார வசதி இல்லாமல் இருப்பதும் எப்படி? மேல்மாகாணம், குறிப்பாக கொழும்பு, மின்சார உற்பத்தியில் பாதிக்கு மேலான அளவை எடுத்துக் கொள்ளுகிறது. அதிலும் முக்கியமான ஒரு பகுதி ஏ.சி.உபகரணங்களுக்குப் பயன்படுகிறது. இன்னும் கூட, வசதி உள்ளவர்கள் பகல் நேரத்தில் மின்சாரத்தைச் சேமித்து இரவில் முழு வீட்டையும் ஒளி வெள்ளத்தில் ஆழ்த்துகிறார்கள். அவர்களது குளிர்சாதனப் பெட்டிகள் தொடர்ந்து இயங்குகின்றன. இன்னொரு புறம் பி.ஓ.ஐ. மூலம் முதலிடுகிற அயலவர்களுக்கும் மலிவு விலையில் மின்சாரம் வழங்கப்படுகிறது அவர்கள் அதன் மூலம் தமது லாபத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள். உள்ளர் தனியார் மின்சார உற்பத்தியாளர்கட்கு அரசாங்கம் கொடுக்கிற விலையைவிட அயல்நாட்டு மின் விநியோகக் கம்பனிகட்கு இரண்டு மடங்குக்கு மேலாகப் பணம் வழங்கப்படுகிறது. இதனால் யாருக்கு லாபம்? குறைந்தபட்சத் தேவைகட்கும் மேலாக, சொகுசுக்காக மின்சாரத்தைப் பாவிக்கிறவர்களிடம் அதிகளவு கட்டணம் அறவிட்டால் என்ன பிழை?

இந்த நாட்டின் உணவையும் பிரதான ஏற்றுமதிகளையும் வழங்கும் விவசாயிகள், மீனவர்கள், தோட்டத் தொழிலாளர் போன்றவர்கட்கு மின்சாரத்தை வழங்கினால் அவர்களது உற்பத்தி வலிமை உயராதா? இது பற்றி யாரும் ஏன் சிந்திப்பதில்லை?

சீனப் பண்பாட்டுப் புரட்சியின் போது தோழர் மா ஓ மருத்துவத் துறையினரைப் பார்த்துக் கேட்ட கேள்வி நினைவுக்கு வருகிறது. சீனாவின் மருத்துவத் துறை நாட்டின் எந்தப் பகுதியினருக்குச் சேவையாற்றுகிறது? நகரங்களில் உள்ள சிறுபான்மைக்கா, கிராமங்களில் உள்ள பெரும்பான்மைக்கா? இக் கேள்வியின் விளைவாகச் சீன மருத்துவத்துறையில் ஒரு புரட்சிகரமான மாற்றம் நடந்தது.

நமது மின்விநியோகம் பற்றி இப்படி ஒரு கேள்வியை யார் எழுப்புவார்?

# யாழ் குடா நாடு வேண்டிநிற்பது!

இப்போது யாழ்ப்பாணம் அடிக்கடி வந்து செல்லும் அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கிச் செல்கிறார்கள். அங்கு சில கனவான்கள் வேண்டுகோளும் விடுகிறார்கள் சர்வதேச தரம் வாய்ந்த கிறிக்கட் மைதானம் உல்லாசப் பயணிகளுக்கான வசதிகள். அதில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களும் அடங்கும். உல்லாசப் பாடசாலைகள் உட்பட தனியார் உயர் கல்வி நிறுவனங்கள். இவை இப்போதைக்கு கண்டறியப்பட்ட அவசர அத்தியாவசிய தேவைகளாகும். அந்தோ! யாழ் குடா நாடு எங்கே இழுத்துச் செல்லப்பட உள்ளதோ தெரியவில்லை.

# தியாகராஜா மகேஸ்வரன் பற்றி ஆங்கில வார இதழில் விளாசப்பட்டுள்ளது

கடந்த 24-02-2002 ஞாயிறு 'சண்டே லீடர்' ஆங்கில வார இதழ் தியாகராஜா மகேஸ்வரன் பற்றி ஒரு பக்க கட்டுரை ஒன்றை அவரது படத்துடன் பிரசுரித்திருக்கிறது. இதனை பிரபல பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் எழுதியிருக்கிறார். அதன் தலைப்பு 'மண்ணெண்ணை' மகேஸ்வரன் எனப் போடப்பட்டுள்ளது. அக் கட்டுரை "யூபி", "மண்ணெண்ணை" "உருளைக்கிழங்கு' போன்ற அடைமொழிப் பெயர்கள் வந்ததற்கான காரணங்கள் பற்றியும் ஏனைய வர்த்தக வியாபார பின்னணி முன்னணி பற்றியும் விலாவாரியாக எழுதப்பட்டுள்ளது. இத்தகையவர் இப்போதைய அரசாங்கத்தில் இந்து கலாச்சார அமைச்சராக இருந்து வருகிறார் என்றும் கூட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற அரசியலுக்கு இவைதான் அடிப்படைகள்.

# அமைச்சர் ஆறுமுகம்

## அரங்கேற்றிய ராஜிநாமாக் காட்சி

கடந்த பெப்ரவரி 8ம் திகதி மாலையில் கொழும்பில் ஒரு நாடகக் காட்சி காட்டப்பட்டது. அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கமும் பதவிகளில் இருந்து ராஜினாமாச் செய்தார்கள். மாலையில் கொடுத்த ராஜினாமாவை இருவரும் மறுநாள் காலையில் வாபஸ் பெற்றுக் கொண்டனர். 14மணி நேரக் காட்சி தான். ஆனால் அது அவ்வளவாக எடுபடவில்லை. இந்தக் காட்சியில் நடிப்பதற்கு காரணம் என்ன? அப்படி ஒன்றும் மலையக மக்களுடைய பிரச்சினைகளோ அல்லது தோட்டத் தொழிலாளர்களின் விடயங்களோ அல்ல. உளுராட்சித் தேர்தலில் நுவரேலியாவில் இ.தொ.கா. கொடுத்த பட்டியலை ஐக்கிய தேசியக் கட்சி புறக்கணித்துக் கொண்டது மட்டுமே யாகும். வந்ததே ரோசமும் கோபமும். மாலையில் ராஜினாமா காலையில் வாபஸ். திரை மூடுகிறது. அடுத்த காட்சி இது போன்று இன்னும் நடிக்கப்படும். மலையக மக்கள் பார்வையாளர்களாகுவர்.

# வாழ்வியலும் அரசியலும்

யாழ் மாவட்ட மக்கள் போர் நிலையிலும் தினசரி எல்லோரும் பாவிக்கும் பல பொருட்களிற்குப் படாதபாடு படுகிறார்கள். சீனி, மண்ணெண்ணய், சோப் வகைகள், புலிகளின் கட்டுப்பாட்டில், கிளாலி ஊடாகப் பொருட்கள் வந்த காலத்திலும் பார்க்க விலையும் அதிகம் கிடைப்பதும் அரிது. பதுக்கல் சர்வசாதாரணம் தினக்கூலி பெறும் அன்றாடம் காச்சிகள் மட்டுமன்றி, மாதாந்த ஊதியமும், ஓய்வூதியம் பெறுபவர்கள் பாடும் பெரும் பாடாகிவிட்டது. சில்லறை வியாபாரிகளால் எதுவும் செய்ய இயலாத நிலை. பெரும்பாலான மொத்த வியாபாரிகளும் அவ்வாறே. விரல் விட்டு எண்ணக் கூடிய மொத்த வியாபாரிகள் ஈவிரக்கமின்றி, பொருட்களை பதுக்கி, தாம் நினைத்த நேரத்தில் அவற்றைச் சந்தையில் விட்டு, தாம் தீர்மானித்த விலைக்கே மக்கள் வாங்கும் நிலை. இதுபற்றி வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூச்சே விடுவதில்லை. அவர்கள் கொழும்பு விலையில் பொருட்களை வேண்டுபவர்களாயிற்றே. இருக்கும் புதிய வடபகுதி ஒரே மந்திரியாரும் கப்பலில் இறக்கும் தனி வியாபாரிகளிற்கே வழிகாட்டியாயும் ஆலோசகராகவும் செயல்படுகிறார். யாழ் அரச அதிபரோ தனக்கும் சம்மந்தமில்லை என்று நழுவுகிறார். நேரடியாகவே மகஜர் கொடுப்பவர்களிடம் தெரிவித்துள்ளார். அரச அதிபர் அந்தந்த காலத்து அமைச்சர்களுக்குத் துதி பாடுகிறார். தனது தலையாய கடமையை மறந்து அவரும் பிற்பகுதியில் poolற்கு போவதற்கு ஆயத்தம் செய்கிறார் போலும். சிலர் என்னடா என்றால் இது புலிகளின் வேலை என்று சொல்லி அவர்கள் மீது பழி சுமத்துகின்றனர். இன்னும் ஒருசாரார் வன்னியில் மலிந்து விட்டது யாழிலில் அதிகரித்துள்ளது என ஆதங்கப்படுகின்றனர். M.Pக்களை தமது சின்ன விரல் வல்லமையால் தேர்ந்தெடுத்த பல்கலைக் கழகம், தொழில்நுட்பக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவர்கள் எத்தனையோ நல்ல கைங்கரியங்களை கல்விச் செயற்பாட்டுக்கப்பால் செய்து கொண்டு இவ்விலையேற்றம் பற்றி பேசாமடந்தைகளாக வாழாவிருக்கின்றனர். இவர்கள் தாம் உழைத்துச் செலவு செய்யாததால் இவர்களின் பெற்றோர் தினசரி படும் விலை வேதனையை அறியாதவர்போல் காணப்படுகின்றனர். தேர்தலில் மக்களை வாக்களிக்க ஆலோசனை கூறிய ஆயர்கள் மக்கள் படும் துயர் கண்டும் காணதவர்போல் தூரவிலகி இருக்கின்றனர். பேச்சுவார்த்தை பாதை திறப்பு, யுத்த நிறுத்தம், சமாதானம் பற்றியே பேசிப் பேசி, எழுதி எழுதி காலம் கடந்து செல்கிறது. இப்பணி மறுக்கவியலாது. இவ்வாறே சமாதானம் பற்றிய செய்திகளை ஊடகங்கள் வெளிப்படுத்தியவண்ண முள்ளன. அதுவரை மக்களின் தினசரி சுமக்கவியலாத விலைப் பழுவை பார்த்துக் கொண்டு வாழாவிருப்பது மக்கள் மேல் பற்றுள்ள எவனும் ஏற்க இயலாது. பலர் இதைப்பற்றிப் பேசுகிறார்கள். ஜனநாயக வெளிப்பாடாக அண்மையில் இடம் பெற்ற ஹர்த்தாலில் பங்கு பற்றியோர், பேசுபவர்களிலும் மிக மிக குறைவாகவர்களே என்பது உண்மை. எவர் செய்தால் என்ன? மக்கள் நலன் கருதி, தேவையின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு செய்யப்பட்ட ஹர்த்தாலை இருட்டடிப்புச் செய்த ஊடகமும் யாழில் இருக்கிறது.

மக்களின் வாழ்வியலிற்கு அரசியலேயன்றி அரசியலிற்கு மக்களல்ல.

# வடக்கு கிழக்கு அபிவிருத்தி யார் கையில்?

நிரந்தர யுத்த நிறுத்தமும் கண்காணிப்புக் குழுவும் வந்து விட்டன. பேச்சுவார்த்தை முயற்சி ஒரு புறம் நடந்து வருகிறது. மறுபுறம் அபிவிருத்தி புனர்வாழ்வு என்று கூறப்படுகிறது. அமெரிக்கா முதல் யப்பான் வரையான தூதுவர்கள் அதிகாரிகள் வடக்கு கிழக்கிற்கு பயணம் மேற்கொண்டு முதலீட்டுக்கும் மோப்பம் பிடித்து வருகின்றனர். மேலும் அபிவிருத்தி புனர்வாழ்வுக்கு வெளிநாடுகள் அள்ளிக் கொடுக்கத் தயார் என அறிவித்தும் உள்ளன. இவை அனைத்தும் பல்லாயிரம் கோடிகளாக இருக்கப் போகிறது. ஆனால் இப் பணம் எவ்வாறு யாருக்கு ஊடாக எவரெவர் என்றே அஞ்சப் படுகிறது.

முன்னைய அபிவிருத்தியும் புனர்வாழ்வும் யுத்த சூழலில் முன்னெடுக்கப்பட்டன. அதனால் மக்களுக்கு அர்ப்பமானவையே கிடைத்தன. அத்துடன் அரசியல் இருப்புக்கும் செல்வாக்கிற்குமே அள்ளி இறைக்கப்பட்டது. ஆனால் இப்போது சமாதான சூழல் நிலவுகிறது. அதனால் அபிவிருத்தியும் புனர்வாழ்வும் உரிய இடங்களுக்கும் மக்களுக்கும் சென்றடைய வேண்டும். மக்கள் நொந்து கெட்டு அழிந்த கோலத்துடனேயே வாழ்ந்து வருகிறார்கள். அதனால் அவர்களின் எதிர்பபார்ப்புகள் பெரிய அளவில் இருக்கின்றன. அமைச்சர் சிங்களவராக இருப்பினும் அதற்கு கீழேயும் அக்கத்துணை பக்கத்துணை நிற்பவர்கள் நமது தமிழர்களாகவே உள்ளனர் என்பது தான் சிந்திக்க வேண்டியதாகும்.

கடந்த ஏழு ஆண்டுகளில் இடம் பெற்றவை போன்று புதிய ஆட்கள் மூலம் பழைய பல்லவிதானா? சிறிது பொருத்திருந்து பார்ப்போம்.

# வடக்கு கிழக்கில் வலம் வரும் மலையகத் தலைவர்கள்!

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் சமாதான சூழ்நிலையை சாதகமாக கொண்டு கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தார். தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர்களை சந்திப்பதில் ஆர்வம் கொண்டுள்ளார் அவர்கள் சில விடயங்களை விட்டுக் கொடுத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அரசியல் தீர்வை காண்பதற்கு உதவ வேண்டுமென்று த.வி.பு. இயக்கத் தலைவர்களை கேட்டுக் கொண்டார். அவர் வடக்கிலும் பல இடங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள த.வி.பு. இயக்கத் தலைவர் களையும் சந்திக்க இருப்பதாக தெரிகிறது. தலைமன்னாருக்கு விஜயம் செய்து இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கு மிடையேயான கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இடையூறாக இருக்கக் கூடாது என்று அவ்வியக்கத் தலைவர்களை ஆறுமுகம் கேட்டுக்கொள்ளவிருப்பதாகவும் தெரிகிறது. எல்லாம் காரண காரியத் தோடுதானே நடந்தேற வேண்டும். அவரவர் யார் யாருக்கு சேவகம் செய்கிறார்கள் என்பதை அவர்களின் நடவடிக்கைகள் உணர்த்தும்.

ஆறுமுகம் ஐ.தே.மு. யின் அமைச்சர். அமைச்சர்கள் அவரவர்களுக்கு ஏற்றவகையில் வி.பு.இயக்கத்துடன் தொடர்புகளை வைத்து சமாதான நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ கேட்டுக் கொண்டிருப்பதாக தெரிகிறது வி.பு. இயக்கத்தினுடனான தொடர்புகளை வைத்துக் கொள்ளப் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொண்டு அவரவருக்கு ஏற்றவகையில் நடந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர். ஆறுமுகம் தேசியத் தலைவராக காட்டிக்கொள்வதற்கான சில நடவடிக் கைகளையும் எடுக்கிறார். த.வி.பு. இயக்கத்துடனான தொடர்புகளை ஏற்படுத்தி சமாதான நடவடிக்கை களுக்கு பங்களிப்பு செய்வதாக அரசாங்க செலவில் பயணங்கள் தொடர்கின்றன.

அவரது வீடமைப்பு அமைச்சுக்கு ஊடாக வடக்கு கிழக்கில் வீடமைப்பு திட்டங்களை மேற்கொள்ளப்போவதாக அவர் கூறுகிறார். ஆறுமுகத்தின் பாட்டனார் சௌமிய மூர்த்தி தொண்டமானும் பின்பு ஆறுமுகமும் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்களில் அமைச்சர் களாக இருந்து 'மலையகத் தமிழ் மக்களுக்கு' 'எல்லாவற்றையும் பெற்றுக் கொடுத்து விட்டனர்.

தற்போது ஆறுமுகம் அமைச்சராக இருந்து கொண்டு வடக்கு. கிழக்கில் "சமாதானத்தை நிலைநாட்ட" பங்களிப்பு செய்யப் போகிறார். அரை அடிமை நிலையில் வைக்கப்பட்டுள்ள மலையகத் தமிழ் மக்களுக்குப் பாரதுரமான பிரச்சினைகள் எதுவும் இல்லை என்று கூறிவிட்டு தற்போது வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்த தொடங்கிவிட்டார். அதன் மூலம் தேசியத் தலைவராக மிளிர்வதற்கான ஆசை அவருக்கு வந்துவிட்டது.

இவர் ஒருபுறமிருக்க மற்றொரு மலையகத் தலைவராக சொல்லப்படுகின்ற ம.ம.முன்னணி தலைவரும் ஐ.தே.மு. அரசாங்கத்தின் ஒரு அமைச்சருமான பெ. சந்திரசேகரம் வடக்கு கிழக்கிற்கு போய்வருகிறார். அவரின் அமைச்சினூடாக வடக்கு கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்ளப்போவதாக அவரால் கூறமுடியாது. அதனாலோ என்னவோ அவர் வேறு விதமாக வடக்கு கிழக்கில் தோன்றுகிறார். பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகளில் பங்கெடுக்கிறார். அவற்றில் பிரதான பேச்சாளராகவும் தோன்றுகிறார்.

அவரும் தேசிய தலைவராவதற்குரிய பாதையில் பயணம் செய்யத் தொடங்கி விட்டார். முழு நாட்டிற்குமான தலைமை தேசியதலைமை என்பவை எல்லாம் நம்பிக்கைக்குரியனவல்ல என்று கூறிவந்தார் என்பது நினைவு படுத்த வேண்டியதாகும். மலையகத் தலைவராகி பின்பு பிரதியமைச்சராகி, அமைச்சரவை சாராத அமைச்சராகி, தற்போது அமைச்சரவை அமைச்சராகி இப்போது வடக்கு கிழக்கு மக்களுக்கும் தலைவராகிறார். நல்லதொரு வளர்ச்சிதான்.

மலையகத்தமிழ், மக்களுக்கு தனியான மாகாணசபை வேண்டும் என்று அவர் முன்வைத்த கோஷமெல்லாம் பொய்யாய் பழைய கதையாகி வீடுகள் கட்டிக் கொடுத்தால் போதுமென்றாகி

**- வசந்தன் -**

தற்போது வடக்கு கிழக்கில் சமாதானம் ஏற்பட்டால் போதுமென்றாகி விட்டது. ஆறுமுகம் அமைச்சராகி கலந்து கொள்கிறார். சந்திரசேகரமோ மக்களில் ஒருவனாக பொங்கும் தமிழ் எழுச்சியில் பங்கெடுக்கிறார்.

ஆனால் இவர்கள் இருவரும் யாருடைய சார்பில், யாருக்காக கலந்து கொள்கிறார்கள். தமிழ் மக்களின் சார்பாக அரசாங்கத்தினுள் இருப்பார். அரசாங்கத்தின் சார்பாக தமிழ் மக்களின் மத்தியில் இருப்பார்களா? தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டும் தீர்வுடன் கூடிய சமாதானத்தை நிலைநாட்டப் பங்களிப்பை செய்வார்களாயின் தமிழ் மக்களின் சார்பில் அரசாங்கத்தினுள் இருப்பதாக கொள்ளலாம். அரசாங்கத்தினுள் சமாதான நிகழ்ச்சி நிரலை தமிழ்மக்களின் மீது திணிப்பவர்களாக இருப்பார்களாயின் அரசாங்கத்தின் சார்பாக தமிழ் மக்களின் மத்தியில் இருப்பார்கள்.

தேசிய தலைவர் என்ற தோற்றத்தை வளர்ப்பதற்கான நோக்கம் இருப்பினும் அது தமிழ் மக்களுக்கோ, மலையகத் தமிழ் மக்களுக்கோ சார்பானதல்ல, இலங்கையின் பெருமுதலாளித்துவ வர்க்கத்தின் பேரினவாதத்தின் தேவையுடன் சமரசம் செய்யும் பெருமுதலாளித்துவப் பிரதிநிதியாக பழைய தொண்டமானைப் போன்று ஆறுமுகம் இருந்து வருகிறார். மலையக சிறுமுதலாளித்துவ வர்க்க தேவைகளினூடாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட சந்திரசேகரம் தொடர்ந்து அவ்வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்ய முடியாதவராக இருக்கிறார். அவர் பெருமுதலாளித்துவ வர்க்கத்துடன் இணைந்து கொள்ளாவிட்டால் அவரின் இருப்பு கேள்விக் குறியாகிவிடும். எனவே பெருமுதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்து கொண்டு அதன் பிரதிநிதியாக இருப்பதையே தேர்வாக கொண்டு செயற்பட்டு வருகிறார்.

அதனால் ஆறுமுகமும், சந்திரசேகரனும் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை கவனிக்காதவர்களாக, வடக்கு கிழக்கு தீர்வில் மேலோட்டமாக, அக்கறை கொண்டவர்கள் போன்று காட்டிக் கொள்கின்றனர்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பமாக இச்சந்தர்ப்பம் கொள்ளப்படுமானால் வடக்கு கிழக்கில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும். அதே போன்று மலையகத்தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, சமத்துவம் என்பனவற்றை உறுதிசெய்யும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்த அடிப்படையிலேயே மலையகத்திலிருந்தும் மலையகத்தினை நோக்கியும் அரசியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விலிருந்து மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை புறந்தள்ளி வைக்கப்பட முடியாது. தமிழ் மொழியை பேசுகின்ற இன்னொரு தேசிய இனமான அவர்களின் சுயநிர்ணய உரிமை சுயாட்சி சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும்.

அவ்வாறான அரசியல் தீர்வை உறுதிசெய்ய வேண்டிய வழிவகையில் இயல்பு நிலையை ஏற்படுவதற்கான நடவடிக்கைகள் மலையகத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். மலையகத்திலிருந்து அவசரகாலச்சட்டத்தின் கீழும், பயங்கரவாத தடை சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விடுதலை அவர்களின் புனர்வாழ்வு போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தற்போது சட்டத்தில் மட்டும் இருக்கும் பிரஜாஉரிமை, தமிழ்மொழி உரிமை என்பன நடைமுறையில் உறுதிசெய்யப் படுவதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றைப்பற்றி ஆறுமுகமோ சந்திரசேகரனோ பேசுவதாக இல்லை. கோரிக்கை முன்வைப்பதாகவும் இல்லை.

அப்படிப்பட்டவர்கள் பொங்கு தமிழ் நிகழ்ச்சியிலும் வடக்கு கிழக்குப் பயணங்களிலும் உணர்ச்சி காட்டிப் பேசுவது போன்று பாசாங்கு செய்கிறார்கள். அவர்களது அரசியல் பிழைப்பு நடாத்த இப்போதைக்கு வேறு வழி இல்லைத் தானே.

● ● ● ● ● ● ● ● ● ● ●

# முஸ்லீம் தேசிய இனமும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய உரிமைகளும்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் இன்றைய நிலை உலகறிந்ததேயாகும். இப்பிரச்சினையின் தீர்விலே முஸ்லிம் தேசிய இனத்தின் தீர்வும் உள்ளடக்கப்பட்டிருக்கும் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். அது மட்டுமன்றி மலையக மக்கள் ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ள இன்றைய சூழலில் அவர்களுடைய தீர்வும் கூட தேசிய இனப்பிரச்சினையோடு இணைந்த ஒன்றாக காணப்படுகின்றது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் நாடு பூராவும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். வடக்கில் குறிப்பான பிரதேசங்களிலும் கிழக்கில் செறிவாகவும் வாழ்ந்து வருகின்றனர். வடக்கு கிழக்கை முஸ்லிம் மக்கள் பாரம்பரிய வாழ்விடமாகக் கொண்டு நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். எனவே வடக்கு கிழக்கை மையமாக வைத்து தேசிய இனப்பிரச்சினைக்கான சமாதான முன்முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது முஸ்லிம் மக்களின் அடிப்படை வாழ்வுரிமைக்கும் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைக்கும் தீர்வு கண்டே ஆகவேண்டும்.

முஸ்லிம் மக்களின் மதம் கலாச்சாரம் தனித்துவம் கொண்டதாக உள்ள அதேவேளை அவர்களது வாழ்விடங்களும் மொழியும் தமிழ் மக்களுடன் இணைந்த ஒன்றாகவே இருந்து வருகின்றன. வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பூமி என்று கூறும்போது அதே பூமி முஸ்லிம்களின் தாயகப் பூமியாகவும் இருந்து வருவதை மறுத்து நிராகரிக்க முடியாது.

வடக்கு கிழக்கில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் முஸ்லிம் மக்கள் பேரினவாதத்தின் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகின்றனர். இவர்களை பொருளாதார கல்வி வியாபார ரீதியாக வளரவிடக் கூடாது என்னும் பேரினவாதச் சிந்தனை வேகப்பட்டு வருகின்றது. அடிக்கடி நிகழ்ந்து வரும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவன்முறைகள் இதனை எடுத்துக்காட்டுகின்றன. இவை எதிர் காலத்தில் மேலும் விரிடையக் கூடிய நிலைமைகளே காணப்படு கின்றன.

முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கின்ற போதிலும் அவர்களின் இருப்புக்கும் எதிர்காலத்திற்கும் உத்தரவாதம் அளிக்கக்கூடிய தீர்வுகளையே விரும்புகின்றனர். குறிப்பாக வடக்கு கிழக்கில் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சிக்கலானவைகளும் கடுமையானவைகளுமாகும்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்–முஸ்லிம் மக்களிடையே நிரந்தரப் பகையையும் பிளவையும் வைத்திருப்பதன் மூலம் பேரினவாத சக்திகள் லாபமடைய முனைகின்றன. அதற்கு உதவிக் கொள்வது போன்று தமிழ்த் தேசியவாத சக்திகள் முஸ்லிம் மக்களை விரோதத்துடன் பார்த்து நிற்கும் போக்கு தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது. இதனால் காலத்திற்குக் காலம் தமிழ் முஸ்லிம் மோதல்கள் இடம் பெற்ற சந்தர்ப்பங்கள் பல உண்டு. அண்மைக் காலங்களில் கூட இம் முரண்பாட்டு முறுகல் நிலை வெளிப்பாடடைந்தமையைக் காணமுடிந்துள்ளது. 1990ம் ஆண்டில் வடக்கில் இருந்து முற்றாகவே முஸ்லிம் மக்கள் வெளியேற்றப் பட்டமை மிக மோசமான நடவடிக்கையாகும். இன்றும் கூட அவர்கள் வடக்கிற்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையில் அகதிகளாக அவல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்.

கிழக்கிலே முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் தமிழர்களோடும் சில பகுதிகளில் சிங்களவர்களோடும் சேர்ந்தே வாழ்ந்து வருகின்றனர். அங்கே விவசாயம் பிரதானமானதாக இருப்பதால் நிலம் நீர் பயிர்ச் செய்கை என்பனவற்றில் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றன்.

அங்கே நிலம், நீர், நிர்வாகம் என்பனவற்றை சிங்கள மயமாக்கும் பேரினவாத செயற்பாடுகள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலும்

## ஆளும் பேரினவாதத்தால் ஒடுக்கப்படுவதை உணர்ந்து கொண்டாலே பிரச்சினைகளின் தீர்வுக்குரிய அடிப்படைகளைக் காண இயலும்

அபாயமுமாக இருந்து வருகின்றது. அதேவேளை ஒரே முகமாக நின்று செயல்படவேண்டிய தமிழர்களும் முஸ்லீம்களும் தமக்குள் ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கின்றனர். ஒருவரது கோரிக்கையை மற்றவர் நிராகரித்து நிற்கும் போக்கே அங்கு காணப்படுகின்றது.

முஸ்லிம் தலைமைத்துவங்கள் தமது அரசியல் அறுவடைக்கான அளவிலேயே செயல்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாகப் பாராளுமன்ற அரசியலின் தேவையையொட்டியே தமது நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. இவர்கள் இரண்டு பேரினவாதக் கட்சிகளுடன் உறவு பூண்டு அரசாங்கங்களில் பங்கு கொண்டு அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் உயர் பதவிகளில் அமருவதன் மூலம் முஸ்லிம் மக்களுக்கு விமோசனம் பெற்றுத் தருவதாகக் கூறியே அரசியல் செய்கின்றனர்.

இத்தகைய தலைமைத்துவங்கள் நடாத்திவரும் அரசியலால் முஸ்லீம்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளைக்குத் தீர்வு தேடமுடியாது. மத அடிப்படையில் முஸ்லீம்கள் ஒன்றாக அடையாளப்படுத்தப்படினும் வர்க்க ரீதியில் அவர்கள் மத்தியில் பாரிய ஏற்றத்தாழ்வுகளும் ஏழை பணக்காரன் என்னும் வேறுபாடும் இருந்து வரவே செய்கின்றது.

முஸ்லீம் மக்கள் எதிர் நோக்கும் அடிப்படைப் பிரச்சிகைகளின் தீர்வு நீண்ட காலத்திற்குரியதாகும். அது இலங்கை நாட்டின் சமூக மாற்றத்திற்கான போராட்டங்களுடனும் சமூக மாற்றத்தோடும் சம்மந்தப்பட்ட தாகும். இது நீண்டகால நோக்கோடும் போக்கோடும் சம்மந்தப்பட்டதாகும்.

ஆனால் முஸ்லீம் மக்கள் எதிர்நோக்கும் தேசிய இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு முன்னெடுக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையின் போது நியாயமான தீர்வு நிதானமாக முன்வைக்கப்படல் வேண்டும். இவ்விடயத்தில் தமிழ் முஸ்லிம் தரப்பினர் முரண்பாடற்ற நிலைக்கு வந்து புரிந்துணர்வோடும் விட்டுக் கொடுப்போடும் செயலாற்ற வேண்டும். இல்லாதுவிடின் பேரினவாத சக்திகளே நன்மையடைந்து கொள்வார்கள்.

தமிழர் தேசியவாத அரசியலில் மேட்டுக்குடி ஆதிக்க சக்திகள் எப்பொழுதும் முஸ்லீம் மக்களையும் அவர்களது பிரச்சினைகளையும் புறங்கையால் தட்டிவிட்டு அவர்களை இரண்டாம் தர நிலையிலேயே நோக்கி வந்துள்ளன. அதன் எதிர் விளைவுகளை கடந்த கால் நூற்றாண்டு கால அனுபவங்கள் நமக்குப் பல பாடங்களைத் தந்துள்ளன.

அதே வேளை முஸ்லீம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள அரசியல் தலைமைகளும் அவர்களது வர்க்க அடிப்படை காரணமாக பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளுடன் ஐக்கியமும் அரசாங்க பங்குபற்றுதலுடனும் செயல்பட்டு வந்துள்ளனர். அதனால் தமிழ் மக்களோடு சகோதரத்துவத்துடன் வாழ்ந்து கொள்ள வேண்டிய யதார்த்தை கவனத்திற்கொள்ளாது ஆட்சியில் உள்ள அரசாங்கங்களின் ஆசீர்வாதத்துடன் முஸ்லீம் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்து விடலாம் என நம்புகின்றனர். இது முற்றிலும் தவறான ஒரு நிலைப்பாடாகும். முஸ்லிம் தலைமைத்துவங்கள் தமது மக்கள் என்று கூறுவது யாரை? ஏகப்பெரும்பான்மையான சாதாரண வாழ்வு வாழும் முஸ்லீம் மக்களையா? அல்லது பெரும் வர்த்தக வியாபார மற்றும் உச்சநிலை வாழ்வு வாழும் முஸ்லிம்களையா? இது விடைகாணவேண்டிய கேள்வி யாகும்.

எனவே தமிழ்த் தேசிய இனமும் முஸ்லிம் தேசிய இனமும் ஒரே பேரினவாதத்தால் ஒடுக்கப்படுகின்றன என்பதை இன வர்க்க பிரதேச அடிப்படையில் உணர்ந்து ஐக்கியப்படும் போதே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் புரிந்துணர்வு ஏற்படமுடியும். தீர்வுகளும் நியாயமானவையாக அமையமுடியும்.

**- நமன் -**

புதிய பூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 மார்ச் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 45

எஸ். 47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11. இலங்கை. தொலைபேசி இல. : 435117, 335844

# பொதுசன ஐக்கிய முன்னணியும் குடும்ப ஆதிக்க அரசியலும்

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகின்றது. கடந்த ஏழு வருடகால ஆட்சியின் போது அது நடந்து கொண்ட ஆக்கபூர்மற்ற செயற்பாடுகளின் எதிர்விளைவு தான் இன்றைய நிலை. அதற்கு மக்கள் வழங்கிய பேராதரவும் தேர்தல் மூலமான ஆணையும் பொதுசன முன்னணித் தலைமையால் முற்றிலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது.

நாடும் மக்களும் எதிர் நோக்கிய இரண்டு பிரதான முனைகளில் பொதுசன முன்னணி பாரிய தவறை இழைத்து மக்களுக்கு துரோகம் செய்து கொண்டது. ஒன்று, யுத்தத்தை உச்ச நிலைக்கு கொண்டு வந்தது. இரண்டாவது, பொருளாதாரத் துறையில் உலகமயமாதலுக்கு முற்றிலும் சரணடைந்து கொண்டது. இவ்விரண்டிலும் ஜெனரல் அனுரத்த ரத்வத்தை, லக்ஷ்மன் கதிர்காமர், ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, ஜி.எல்.பீரிஸ், மங்கள சமரவீர மற்றும் ராணுவ-பொருளாதார நிபுணர்கள் என்போர் ஜனாதிபதியைச் சுற்றியிருந்து செயலாற்றிக் கொண்டனர்.

இன்று பொதுசன முன்னணி உள்ளார்ந்த நிலையில் பலவீனமடைந்து மெலிந்த குரலில் பேசிவருகிறது. பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியே தீர்மானம் செய்யும் ஆதிக்க கட்சியாக இருக்கிறது. அதன் தலைமை ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து வருகிறது. குடும்ப உறவு ஆதிக்கம் தான் அங்கே முதன்மை பெறுகிறது. அதன் காரணமாகவே அன்றைய பிரதமர் பதவி ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் சென்றடைந்தது. இப்போது தான் தோல்விக்கும் பலவித இழுபறிகளுக்கும் பின் தென்னிலங்கையைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதனைப் பொறுக்கமாட்டாத நிலையிலேயே அனுரா பண்டாரநாயக்கா அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பண்டாரநாயக்கா குடும்பமே தொடர்ந்து தலைமை தாங்க வேண்டும் எனக் கூறியிருந்தமை கவனத்திற்குரியதாகும். அத்துடன் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்தானே என்றும் மேலும் பத்தாண்டுகளுக்கு தானே அக்கட்சிக்கு தலைவராக இருக்க வேண்டும் என ஆதிக்கத் தொனியில் கூறி இருக்கிறார்.

இவற்றையெல்லாம் செவி மடுத்துக் கொண்டு தான் பொதுசன முன்னணியில் பாராளுமன்ற இடதுசாரிகள் என்போர் ஓரிரு பாராளுமன்றப் பதவிகளுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். சமசமாஜக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் சிறிது ரோசம் வந்தவர் போல் அண்மையில் பேசியதைக் கேட்க முடிந்தது. ஆனால் அங்கே ரோசமும் இல்லை பாடம் படித்ததும் கிடையாது. நியமன உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லை என்ற வயிற்றெரிச்சல் காரணமாகவே அவர் அதிருப்தி அறிக்கை விட்டிருக்கிறார்.

பொதுசன முன்னணியில் அங்கம் பெறும் கம்யூனிஸ்ட் கட்சியும் மக்கள் கட்சியும் பெரும்பாலும் கரைந்து முகவரி இழந்த நிலைதான். தாங்களும் கெட்டழிந்து மற்றவர்களையும் சீரழிய வைத்தது தான் இந்த இடதுசாரிக் கட்சிகள் மேற்கொண்ட பாராளுமன்றப் பாதையின் விளைவு.

பலவீனமடைந்து நிற்கும் பொதுசன முன்னணி மீண்டும் புத்துயிர் பெற்று அதிகாரத்திற்கு வருவதற்கு மூன்று வழிகளில் முன்னேறலாம் என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது.

ஜனாதிபதிப் பதவியானது நிறைவேற்று அதிகாரம் மிக்கதாக விளங்குவதால் அதனைப் பூரணமாகப் பயன்படுத்தி ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு நெருக்கடி கொடுத்து கவிழ்த்து விடவேண்டும் என்பது ஒரு வழியாகும்.

இரண்டாவது, தற்போதைய சமாதான முயற்சியை தீவிர இனவாதப் பிரச்சாரத்தால் முறியடித்து முற்றிலும் புலிகள் எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னெடுத்து மீண்டும் பதவிக்கு வந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை.

மூன்றாவது வழி சகல இடதுசாரி சக்திகளையும் ஒன்று சேர்த்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து பலமான யூஎன்.பி. எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுப்பதாகும். இது வழமையான வழிமுறைதான். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு இடதுசாரி சக்திகளை நாடி நிற்பதும், பதவிக்கு வந்த பின்பு, வலதுசாரி சக்திகளின் சொற்படி நடந்து மக்கள் விரோதத்தை சம்பாதித்துக் கொள்வதும் அதன் தொடரும் நிலைப்பாடாகவே இருந்து வந்துள்ளது.

இதற்கு ஒரு வாய்ப்பாக தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரான மகிந்த ராஜபக்ஷாவை வைத்து அவரது இடதுசாரி நட்பு சக்திகள் மூலம் அந்த வேலையை முன்னெடுக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன.

இலங்கையின் பாராளுமன்ற அரசியல் பரப்பில் நிலவுடமை - முதலாளித்துவ மேட்டுக்குடி ஆதிக்க சக்திகளே ஆதிக்கம் செலுத்தி வந்த நடைமுறையே தொடர்கிறது. இதனால் தான் ஐக்கிய தேசியக் கட்சியில் குடும்ப ஆதிக்க அடிப்படையில் ஐயா மார்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அம்மாமாரின் குடும்ப ஆதிக்க நிலையும் தொடர்கின்றது. ஆர். பிரேமதாசா மட்டுமே இத்தொடர் நிலையில் ஒரு சிறு இடைவெளியை எற்படுத்தியவர் ஆவார்.

ஆதலால் நாட்டிற்கும் மக்களுக்கும் தெளிவான வேலைத்திட்டமும், தூரநோக்குடைய அரசியல் தலைமைத்துவமும் வழங்க கூடிய ஒரு மாற்று சக்தி பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தேவைப்படுகின்றது. அதனை நிறைவு செய்யும் மார்க்கத்தில் நேர்மையான இடதுசாரி சக்திகள் தம்மைத் தயார் படுத்தி முன்செல்ல வேண்டும்.

~ ஆசிரியர் குழு ~

# ஏகாதிபத்தியத்தை புரிந்து கொள்ளாவிட்டால் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் புறக்குடத்து நீராகும்

தேசிய விடுதலை - சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை ஏகாதிபத்தியம் தனது நோக்கங்களுக்குப் பயன்படுத்தி அடிபணியச் செய்யும் அல்லாதுவிடில் அழித்தொழிக்க முற்படும். இதுவே வரலாறு.

சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் உலகமயமாக்கலுக்கு சாதகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது தேசிய அரசாங்கங்களை பலவீனப்படுத்தி கொள்வதற்காக ஏகாதிபத்தியங்களும், மேலாதிக்க சக்திகளும் அவற்றின் காலடிக்கு கொண்டு செல்லும் வகையில் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தைக் காட்டிச் செயற்படுகின்றன. அதேவேளை சுயநிர்ணய உரிமைப் போராட்டங் களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏகாதிபத்தியங்களும் மேலாதிக்க சக்திகளும் தேசிய அரசாங்கங்களுக்கு உதவுதையும் அவதானிக்க முடியும். ஒரு தேசிய இனத்தின் மீது தேசிய அரசாங்கங்கள் நடத்தும் இன ஒடுக்கு முறை யுத்தத்திற்கும் பங்களிப்பு செய்கின்றன.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் அமெரிக்காவும், இந்தியாவும் இராணுவரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் உதவி வருகின்றன. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் ஏகாதிபத்தியத்தின் யுத்தமாகவும் கொள்ளப்பட வேண்டும். அதனால் அவ்யுத்தத்திற்கு எதிரான சகலவித எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளாகின்றன.

பொருட்களை விற்பதற்கான சந்தைகளை தம்வசம் வைத்துக் கொள்வதற்காக உலகம் தழுவிய பொருளாதார, அரசியல் பண்பாட்டு நிகழ்ச்சி நிரல்களை பெருவல்லரசுகள் கொண்டுள்ளன. அதுவே உலகமயமாதல் என்று மிகவும் பரபரப்பாக பேசப்படுவ தாகும். இதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் கடந்த ஒரு தசாப்த காலமாக அதனது நிலையைப் பலப்படுத்தி வளர்த்துக் கொண்டுள்ளது.

உலகநாடுகளில் நடக்கின்ற பல்வேறு உரிமைப் போராட்டங்களைத் தோற்கடிப்பதும், பல உரிமைப் போராட்டங்களை சமரசம் செய்து தீர்த்து வைப்பதும், பல ஆயுதமுரண்பாடுகளை ஏற்படுத்துவதில் அவ்வப்போது கால, இட, சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றை தீர்மானிப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் முக்கிய இடத்தை எடுத்துக் கொண்டுள்ளது. குறித்த சில நாடுகளில் நிலவும் அமைதியான சூழ்நிலை ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு சாதகமாக இல்லாவிடின் அவற்றில் யுத்தம் திணிக்கப் படுகின்றன. அவற்றை திட்டமிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்து வருகிறது. சில நாடுகள் துண்டாடப் படுவதையும் ஊக்குவிக்கிறது. சில நாடுகளில் இடம்பெறும் உரிமைப் போராட்டங்கள் உலக மயமாதலுக்கு பாதகமாக இருப்பதால் அங்கெல்லாம் அப்போராட்டங்களை தோற்கடிக்க அமெரிக்கா நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்கெடுக்கிறது.

உலகமயமாதலுக்கு எதிராக இருக்கின்ற தேசிய அரசுகளை பலவீனப் படுத்தி அடிபணிய வைப்பதற்கு ஏகாதிபத்தியங்கள் ஆயுத முரண்பாடுகளை ஊக்குவிப்பதை பிரதனமான வழிமுறையாக கொள்கின்றன. இந்தவகையில் ஒரு குறித்த தேசியஅரச எல்லைக்குள் இனத்தேசியங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன. உள்நாட்டு சூழ்நிலையில் இனத்தேசிய வளர்க்கப் பட்டிருக்கின்ற போது அதனை கூர்மைப் படுத்தி வளர்ப்பதிலும் ஏகாதிபத்திய சக்திகள் கவனம் செலுத்து கின்றன.

காலனியாதிக்கம் தேசிய அரசுகளின் தோற்றத்துடன் நேரடியாக செயலிழந்தன. தற்போது அவை மறு காலனியாதிக்கமாக நிலை நாட்டப்படுகிறது. உலகமயமாக்கலினூடாகவே அவ்வாதிக்கம் மிகவும் இலகுவாக செயலாக்கப் படுகிறது. காலனியாதிக்கத்துக்கு எதிராகத் தோன்றிய தேசிய அரசுகள் அதே கட்டமைப்புடன் இருப்பதும் உலகமயமாக்கலுக்கு பாதகமானது. அதனால் அவ்வகையான தேசிய அரசுகளுக்கு இடைஞ்சல் கொடுக்கும் நடவடிக்கைகளையும் ஏகாதிபத்தியம் முன்னெடுத்து வருகிறது. அதனால் ஒரு காலத்தில் பாதகமென கருதப்பட்ட இனத்தேசியங்களும், பிரிவினைகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. அடிபணிந்து போகும் தேசிய அரச கூட்டமைப்புகள் இருந்தால் அங்கு நியாயமான போராட்டங்களும் பாதகமாக கொள்ளப் படுகின்றன.

**மதியுகன்**

இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் தேசிய விடுதலைப் போராட்டங்களோ தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களோ முன்னெடு க்கப்பட முடியாது. ஏகாதிபத்தியத்தின் இயல்பையும் அதன் நடைமுறை அனுபவங்களையும் கவனத்தில் கொள்ளாமல் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் ஒன்றில் அடிபணியச் செய்யப்படும் அல்லது அழித்தொழிக்கப் படும். இதுவே இன்றுவரையான வரலாறு ஆகும்.

காலனியாதிக்கத்திற்கு எதிராக அல்லது பதிலீடாக தேசிய அரசுகள் அமைந்த போது அங்கு காலனியத்துவத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய பெருமுதலாளி வர்க்கமோ தேசிய முதலாளித்துவ வர்க்கமோ தேசிய அரசுகளை மையபப்டுத்திக் கொண்டன. ஆனால் சமாகல உலகில் அவ்வர்க்கங்கள் குறிப்பாக தேசிய முதலாளித்துவ வர்க்கம் முற்று முழுதாக ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து போவனவாக இருக்கின்றன. அதனால் தேசிய விடுதலைப் போராட்டங்களிலும், சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களிலும் சிறுமுதலாளி வர்க்கத்தினரே முன்னணி பங்குவகிப்பவர்களாக இருக்கின்றனர். அவ்வர்க்கத்தினரின் ஊசலாட்டம் உறுதிப்பாடின்மை காரணமாக போராட்டங்களை முன்னெடுக்கும் போது ஏகாதிபத்தியத்திற்கும், மேலாதிக்கங்களுக்கும் எதிரான போராட்டம் பற்றிய தெளிவற்றவர்களாகவும் அல்லது குழப்பமடைந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டங்களை முன்னெடுக்கும் சிறுமுதலாளி வர்க்கத்தினர் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஏகாதிபத்தியத்தையும், மேலாதிக்க சக்திகளையும் பயன்படுத்தலாம் என நம்புகின்றனர். அந்த நம்பிக்கையின் காரணமாகப், போராட்டங்கள் பாரிய பின்னடைவுகளை சந்திப்பதுண்டு இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திலும் இவ்வாறான நிலைமையை பொருத்திப் பார்க்க முடியும்.

இத்தகைய சூழ்நிலைகளில் போராட்டத்தின் இலக்கும் தந்திரோபா யங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டும். பிரதனமாக ஏகாதிபத்தியத் துடன் சமரசம் செய்யும் பெருமுதலாளித் துவ, தேசியமுதலாளித்துவ சக்திக ளுடன் கைகோர்ப்பதைவிட்டு தொழி லாள, விவசாய வர்க்கங்களுடன் கைகோர்த்துக் கொள்வதே சிறந்த தெரிவாகும். தொழிலாள, விவசாய வர்க்கங்களை வெறுமனே பயன்படுத்துவது என்ற நிலையிலிருந்து அவர்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் அடிப்படை சக்திகளாகவோ பங்காளிகளாவோ மாற்றமடைய வேண்டும்.

சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் மிக அடிப்படையாக வரையறை செய்ய வேண்டிய விடயம் போராட்டத்தின் இலக்கு என்னவென்பதாகும். சுயநிர்ணய உரிமை என்பதை காலனித்துவத்துக்கு முந்திய நிலவுடமை ஆட்சிகளை மீட்டெடுப்பது என அர்த்தம் செய்யப்படுகிறது. அதனாலேயே தமிழர் போராட்டம் வேகமடைந்த வேளையில் 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள்வது' பற்றிய பழமைவாத எண்ணங்கள் பரப்பப்பட்டன. இத்தகைய சிந்தனைகளுக்கும் சுயநிர்ணய உரிமை என்பதன் அர்த்தத்திற்கும் சம்மந்தமே இல்லை.

சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையானது அதன் இயல்பான அர்த்தத்தில் ஒடுக்கு முறையில் இருந்து விடுபடுவதற்கான ஒரு ஜனநாயகக் கோரிக்கையாகும். அதனால் அது அடிப்படையிலேயே கொலனித்துவ, முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்டதாகவே வரலாற்றில் எழுந்தது.

கொலனித்துவ ஒடுக்கு முறை நுகத்தடியில் இருந்து நாடுகள் விடுதலை பெறுவதை சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை வலியுறுத்தியது. அதன் வளர்ச்சியாக நாடுகளுக்குள் தேசிய இனங்கள் தத்தமது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை வற்புறுத்தின. இது ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளாக வளர்ச்சி பெற்றன. அவை எக்காரணம் கொண்டும் ஏகாதிபத்தியங்களின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் ஒன்றாக இருக்க முடியாது என்பதை சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுக்கும் சக்திகள் புரிந்து கொண்டு செயல்படுவது அவசியம்.

எனவே இன்றைய புதிய உலகச் சூழலில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை உறுதியானதொன்றாக முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாகின்றன என்ற யதார்த்தத்தையே காணமுடிகின்றது.

## தமிழ்த் தேசியம் : நேற்று - இன்று - நாளை

இத் தலைப்பில் கடந்த 23.02.2002 அன்று கொழும்பில் ஒரு ஆய்வரங்கு நடைபெற்றது. கொழும்பு சமூக விஞ்ஞான கல்வி வட்டம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. சி. நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வரங்கில் தேசியமும் மாக்சிசமும் பற்றி பேராசிரியர் சி. சிவசேகரமும், தமிழ்த் தேசியத்தின் வரலாறும் வளர்ச்சியும் பற்றி சி.கா.செந்திவேலும், தமிழ்த் தேசியமும் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் பற்றி சோ. தேவராஜாவும் தமிழ்த் தேசியமும் ஏகாதிபத்தியமும் பற்றி இ. தம்பையாவும் ஆய்வுரை செய்தனர். ஆய்வுரை முடிவில் சபையோர் கலந்துறையாடல் இடம் பெற்றது. இதில் பயன் உள்ள கருத்துக்கள் பரிமாறப் பட்டன மேலும் மேற்படி ஆய்வுரைகளை விரிவான கட்டுரைகளாக்கி நூலாக வெளியிடுவது இன்றைய தேவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

# புலிகள் - அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு கண்ணோட்டம்



அ. பூபதி

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இப்போது நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் மூலம் யுத்த நிறுத்தம் காலவரையற்று நீடிப்பதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதற்கு விதிக்கப்பட்ட தடைகள், கட்டுப்பாடுகள் பெருமளவுக்கு அகற்றப்பட்டுள்ளது. கிளிநோச்சி வரையிலான ஏ9 நெடுஞ்சாலை போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டு மிகுதியான பாதை யாழ்ப்பாணம் வரை திறக்கப்படும் என இணங்கப்பட்டுள்ளது. கிழக்கிலும் மன்னார் யாழ்ப்பாணத்திலும் பல பாதைகள் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த குறுகிய காலத்தில் சமாதானத்திற்கான பயணத்தில் நம்பிக்கையூட்டுவதற்கு ஏற்ற பல அடையாள' நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை நிராகரிக்க முடியாது. இது பல நாட்கள் பட்டினியோடு இருந்தவர்களுக்கு பாற்கஞ்சி கிடைத்தது போன்ற ஒரு உணர்வு நிலைக்கு வடக்கு கிழக்கு மக்களை உள்ளாக்கி இருக்கிறது. தமிழ் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமின்றி தென்னிலங்கையின் சிங்கள மக்களுக்கும் யுத்த நிறுத்தம் பெரும் ஆறுதலை வழங்கியுள்ளது. குறிப்பாகப் படைகளில் இருப்போரின் வீடுகளுக்கு மரண அறிவித்தல்களும் அதன் பின் பிரேதப் பெட்டிகளும் வந்து சேராத நிலை தோன்றியிருக்கிறது.

அதேபோன்று யுத்தத்தின் மறைவிலிருந்து கொண்டு மக்களைப் பலவழிகளிலும் சுரண்டி கொள்ளையிட்டு வந்த வர்த்தக வியாபார முதலைகளுக்கு இவ் யுத்த நிறுத்தம் வேறுவேறு முறைகளை நாடவும் வைத்திருக்கிறது. இருப்பினும் யுத்த நிறுத்தம் ஏற்பட்ட வேளையிலும் கூட





பொருட்களின் விலைகள் பெருமளவுக்கு குறைந்து கொண்டன என்றும் கூறமுடியாது. ஏறிய விலைகள் ஏறிய நிலையில்தான் இருந்தும் வருகின்றன. பொருட்களின் விலையேற்றம் தனியே யுத்தத்துடன் மட்டும் சம்மந்தமுடைய ஒன்றல்ல. அது நாட்டின் தவறான பொருளாதாரத் திட்டங்களோடும் சம்மந்தப்பட்டதாகும்.

தற்போது நடைமுறைக்கு வந்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. உள்நாட்டின் பொருளாதார சமூக நெருக்கடிகளின் உச்ச நிலையும் சர்வதேசச் சூழலில் எழுந்த அழுத்தங்களும் இருதரப்பினருக்கும் ஒரு நிர்ப்பந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் ஐயமில்லை. அதனால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கடந்த கால நிலைமைகளில் வகித்து வந்த விடாக்கண்டன் கொடாக்கொண்டன் நிலைப்பாட்டில் இருந்து விடுபட்டு தத்தமக்குரிய தளங்களில் புதியவகைத் தெரிவுகளைச் செய்ய வேண்டியதாயிற்று. இதற்கான குணம்குறிகளை இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் அடையாளம் காண முடிந்தது.

தெற்கிலே ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கிய ஐக்கிய தேசிய முன்னணியும் அதன் ஊடாக முன்னெடுத்த தேர்தல் பிரசாரமும் சமாதானத்திற்கான அழுத்தத்தை வலியுறுத்தி நின்றது. பொதுசன முன்னணி 'கெடுகுடி சொற்கேளாது' என்ற நிலையில் தீவிர இனவாதப் பிரசாரத்தை மேற்கொண்டது. அவர்களையும் மிஞ்சிய நிலையில் ஜே.வி.பி. பேரினவாதப் பிரசாரத்தை மேற்கொண்டது. இறுதியில் சமாதானப் பிரச்சாரம் செய்த ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்று பாராளுமன்ற அதிகாரத்தையும் பெற்றுக் கொண்டது.

அதேவேளை வடக்கு கிழக்கில் புலிகள் இயக்கம் கடந்த தேர்தலில் மறைமுகமாக தமிழர் கூட்டமைப்பை வெற்றியடையச் செய்தது. அது மட்டுமன்றி கொள்கை வேலைத் திட்டம் எதுவுமின்றி எதிரும் புதிருமாக இருந்த தமிழ்க் கட்சிகள் நான்கும் கூட்டமைப்பு ஆக்கப்பட்டன. அவர்கள் தேர்தலில் முன்வைத்த கோரிக்கைகள் கூட வெறுமனே வடக்கு கிழக்கின் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் இலக்கை மட்டுமே கொண்டிருந்தன. அதற்கப்பாலான விடயங்கள் அனைத்தையும் தீர்மானிப்பதை விடுதலைப் புலிகளிடமே விட்டு விட்டதையும் அண்மைக்காலத்தில் காண முடிகின்றது.

இவை ஒருபுறமிருக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சி அதிகார வரவோடு கடந்த ஆட்சியினால் முதலில் வரவேற்று பின்பு தூர வைக்கப்பட்ட நோர்வே நாட்டின் அனுசரணையானது முன்நிலைக்கு வரவழைக்கப்பட்டது. தீர்வுக்கு அனுசரணை வழங்கும் வகையில் விரைந்து செயல்பட்டு வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் இந்தியா சிங்கப்பூருக்கான பயணம் அடுத்து செல்லவுள்ள அமெரிக்கப் பயணம் போன்றவற்றுக்கும் இடம் பெற்று வரும் நகர்வுகள் நிகள்வுகளுக்கும் உள்ளார்ந்த தொடர்புகளும் ஆலோசனைகளும் இருப்பதையே அவை எடுத்துக்காட்டுகின்றன.

இவை மட்டுமன்றி அமெரிக்காவின் தூதுவர் வெளியிட்டு வரும் கருத்துக்களும் தொடரான வடக்கு கிழக்கிற்கான அவரது பயணங்கள் பரிசீலனைகள் அவதானிப்புகள் என்பனவும் ஆழமான பல்வேறு சிந்தனைகளுக்கு நம்மை இட்டுச் செல்கின்றன. இனப்பிரச்சினைக்கான யுத்தம் தொடங்கிய காலம் முதல் அண்மைக் காலம் வரை யுத்ததற்திற்கு சகல வழ்களாலும் உதவேகம் அளித்து வந்த அந்நிய சக்திகள் இன்று சமாதானக் கொடி பிடித்து சமாதானத் தேவதையாகி நின்று அருள்பாலிப்பது போன்று காட்சி தருவது ஆச்சரிய மூட்டுவதாகத் தோன்றலாம். ஆனால் அவர்களது சமாதான வேடத்தின் பின்னால் உள்ள பாரிய விடயங்கள் என்னவாக இருக்கும் என்பதே நமது அக்கறைக்குரியதாகும்.

இத்தகைய சிந்தனைகளின் அடிப்படையில் நின்று முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதானத்தை நோக்கிய நடவடிக்கைகளை அவற்றின் உள்ளார்ந்த காரண காரியத்தை மட்டும் வைத்துக் கொண்டு நிராகரிக்கவோ எதிர்க்கவோ முடியாது. மக்கள் சார்பு நிலை நிற்கும் எவரும் இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அதனைத் தொடந்து பேச்சுவார்த்தையை நோக்கி நகர்த்தப்படும் ஒவ்வொரு சாதகமான நகர்வுகளையும் ஆதரித்தல் வேண்டும்.

அதேவேளை ஒவ்வொரு அடியெடுத்து வைத்தலிலும் இருதரப்பும் மிகவும் அவதானத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் தூர நோக்கில் நடந்து கொள்ளல் வேண்டும். இவ்விடத்திலே நீண்டகாலப் பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்பதற்காக எப்படியாவது அல்லது யார் காலில் வீழ்ந்தாவது தீர்வு காணப்படுவது என்னும் அணுகுமுறை தீங்கான விளைவுகளையே ஏற்படுத்தக் கூடியதாகும். யார் குற்றினாலும் அரிசி யானால் போதும் என்பதாக இருக்கக் கூடாது. ஏனெனில் எவர் குற்றினாலும் என விட்டால் இறுதியில் அரிசி வேறு யாருக்கும் சென்றடைய உமியை மட்டும் நாம் சுமப்பது என்றாகிவிடும். உமியை விட்டு எமக்கு முழு நிறைவான அரிசியே வேண்டும் என்ற நிலையிலேயே பேச்சுவார்த்தையானது தீர்வு நோக்கிச் செல்ல வேண்டும்.

இவை ஒரு புறமிருக்க மறுபுறத்தில் பேரினவாத சக்திகள் தமது வழமையான சமாதான முயற்சிகளை எதிர்க்கும் வேலையில் மும்முரமாகி நிற்கின்றன. இதில் சிகப்புபோர்வை அணிந்துள்ள ஜே.வி.பி முன்னணியில் நின்று வருகின்றது. யுத்தம் தொடரப்பட வேண்டும்., புலிகள் அழிக்கப்படல் வேண்டும், ஒற்றையாட்சி நீடிக்க வேண்டும், அதிகாரப் பரவலாக்கலோ அன்றி வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சியோ வழங்கப்படக் கூடாது என்பதில் ஜே.வி.பி. சிஹல உறுமய வையும் மிஞ்சிய நிலையில் நச்சுத்தனப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றது.

அதே நேரம் பொதுசன முன்னணி பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையில் சமாதானத்திற்கு தாங்கள் எதிர்ப்பு இல்லை என்றும் ஆதரவு உண்டு என்றும் கூறிவருகின்றது. அதே வேளை ஜனாதிபதி சமாதான ஆதரவு பற்றிப் பேசிக் கொண்டே அதிருப்தியான, நம்பிக்கையீனமான கருத்துக் களை ஜனாதிபதி செயலகம் மூலம் வெளியிட்டு பரப்ப முற்பட்டுள்ளார். இது எதிர்த் திசையில் நகர்ந்து செல்வதற் கான அறிகுறியையும் உரிய தருணம் வரும்வரை "உறுமீன் வரும் வரை" காத்து நின்று அதற்கான எல்லைகளுக்குள் செயல்படுவதையும் கண்டு கொள்ள முடிகிறது.

எல்லாவற்றையும் நோக்கும் போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் தலைமை வழிகாட்டும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது கடந்த காலப் பாவங்களுக்கும் புனித கங்கையில் நீராடி பாவ விமோசனம் பெற்றுக் கொண்ட கட்சியும் அல்ல. அக்கட்சியில் தமிழ் முஸ்லிம் மலையக பா.உ.கள் இருப்பதால் அது தனது பேரினவாதக் கருத்தியலை அன்றும் விட்டதில்லை இன்றும் இழந்து கொண்டதுமில்லை.

அவ்வாறே கடந்த இரண்டு தசாப்த காலத்தின் தேசியஇன விடுதலைக்கான பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதானவொரு போராட்ட சக்தியாகவும் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகளாகவும் இருந்து வந்துள்ளனர். அவர்களது போராட்ட வலிமையும் விட்டுக் கொடுக்காத உறுதிமிக்க நிலைப்பாடும் மெச்சத்தக்கதாகும். அதேவேளை பாதகமான கூறுகளையும் சில தவறான செயற்பாடுகளையும் விடுதலைப் புலிகள் தம்மகத்தே கொண்டுள்ளனர் என்பதையும் மறைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களது அண்மைக்காலப் போக்குகளில் கடந்த காலத்தின் பட்டறிவுகள் மூலமாகக் கிடைத்த பாடங்கள் பிரதிபலிக்கவே செய்கின்றன. அத்துடன் கடந்த வருடம் செப்டம்பர் 11ம் திகதிய அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதலுக்குப் பின் அமெரிக்கா வரிந்து கட்டிக்கொண்டு 'பயங்கரவாத எதிர்ப்புப்போரில்' இறங்கியிருப்பதும் புலிகள் இயக்கத்திற்கு தமது தந்திரோபாயங்களை மாற்றிக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்துள்ளது. அதன் விளைவாகவே தற்போதைய அவர்களது செயற்பாடுகளில் நெகிழ்வும் மாற்றமும் தென்படுகின்றன. இந்தப் போக்கு சரியான திசையில் நீடித்துச் செல்லுமானால் முழுத் தமிழ்த் தேசிய இனவிடுதலைக்கும் அவர்களது பங்களிப்பின் பெறுமதி அதிக விலைகூடியதாக அமையும். அதே வேளை ஒரு பகுதி மக்களிடம் விடுதலைப் புலிகள் பற்றிய அதிருப்தி சந்தேகம் போன்றன தொடர்கின்றன. காரணம் கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களின் ஊடாகவே மக்கள் புலிகள் இயக்கத்தை நோக்குவதாகவும் உள்ளது.

இத்தகைய பன்முக நோக்குகளும் போக்குகளும் காணப்படும் சூழலிலேயே தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் பேச்சுவார்த்தை ஊடான அரசியல் தீர்வையும் சமாதானத்தையும் நோக்கிய புதிய பயணத்திற்குள் காலடி எடுத்து வைத்துள்ளது. இதில் இருதரப்பினருக்கும் பாரிய பொறுப்பும் வரலாற்றுக் கடமையும் காத்திருக்கிறது. கடந்த காலங்கள் போன்று தத்தமது உள்ளார்ந்த இலக்குகளை மட்டும் குறிவைத்து சமாதானப்பாதையில் நடந்து செல்ல முற்பட்டால் விபரீதங்களே மீண்டும் வந்து சேர்ந்து கொள்ளும்.

அடுத்த மூன்று மாதங்களில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் எனப் பிரதமர் செய்தியாளர்கள் மத்தியில் கூறி இருக்கிறார். அதேவேளை தம்மீதான தடை அகற்றப்படாமல் பேச்சுவார்த்தையில் பங்கு பெறமாட்டோம் எனப் புலிகள் கூறி வருகின்றனர். அதேபோன்று எங்கே பேச்சு வார்த்தையை நடாத்துவது என்பதிலும் சிக்கல் தோன்றியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக தீர்வுத்திட்டம் எத்தகையது என்பதும் முக்கியமானதாகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கே ஜே.வி.பி. சிஹல உறுமய போன்ற பேரினவாதிகள் போர்க்கொடி தூக்கி நிற்கிறார்கள் என்றால் தீர்வுத் திட்டத்திற்கு எப்படி நடந்து கொள்வார்கள். ஆனால் கடந்த காலங்களைப் போன்று ஆளும் தரப்பினர் எதிர்ப்புகளைக் கண்டு பின்வாங்காது முன்னேறிச் செல்வதிலேயே யாவும் தங்கியுள்ளது. அந்தத் துணிவு பிரதமருக்கும் ஐ.தே.மு. அரசாங்கத்திற்கும் இருக்கிறதா என்பது பரீட்சிக்கப்படவே உள்ளது.

எனவே இவை அனைத்திற்குமான காலப் பகுதி நீண்டதாகவே இருக்கப் போகின்றது. அவ்வாறெனில் புரிந்துணர்வு ஒப்பந்தம் உரிய வழிகளில் மீறப்படாது இரு தரப்பாலும் முன்னெடுப்படல் வேண்டும். அதற்கான உத்திரவாதத்தை இருதரப்பினரிடம் இருந்தும் பரஸ்பர நம்பிக்கை புரிந்துணர்வு மக்கள் நலன் நாட்டு நலன் என்பனவற்றின் அடிப்படையிலேயே பெற்றுக்கொள்ள முடியும். இதனை எந்தளவுக்கு இரு தரப்பினரும் பாதுகாத்து சமாதானம் வரை நீடித்து நிலைக்க வைப்பார்கள். பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

• • • •

# யாருடைய நண்பர்கள்? யாருடைய கையாட்கள்?

நாலு கட்சி கூட்டணி நாலா திசைகளிலும் இழுத்துக்கொண்டு கிடக்கிறது. இவர்களுடைய அரசியல் சூதாட்டத்திற்கு யூஎன்.பி. வேதாளம் இனவாத முருக்க மரம் ஏறாமல் உள்ள வரை ஒரு பழுதும் இல்லை. விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களுக்காகப் பேசும் தகுதி உடையவர்கள் என்ற ஒரே கொள்கையை முன்வைத்துத் தேர்தலில் வென்ற இந்தத் தமிழ் இனத்தின் தன்மானத் தலைவர்களுக்கு அதைவிட வெறெதையும் பேச அதிகாரம் இல்லை என்று நாம் நம்ப வேண்டுமா?

அதனாலே தான் தங்களுக்காகச் சென்ற தேர்தலில் வாக்களித்த யாழ்ப்பாணக் குடாநாட்டு மீனவர்கள் தமது மீன்பிடிக்கும் உரிமை கோரி ராணுவத்தினருடன் பேச முற்பட்ட போது எட்ட நின்று கொண்டார்கள்? அங்கு போய்ப்பேச வேண்டியதில்லை, கொழும்பில் தங்கள் குளுகுளு அறைகளில் இருந்தாவது ஒப்புக்கு ஒரு அறிக்கை விடக்கூடவா இவர்களால் இயலாமல் இருக்கிறது?

யூஎன்.பி. அமைச்சர் காமினி அத்துக்கோரள இறந்த போது அவருக்கு இரங்கலுரை வழங்க நான் முந்தி நீமுந்தி என்று போட்டியிட்டுக் கொண்டு ஒடுகிற தமிழ்த் தலைவர்மாருக்கு யாழ் குடாநாட்டு மக்கள் விலைவாசி ஏற்றத்தையும் பதுக்கலையும் கள்ளச் சந்தையையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய போது அதில் பங்குபற்றத்தான் மனம் வரவில்லை. இதில் சிவாஜிலிங்கம் எம்.பி.மட்டும் விதிவிலக்கு. ஏனையோர் அதற்கு ஆதரவாக ஒரு சொற் பேசவேனும் மனம் வந்ததா? எப்படி வரும்?

இவர்கள் விடுதலைப் புலிகளை நேசிப்பதால் விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்கள் சார்பாகப் பேச முடியும் என்ற முடிவுக்கு வரவில்லை. ஒரு புறம் விடுதலைப் புலிகளைப் பகைத்து அரசியல் நடத்த மட்டுமல்ல உயிர் பிழைத்து இருக்கக் கூட இயலாது என்று அவர்கள் மனதில் உள்ள பயம். மற்றது மக்களுக்கு வழங்குவதற்கு இவர்களிடம் ஒருவிதமான மாற்றுத் திட்டமும் இல்லை என்ற உண்மை.

எனவே, தேர்தலில் வெல்ல வேறுவழி இல்லை என்பதாலேயே இந்த நிலைப்பாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்கு வெளி நெருக்குவாரங்கள் இருந்ததும் உண்மை. திருகோணமலை பா.உ. சம்பந்தன், விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டதாலேயே நாலு கட்சிக் கூட்டணி இயலுமானது என்று சொன்னார். யாழ் மாவட்ட பா.உ. ஆனந்த சங்கரியோ அயற் தூதரகங்கள் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுதல் காரணம் என்கிறார். எது உண்மை? இரண்டுமே தான்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை, டக்ளஸ் தேவானந்தா போல தங்களுக்கு எதிரான ஒருவர் கையில் அதிகம் பாராளுமன்ற ஆசனங்கள் சேராமல் இருப்பது முக்கியம். 1994ல் விடுதலைப் புலிகளது பகிஸ்கரிப்பு நிர்ப்பந்தத்தால் டக்ளஸ் தேவானந்தா வடக்கில் ஒரு வலிய தளத்தைக் கட்டி எழுப்பியது ஒரு முக்கியமான பாடமாக இருந்தது. நாலு கட்சிகளும் நாலு திசையிலும் இழு படுவது டக்ளஸ் தேவானந்தா போன்ற அரசியல் சந்தர்ப்பவாதிக்கு மிக வாய்ப்பானது. அவரது இடத்தில் தங்களது அணையை மீறாத சந்தர்ப்ப வாதிகளை அவர்கள் விரும்பியதில் அதிசயமில்லை. அதேவேளை, நாலு கட்சிக் கூட்டணியின் கையாலாகாத் தனத்தையும் அவர்கள் அறிந்தே இருந்தார்கள். எனவே தான் டக்ளஸ் தேவானந்தாவின் குண்டர் படைக்கு ஈடு கொடுக்கக் கூடிய இன்னொரு குண்டர் படையின் அதிபதிக்கும் அவர்கள் ஆதரவு கொடுத்தார்கள். ஏனென்றால் பேரினவாதக் கட்சி ஒன்றுக்குச் சாதகமான குண்டர்கள் மீது அரச ராணுவம் குறிவைக்கத் தயங்குவது பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும். இது விடுதலைப் புலிகளின் கணக்கு நாலு கட்சிக் கூட்டணி ஏற்படுவதை விரும்பிய அயல்நாடுகள் எவை? நாலு கட்சிகளும் காவடி எடுக்கிற தூதரகங்களை வைத்துத் திட்டவட்டமாக எதையும் சொல்ல முடியாவிட்டாலும், உறுதியாக அமெரிக்கத் தூதரகத்தின் ஆசிகள் இருந்தது பற்றி மட்டும் சொல்ல முடியும்! அமெரிக்கா இப்போதைக்கு இலங்கையில் கொந்தளிப்பு தணிவதை விரும்புகிறது.

ஏனெனில், 'உலகப் பயங்கரவாதத்துக்கு" எதிரான அமெரிக்காவின் போர் அமெரிக்காவை மேலும் மேலும் தனிமைப்படுத்தி வருகிறது. எல்லா முனைகளிலும் போரிட அமெரிக்காவால் இயலாது. எனவே சில இடங்களில். போர் நிலவரம் தணிவது அவர்கட்கு வசதியானது. மறுபுறம் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் இல்லையா என்பது பற்றி அமெரிக்காவின் இரண்டக நிலைப்பாடு சிறிதும் மாறவில்லை. விடுதலைப் புலிகள் பலவீனப்படாமல் இருப்பது இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைக் கொண்டுவருவதற்கு எல்லாருக்குமே உதவியாக உள்ள ஒரு விடயம் தான். ஆகவே தான் விடுதலைப் புலிகள் "சர்வதேசப் பயங்கரவாதத்தின்" ஒரு பகுதியாகாமல் தப்ப முடிந்தது.

இந்தக் கணக்குக்களின் படி, யூஎன்.பி. – தமிழ் கட்சிகள் கூட்டணி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விருப்பமான ஒன்றாகியது. இதற்குப் பொதுசன முன்னணி அரசாங்கத்தின் அமெரிக்க சார்புக்கொள்கையின் குறைபாடு எதுவுமே காரண மில்லை. அந்த அடிமையை விட இந்த அடிமை இப்போதைக்கு வசதியானவர் என்பது மட்டுமே காரணம்.

பொதுசன முன்னணியும் முக்கியமாகச் சனாதிபதி சந்திரிகாவும் கடைப்பிடித்த கொள்கைகளும் போரின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியும் விடுதலைப் புலிகளுக்கு பொதுசன முன்னணியையும் சந்திரிகாவையும் கவிழ்ப்பதை ஒரு முக்கிய இலக்காக மாற்றி விட்டன. இதற்கான சூழ்நிலைகள் 1995 மூட்டிலேயே தோன்றி விட்டன.

இந்த விதமாக, இந்த மண்ணில் பேரினவாத ஒடுக்கு முறைக்கு மூலாதாரமாக நின்ற ஒரு பெருவல்லரசும் அந்த ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்கும் ஒரு போராட்டச் சக்தியின் தலைமையும் கையாலாகாத நாலு கட்சிகளை ஒன்று சேர்த்து இன்றைய பிரச்சினைக்கு காரணமான ஒரு கட்சியை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டுவந்து விட்டன.

தமிழ் மக்கள் ஏற்கனவே தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை உணரத் தொடங்கிவிட்டார்கள். என்றாலும், இன ஒற்றுமை, தமிழர் இல்லாவிட்டால் முஸ்லீம்களும் சிங்களவரும் இடத்தைப் பிடித்து விடுவார்கள் என்பது போலப் பல கதைகள் மூலம் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் தங்களைத் தக்க வைக்கும் முயற்சிகளில் நாலு கட்சிக் கூட்டணி இறங்குவதற்குத் தயங்காது.

என்றாலும் இந்த நாலு கட்சிகளும் யாருடைய நண்பர்கள், யாருடைய கையாட்கள் என்ற கேள்விகள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டன. வெளி வெளியாக விடுதலைப் புலிகள் என்ற கருத்துக்கு இடம் இருந்தாலும் அடி ஆழத்தில் உள்ள உண்மை வேறு.

இவர்கள் விடுதலைப் புலிகளின் பாராளுமன்ற பினாமிகள். ஆனாலும் உண்மையில் யூஎன்.பியிலேயே இவர்களது நட்பு உள்ளது. யூஎன்.பி அரசின் உண்மையான எசமானாகிய அமெரிக்காவே இவர்களது உண்மையான எசமானும் ஆகும்.

~ அசோகன் ~

# தமிழ் ஊடகங்கள் பற்றி (1)

## நல்லவற்றுக்கு குழிபறிக்கும் ஊடக நாட்டாண்மைக்காரர்

அரசாங்கங்கள் மாறினாலும் அரச ஒலி, ஒளி பரப்பு நிறுவனங்களில் தமிழ் நிகழ்ச்சிகளின் அவலம் சொல்லி மாளாது. இரண்டு விதங்களில் இந்தச் சீரழிவு நடைபெறுகின்றது. ஒரு பக்கம் அரசாங்கத்தின் அசட்டை அல்லது திட்டமிட்ட புறக்கணிப்பு இயங்குகின்றது. மறுபுறம் முழு ஒலி, ஒளி பரப்பு நிகழ்ச்சிகளையும் ஒரு சிலரது ஆதிக்கத்திற்குள்ளேயே வைத்துக் கொள்ளுகிற முயற்சிகள் வேலை செய்கின்றன.

எந்தத் திறமைசாலியும் வானொலியிலோ தொலைக்காட்சியிலோ பங்கு பற்ற வேண்டு மென்றால் இந்தச் சின்ன எசமான எசமானியர்களுடைய சின்னத்தனங்களுக்குக் கீழ்ப்படியாமல் இயலாது. இந்தப் பாரம்பரியம் பழைய ஒன்றுதான். ஒரு பக்கம் இந்து தமிழ்க் கலாச்சாரம், பாரம்பரியக் கலைகள் என்ற பேர்களில் பொருள் வசதி படைத்த சிலரும் பேரினவாத அரசியல் கட்சிகளுக்குக் காவடி தூக்கி முன்னுக்கு வந்த சிலரும் மற்றவர்கள் யாரும் முன்னுக்கு வராதபடி மிகவும் கவனமாகவே இருந்து வந்திருக்கிறார்கள். இது நல்ல இளம் கலைஞர்கள் பலரை இந்த நாடு இழக்கச் செய்திருக்கின்றது. இது ஒரு பெரிய நட்டமாகும்.

இன்னொரு பக்கம் புதுமையாகவும் சமூகப் பயனுள்ளதாகவும் செய்யப்படுகிற காரியங்களுக்குத் திட்டமிட்டு ஆப்பு வைக்கப்படுகின்றது. இதற்கு உதாரணங்கள் தருவதனால் அவை எண்ணி மாளாது. குறிப்பாக ஒன்றைச் சொல்வதானால், "வாரம் ஒரு வலம்" என்ற வானொலி நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். வாரம் தோறும் நடக்கும் பயனுள்ள நிகழ்ச்சிகளின் அறிவிப்பாகவும் படைப்பாளிகளுடனும் ரசிகர்களுடனும் விமர்சகர்களுடனும் சமூகத்துக்குப் பயனுள்ள கருத்துக்களைத் தரக்கூடிய பல வேறு வகையானவர்களுடனும் மக்கள் கருத்துக்களைப் பரிமாற ஒரு நல்ல வாய்ப்பாகவும் அது இருந்தது. அது மக்களிடையே செல்வாக்குப்பெற்ற காரணத்தால் அதற்குக் குழி பறிக்கப்பட்டதுடன் அதைத் தயாரித்து வழங்கியவர்களையும் ஓரங் கட்டுகிற முயற்சிகள் மேல் மட்டங்களிலிருந்து அடியாட்கள் உதவியோடு மேற்கொள்ளப்பட்டது பற்றிப் பலரும் அறிவார்கள். இதைவிட மோசமாகவும் நடந்திருக்கின்றது.

தமிழில் சமூகப் பயனுள்ள நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மிகவும் குறைவானது. அந்த நேரமும் கூட, குறைவாகவே பயனுள்ள முறையில் பாவிக்கப்படுகிறது. இங்கே அரசாங்கத்தின் அசமந்தமான போக்கைவிடக் கெடுதலாக உள்ளது ரூபவாஹினி, இலங்கை வானொலி நிறுவனங்களின் தமிழ் நாட்டாண்மை மாரின் அடாவடித்தனங்களே.

இலங்கை வானொலியை ஆளுங் கட்சியின் வெளிவெளியான பிரசாரக் கருவியாக பண்டாரநாயக்க பயன்படுத்தினார். 1956ம் ஆண்டு அவர் பதவிக்கு வந்த போது சகல பத்திரிகைகளும் யூஎன்.பி. பிரமுகர்களின் நேரடியான கட்டுப்பாட்டில் இருந்தன. அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டில் இருந்தன. அப்பத்திரிகைகளின் விஷமத்தனமான பிரசாரங்களை முறியடிக்க அவர் வானொலியைத் தனக்குச் சாதகமாகப் பாவித்தார். அதன் விளைவாக வானொலி படிப்படியாக அரசாங்கத்தின் கருவியாகியது. இதன் வளர்ச்சியையே நாம் இன்று அனுபவிக்கின்றோம்.

இலங்கை வானொலியின் எந்தச் செய்தியையும் இன்று யாரும் ஆளுங் கட்சியின் அறிவித்தல் என்றுதான் பார்க்கிறார்கள். அதை யாரும் உண்மை என்று நம்பத் தயங்குகிறார்கள். அந்தளவுக்கு அதன் நம்பகத் தன்மை குறைந்து விட்டது. அதை மீட்டெடுப்பது லேசில் நடக்குமா? நிச்சயம் நடக்காது.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியிலேதான் அரசாங்கம் தனியார் ஊடகங்களின் வருகைக்கு வழி செய்தது. யூஎன்.பி. அரசாங்கம் 1978இல் புகுத்திய தனியார் மயமாக்கல் கொள்கையின் தொடர்ச்சியாக இன்று தனியார் வானொலியும் தனியார் தொலைக்காட்சியும் வந்து வளர்ந்துவிட்டன. என்றாலும் இவை பெரும் முதலாளியக் கட்சியான யூஎன்.பிக்குச் சேவகம் செய்வதையே தங்களின் கொள்கையாக வைத்திருப்பதில் அதிசயம் இல்லை. இவைகளின் அரசியலைப் பற்றி இன்னொரு நேரம் எழுதுவோம்.

1983இனவாத வன்முறை வெடித்த போது அரசின் வானொலியும் தொலைக்காட்சியும் தமிழ் மக்களுக்கு விரோதமாகவும் மனதைப் புண்படுத்தும் முறையிலும் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பி வந்தது இன்றும் சிலருக்காவது நினைவில் இருக்கும். இவை தமிழில் வழங்கப்பட்ட போது அது மிகவும் வேதனையாகவே இருந்தது. பல தமிழர்கள் வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளைக் கேட்பதையே தவிர்க்கும் அளவுக்கு மோசமாக அரசாங்கத்தின் ஒலி, ஒளி பரப்பு நிறுவனங்கள் நடந்து கொண்டன.

இன்று வரை, அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசும் போது விடுதலைப் புலிகள் எல்.ரீ.ரீ.ஈ.என்று பேர் சொல்லி அழைக்கப்படுவதும், ஆக மிஞ்சினால் கிளர்ச்சிக்காரர்கள் என்று அழைக்கப்படுவதும் வழக்கமாக இருக்கின்றது. மறுபுறம், மோதல் வெடித்தவுடன் அவர்கள் பயங்கரவாதிகள் என்று மட்டுமே குறிக்கப்படுவதையும் நாம் கேட்கிறோம். இது ஒவ்வொரு அரசியல் எதிரி தொடர்பாகவும் அரசாங்கத் தகவல் நிறுவனங்கள் கடைப்பிடித்து வருகிற கொள்கை.

அரச நிறுவனங்களில் பொதுவாகவே ஆளுங்கட்சி அரசியல் ஆதிக்கம் பெரிதாகவே இருக்கின்றது. என்றாலும் தமிழில் அது மிகவும் கடுமையாகவே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் காரணமாகச் செய்தி அறிக்கைகள் மட்டுமல்லாமல் மற்ற நிகழ்ச்சிகளும் கடுமையான தணிக்கைக்கு உள்ளாகின்றன. சமயம் என்ற பேரில் வருகிற பழமைவாதச் சிந்தனைகள் மட்டும் எந்தவிதமான கட்டுப்பாட்டுக்கும் உள்ளாகாது. இது புதினமானது மில்லை. இந்தத் தணிக்கையின் மிகக் கேவலமான பக்கம் ஏதென்றால் தமிழில் வேலை செய்யும் எவரும் அரசாங்கத்தின் எடுபிடியாக அல்லது கொள்கை இல்லாத குற்றேவல்காரராக இருக்க வேண்டும் என்று தமிழ்ப் பகுதிகளின் நாட்டாண்மைகள் நம்பவதுதான். இவர்களும் இவர்களுடன் இணங்கிப் போனாலே தான் பதவி உயர்வு பெறலாம் என்று பயப்படுகிறவர்களும் சேர்ந்து சுதந்திரமான சிந்தனை உள்ளவர்கள் பற்றி மேலிடத்துக்கு அறிவிப்பது ஒரு விடயம். அதைவிட, வெகு சாதாரணமான விடயங்களுக்குக் கூட அரசாங்க விரோத அல்லது தமிழ்த் தேசியவாத அடையாளங்களைப் புனைந்து அவை ஒலிபரப்பாகாமல் தடுப்பது இந்தக் குற்றேசிவல்காரர்களின் முழுநேர வேலையாகிவிட்டது.

இதன் விளைவாக இலங்கை வானொலியின் வெகுசில நிகழ்ச்சிகளே மக்கள் விரும்பிக்கேட்கக் கூடிய பயனுள்ள நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. ரூபவாஹினியைப் பொறுத்த வரை அதில் தமிழில் வருகிறதிற் பெரும் பகுதி செய்திகள். தப்பித்தவறி இடையிடை வரும் கலை நிகழ்ச்சிகள் ஒரு வாரத்திற்கு ஒன்றிரண்டு போனால் எந்தவிதமான சமூக நாட்டமுமில்லாத அரைத்தமாவை அரைக்கிற விடயங்கள் தாம். அதிலும் நாட்டாண்மைக்காரர்களின் ஆசியுள்ளவர்களுக்கே இடமுண்டு.

தமிழ் மக்கள் தனியார் வானொலிகளையும் தொலைக்காட்சியையும் நாடுவதிலும் வசதியுள்ளவர்கள் இந்திய ஒளிபரப்புக்களைத் தட்டு அலைவாங்கிகள் மூலம் பெறுவதிலும் புதுமை என்ன? அரசாங்கம் இதையிட்டுக் கவலைப்படுவதும் இல்லை. ஏனென்றால் இந்த விதமான 'நம்பகமான' தனியார் ஊடகங்கள் இருப்பது அரசாங்கத்துக்கு ஒரு பெரிய மிரட்டலாக இல்லை. அப்படி மிரட்டலாகிற போதும் அது சிங்கள ஊடகங்களினளவுக்குப் பெரிய பாதிப்பாக இருப்பதும் இல்லை.

இரா. பலராமன்.

## அடிமை

வேட்டையாடப்படும் அடிமை நான்
நாய்களின் பற்கள்...
கங்காணியின் சாட்டைச் சொடுக்கு..
உடல் நடுங்குகிறேன்
நரகமும் விரக்தியும்
என்னை அழுத்துகின்றன.

வலியை அழுந்தப் பற்றுகிறேன்
காயத்தில் ரத்தம் கசிகிறது.

ஆடைகளைப் போல்
மாற்றி மாற்றி அணிகிறேன் –
வலிகளை.

வலியின் வேதனையை
காயப்பட்ட மனிதனிடம் நான்
கேட்டுத் தெரிந்து கொள்வதில்லை.

நான்.. நானேதான்
அந்தக் காயம்பட்ட மனிதன்..

வால்ட் விட்மன்
(அமெரிக்க வெள்ளை இனத்தவர்)

# யுத்தநிறுத்தம், அரசியல் தீர்வு, சமாதானத்திற்கு போராடி வந்த இடதுசாரிகளின் பங்களிப்பு

"யுத்தத்தை எதிர்ப்போம் சமாதானத்தைக் காண்போம்" என்ற சுலோகத்தை இன்று எல்லோருமே உச்சரிக்கிறார்கள். யுத்தத்தை தொடக்கியவர்கள், உக்கிரமாக நடாத்திய வர்கள், இராணுவத்திற்கு ஆட்கள் திரட்டிய வர்கள், ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள், யுத்தகாலத்தில் வர்த்தகம் வியாபாரத்தில் கொள்ளையடித்தவர்கள், ஆயுத நடவடிக்கைகளால் மட்டும் சகலதையும் சாதிக்கலாம் என்றவர்கள் யாவருமே இன்று சமாதான ராகத்தை உச்சத்தில் பாடிநிற்கின்றனர். அது மட்டுமன்றி நாங்கள் அகிம்சை வாதிகள் அவர்கள் தான் ஆயுதப் போராட்டக்காரர்கள் என்று விரல் சுட்டிக் காட்டியவர்கள் கூட அவர்கள்தான் எல்லாமே அவர்கள் தான் எனப் பஜனை வைக்கிறார்கள். வடக்கு கிழக்கின் இயல்பு வாழ்வைப் பறித்து சிதைத்து சின்னாபின்னப் படுத்தியதில் பெரும் பங்கு வகித்த ஐ.தே.கட்சி சமாதானம் இயல்பு வாழ்க்கை பற்றி உரத்துப் பேசி வருகிறது. நல்ல விஷயம்தான். இந்தச் சமாதானஞானம் பிறப்பதற்கு பத்தொன்பது வருடங்கள் கழிய வேண்டி இருந்தது ஒரு பெரிய காரியம் தான்.

ஆனால் இந்த நாட்டின் நேர்மையான இடதுசாரிக் கட்சிகளும் அமைப்புகளும் யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்தே அதற்கெதிராகப் போராட்ட இயக்கங்களை முன்னெடுத்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை தற்போதைய சமாதானப்பிரச்சாரப் பூசாரிகள் மறைக்கப்பார்க்கிறார்கள். இன்றைய நிலை தோன்றுவதற்கு தாங்கள் கூறிநிற்கும் ஒற்றைப் பரிமாண முறை மட்டுமே ஒரே ஒரு காரணம் என்றும் கூறி வருகிறார்கள்.

1979ம் ஆண்டில் தமிழ் மக்கள் மீதான யுத்தத்திற்கு கோரக்கரங்களை ஜே.ஆர்.

## சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க இடதுசாரிகளுடன் ஐக்கியம் அவசியம்

நீட்டிக் கொண்டது முதல் இன்று வரை பாராளுமன்றத்திற்கு வெளியே இடதுசாரி சக்திகள் தொடர்ச்சியான யுத்த எதிர்ப்புப் போராட்டங்களை குறிப்பாக வடக்கு கிழக்குக்கு வெளியே முன்னெடுத்து வந்துள்ளார்கள். அடக்கு முறைகள் நெருக்கடிகள் மத்தியில் இந்த யுத்த எதிர்ப்பையும் அரசியல் தீர்வையும் வற்புறுத்தி பல்வேறு இயக்கங்களை நடாத்தியிருக்கிறார்கள்.

பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், சுவரொட்டி இயக்கங்கள், புகைப்படக் கண்காட்சிகள், இசைப்பாடல் அரங்குகள், பெரும் தொகைப் பிரசுரங்கள் போன்றவற்றை இடதுசாரி சக்திகள் கூட்டாகவும் தனித் தனியாகவும் முன்னெடுத்து மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்திவந்தன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)யில் இருந்து சிங்கள தோழர்களினூடாக 1983-1991 வரை கொழும்பிலும் தெற்கிலும், மலையகத்திலும் யுத்தத்திற்கு எதிரான இயக்கத்திற்கான அடிப்படைகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்த அடிப்படைகள் இடதுசாரி அரசியல் சக்திகளை மையப்படுத்திய தாகவே அமைந்தன. இதைவிட அரசசார்பற்ற நிறுவனங்களினதும், சிவில் இயக்கங்களினதும், வெகுஜன அமைப்புகளினதும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

1994 இற்கு முன்பு தெற்கில் யுத்த எதிர்ப்பு இயக்கம் ஐ.தே.கட்சி எதிர்ப்பு இயக்கமாக இருந்தது. அந்த இயக்கத்தில் இடதுசாரி அமைப்புகளும் கட்சிகளும் பிரதான இடத்தை பெற்றிருந்தன. 1995இல் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்தவுடன் அவ்வரசாங்கத்துடனேயே பெரும்பாலும் இனம்காட்டிக் கொண்டிருந்த அரசசார்பற்ற நிறுவனங்களும், சில இடதுசாரி சக்திகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டன. ஆனால் பொ.ஐ.ஐ. முன்னணியில் சேராதிருந்த ஐ.தே.கட்சி எதிர்ப்பு இடதுசாரி சக்திகள் தொடர்ந்தும் பரந்த அளவில் யுத்த எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்தன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) 1988 ஜனாதிபதித் தேர்தலின் போது சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் முன்வைக்கப்பட்ட (D.P.A.) ஜனநாயக மக்கள் சக்தி வேலைத் திட்டத்தை ஆதரித்தது. தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி வழங்கப்பட அவ்வேலைத் திட்டம் உருவாக்குப்படுவதற்கு இ.க.கட்சி(இடது) பங்களிப்பை செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. இக் கூட்டில் குமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான அ.இ.த. காங்கிரஸ் கட்சியும் இணைந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்பட வேண்டும் என்ற வேலைத்திட்டத்தை முன்வைத்த பொதுஜன ஐக்கிய முன்னணியை பு.ஜ.கட்சி 1994 இல் ஆதரித்தது. 1995 இல் பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் வரை, 1991 வரை இ.க.கட்சி (இடது)யும், பின்னர் புதிய ஜனநாயக கட்சியும் தனி கட்சியாகவும், ஏனைய யுத்த எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்தது. இதனால் இக்கட்சியின் உறுப்பினர்கள் பலவிதமான அடக்குமுறைகளுக்கும், பொலிசாரின் கெடுபிடிகள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர்.

1995 இற்கு பிறகு இடதுசாரி அமைப்புகளின் கூட்டாக செயற்பட்ட இடதுசாரி கூட்டமைப்பினறைத் தோற்றுவிப்பதிலும் அதன் ஊடாக யுத்த எதிர்ப்பு இயக்கத்தை புதிய ஜனநாயக கட்சி முன்னெடுத்தும் வந்தது

1996ல் யுத்தற்திற்கும், இனவாதத்திற்கும், உலகமய மாதலுக்கும் எதிரான வெகுஜன இயக்கமான தேசிய ஜனநாயக இயக்கத்தை உருவாக்குவதில் புதிய ஜனநாயக கட்சி முன்நின்று செயற்பட்டுள்ளது. அவ்வியக்கம் வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் பெரும்பாலான இடங்களில் யுத்தற்திற்கு எதிரான வெகுஜன இயக்கத்தை பலவழிகளில் முன்னெடுத்தது. 1998இல் கொழும்பிலும், குருநாகலிலும் முன்னெடுத்த 'உயிர் வாழ்வதற்காக எழுச்சி பெறுவோம்' என்ற இயக்கம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

'சாதுஜனராவய' போன்ற யுத்தற்திற்கு எதிரான இசைக் கலைஞர்கள் நகரங்கள் கிராமங்கள் தோறும் சென்று இசை நிகழ்ச்சிகளை நடாத்தினர். உருக்கமான சிங்கள தமிழ் பாடல்கள் மூலம் சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் யுத்த எதிர்ப்புணர்வை வளர்த்தனர்.

1998 ஆம் ஆண்டு புதிய இடதுசாரி முன்னணியாக உருவெடுத்து யுத்தத்திற்கு எதிராக பரந்துபட்ட அரசியல் இயக்கத்தை கட்டிவளர்ப்பதில் கணிசமான பங்களிப்பை செய்தது. இவ்வியக்கத்தின் தோற்றத்திலும், அதன் அரசியல் நடவடிக்கைகளிலும் புதிய ஜனநாயக கட்சி முக்கிய பங்கை எடுத்துக்கொண்டு செயற்பட்டது. 1998ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தலில் சிங்களமக்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளில் யுத்த எதிர்ப்பை முன்வைத்து அரசியல் தீர்வை வற்புறுத்தி கணிசமான எண்ணிக்கையுடைய வாக்குகளை பெற்றது. அது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை சுயாட்சி சமத்துவம் என்பவற்றுக்கு அரசியல் ரீதியான ஆதரவை சிங்கள மக்கள் வழங்குகிறார்கள் என்பதற்கான அடிப்படையை எடுத்துக்காட்டியது. புதிய இடதுசாரி முன்னணி சந்தர்ப்ப வாத நவசமசமாஜக்கட்சி தலைமையினால் சீர்குலைக்கப்பட்டு அத் தலைமை அம்முன்னணிக்கு ஏகபோக உரிமை கோரியதால் புதிய இடதுசாரி முன்னணி சீர்குலைந்து கொண்டது.

இது இவ்வாறிருந்தபோதும் சிங்கள மக்களின் மத்தியில் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளின் நியாயமான தன்மைகளை விளக்கியும், யுத்தத்திற்கு எதிராகவும் பல்வேறுபட்ட இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அவற்றுடன் ஒன்றிணைந்தும் தனிப்படவும் புதி ஜனநாயக கட்சி பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த தேர்தலில் யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை, சமாதானத்திற்காக மக்கள் வாக்களித்து ஆணை வழங்கியுள்ளார்கள் என்றால் அதற்கான கருத்து சிந்தணைச் சூழலை வழங்கியவர்கள் இடதுசாரி சக்திகளே யாவர். தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு வந்த இடதுசாரிகளின் பல்வேறுபட்ட யுத்த எதிர்ப்பின் விளைவானதே இன்றைய சமாதான நடவடிக்கைகளாகும் எண்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

# பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளும் பழமைவாத மதிப்பீடுகளும்

நமது சமூக வாழ்வில் பெண்கள் மீதான ஒடுக்கு முறைகள் பல்வேறு தளங்களில் நீடித்து வருகின்றன. அவ் ஒடுக்கு முறைகளில் பல வெளிப்படையான அடையாளம் பெறுவதில்லை. அதே வேளை சில அடக்கு முறைகள் துலக்கமாக இருந்துவருவன.

ஐரோப்பிய சூழலில் நிலவுடைமை அமைப்பும் அது சார்ந்த கருத்தியல்களும் ஏற்கனவே உடைத்தெறியப்பட்டு அந்த இடத்தையே முதலாளித்துவம் இட்டு நிரப்பிக் கொண்டது. அந்த சமூகங்களிலே பெண்கள் முதலாளித்துவத்தின் அடக்கு முறைகளுக்கே பெரும்பாலும் முகம் கொடுத்து அதனால் துன்பம் சுமப்பவர்களாக உள்ளனர். அங்கு பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் முன்வைக்கும் கோரிக்கைகளும் அவர்களது அமைப்புகளும் வேறுபட்ட சூழலிலேயே இருந்து வருகின்றன. அவற்றில் சில வகைகள் நமது கவனத்திற்குரியனவாயினும் முற்றிலும் நமக்கு பொருந்துவதாக இல்லை.

நாம் எதிர்கொள்ளும் பெண்கள் மீதான அடக்கு முறைகளும் அதற்குரிய நீண்டகால வேர்கொள்ளலும் வேறுபட்டவைகளாகும். நாம் இன்றும் நிலவுடைமை வழிவந்த கருத்தியல் சிந்தனைகளிலேயே கால் பதித்து நிற்கின்றோம். பெண்கள் பற்றிய சகல மதிப்பீடுகளும் அத்தகைய கருத்தியல் அளவு கோல் கொண்டே அளக்கப்படுகின்றன. ஒரு பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை வரையறைப் படுத்துவது பழமைவாதக் கருத்தியல்களேயாகும். பெண்களைப் பிணைத்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத ஒடுக்குமுறை விலங்குகள் நமது சமூகச் சூழலில் ஒவ்வொரு வீட்டிலும் தெளிவாகவே இருந்து வருகின்றன. அவை பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை பெண் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் மீது சுமத்தி அழுத்திக் கொள்ளப் படுகின்றது.

ஒரு வீட்டில் பிள்ளை பிறந்ததும் ஆண் என்றால் குதூகலித்து கற்கண்டு கொடுத்துக் கொள்வதும் பெண் என்றால் சோகமடைந்து சர்க்கரை வழங்கப்படுவதும் இன்றுவரைள தொடரப்படும் வழக்கமாகும். பிறப்பிலிருந்தே பெண்கள் இரண்டாம் தரமாக்கப்பட்டு சடங்கு சம்பிரதாயங்கள் கட்டுப்பாடுகள் என்பனவற்றால் அடிமைத் தனத்திற்கு ஆளாக்கப்படுவது பரவலான நடைமுறைகளாகப் பின்பற்றப் படுகின்றது. பொட்டு, பூ புடவை, தங்க ஆபரணங்கள் - மெட்டி முதல் தலைப்பட்டம் வரை மட்டுமன்றி மலடி, அமங்கலி, வாழ்விழந்தவள், வேசை - விபச்சாரி போன்ற யாவுமே பெண்களுக்கான வையாகவே சமூகத்தில் இருந்து வருகின்றன. இவற்றின் மூலமாகப் பெண்கள் அடக்கப்பட்டு இரண்டாம் தரமாக நடாத்திப்படுகின்றனர். எவ்வளவிற்கு கல்வி கேள்விகளில், அறிவியலில், கலை இலக்கியத்தில் பெண்கள் வளர்ந்திருந்தாலும் மனிதன் என்ற ஆண் உயிரிக்கு சமத்துவமாகப் பெண் உயிரி என்று நோக்கப்படுவதற்கு இன்றைய நமது சமூகத்தில் இடமேயில்லை.

மேற்கூறிய கருத்தியல் சிந்தனை நடைமுறை வாழ்விற்குள் பெண்கள் வரும் அதேவேளை அன்றாட வாழ்வில் குடும்பத்திற்கு வெளியே உழைப்பில் வர்க்க ரீதியிலும் பால் ரீதியாகவும் சுரண்டப்படுகின்றனர். தொழிற் சாலைகளில் தொழில் வர்த்தக நிறுவனங்களில் அரசாங்க தனியார் துறை களில் தொழிலாளர்கள் ஊழியர்கள் எனக் குறைந்த சம்பளங் களில் வைத்து வேலை வாங்கப்படுகின்றனர். இவ்விடங்களில் ஆண்களின் பாலியல் வக்கிரகங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

மேலும் நமது நாடு ஒரு விவசாய நாடு என்பதாலும் கிராமப்புறங்கள் அதிகரித்த நிலையில் இருப்பதாலும் கூலி விவசாயிகளாகப் பெருமளவில் பெண்களே இருந்து வருகின்றனர். கடுமையான வேலைகளில் ஈடுபடும் கூலி விவசாயப் பெண்களுக்கு வழங்கப்படும் சம்பளம் ஆண் கூலி விவசாயிகளுக்கு வழங்கப் படுவதன் மூன்றில் ஒன்றாக அல்லது அதற்கும் குறைவானதாக இருந்து வருகின்றது. மலையகத்தில் பெண் தொழிலாளர் களுக்கு சம சம்பளம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கேயும் பெண்கள் என்ற காரணத்தால் பல்வேறு குறுக்கு



வழிகள் மூலம் அவர்களது சம்பளத்தில் குறைப்புகள் செய்யப்படுகின்றன.

இன்று பொதுவாகவே எல்லா இடங்களிலும் பெண்கள் வேலைக்கு அமர்த்தப் படுவதுதற்கு பிரதான காரணம் அவர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவதற்கேயாகும். இன்று ஆடைத் தொழிற்சாலைகளில் என்பது தொண்நூறு வீதமானவர்கள் பெண்களாகவே உள்ளனர். இவர்களது வேலையை ஆண்களைக் கொண்டு செய்வதானால் அதற்கு கொடுக்க வேண்டிய சம்பளம் அதிகமானதாக இருக்கும். அதனாலேயே அதிலும் அரைவாசிச் சம்பளத்தை வழங்கி பெண்களை தனியார் கம்பனிகள் பெருமளவில் சேர்த்துக்கொள்கின்றனர். அதேவேளை பெண்கள் தொழிற்சங்க உரிமைகளையோ சம்பள உயர்வை யோ கேட்பதில் முன்நிற்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் முதலாளிகளுக்கு உண்டு.

இவ்வாறு பெண்கள் வர்க்கம் இனம் சாதியம் நிறம் போன்றவற்றின் அடிப்படையில் மோசமான ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதேவேளை பெண்கள் எதிர் கொள்ளும் மற்றொரு முக்கிய விடயம் ஆண் ஆதிக்க சிந்தனையும் அதன் பாற்பட்ட நடைமுறையுமாகும். நான் ஆண், நீயோ பெண். ஆதலால் எனக்கு சகல வழிகளிலும் கீழ்ப்படிந்து இரண்டாம் தர நிலையில் இருத்தல் வேண்டும் என்ற ஆணாதிக்க சிந்தனை மேலோங்கி நிற்பதாகும். இந்த சிந்தனை தற்செயல் சமூக நிகழ்வின் ஊடாக வெளிவந்த ஒன்று அல்ல. வரலாற்று வளர்ச்சியில் ஆண் பெண் வேலைப் பிரிவினையின் ஊடாகவும் தனிச் சொத்துடமையின் தோற்றத்துடனும் உருவாகி வளர்க்கப்பட்ட ஒன்றாகும்.

இத்தகைய ஆணாதிக்கம் என்பது பெண்கள் அனைவருமே அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் அடக்குமுறை அம்சமாகும். இதனை தனியே ஒரே ஒரு விடயமாக மட்டும் முன்னெடுத்து பெண்கள் எதிர்நோக்கும் ஒடுக்கு முறைகளுக்கு தீர்வு கண்டு விடமுடியாது. சமகாலத்தில் இவ் ஆணாதிக்கத்திற்கு எதிரான இயக்கம் மட்டுமே பெண்ணிய விடுதலைக்கு மார்க்கம் என வலியுறுத்தப்படும் போக்கு சில முனைகளிலே காணப்படுகின்றது. அதேவேளை மாக்சிசம் பெண் விடுதலைக்குப் போதுமானதல்ல என்றும் பரப்புரை செய்யப்படுகின்றது. இதுவும் ஒருவகை மாக்சிச எதிர்ப்பு முன்னெடுப்பாகவே காண இயலும்.

எனவே பெண் ஒடுக்குமுறையின் தளங்களையும் அவற்றுக்குரிய வரலாற்று வேர்களின் ஆழத்தையும் மாக்சிசத்தினால் மட்டுமே கண்டறிய முடியும். அது மட்டுமன்றி பெண் ஒடுக்கு முறைகள் பலவற்றை முறியடித்து வெற்றி கொண்டு பெண்களுக்கான சமூக அந்தஸ்தையும் ஆண் பெண் சமத்துவத்தையும் நிலை நாட்டியமை மாக்சிச லெனினிசத்திற்கும் மா ஓ சேதுங் சிந்தனைக்கும் உரியதேயாகும். அதில் குறைபாடுகள் போதாமைகள் போன்றன சோஷலிசத்தின் அகபுறச் சூழல்களால் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மாக்சிசத்தை விட வேறு எந்தச் சிந்தனையும் உலகக் கண்ணேட்டமும் பெண் விடுதலைக்கான விஞ்ஞான பூர்வ அடிப்படையையும் இதுவரை வழங்கியதில்லை என்பது திடப்படுத்திக் கூறக்கூடிய ஒன்றாகும்.

• • • • • •

# அமெரிக்கா பாதுகாத்து நிற்கும் இஸ்ரேலியப் பயங்கரவாதம்

வானிலிருந்து குண்டு மழை பொழிகிறது. இராணுவக் கவச வண்டிகளின் பீரங்கித் தாக்குதலில் கட்டிடங்கள் நொறுங்கி விழுந்து தீப்பற்றி எரிகின்றன. குழந்தைகளை மார்போடு அணைத்துக் கொண்டு தெருக்களில் ஓடும் தாய்மார்கள். அடுத்த தாக்குதல் எப்போது நடக்குமோ என்ற பீதியில் உறைந்து நிற்கும் உழைக்கும் மக்கள்.

இவையெல்லாம் ஆப்கானில் அமெரிக்க வல்லரசு நடத்திய பயங்கரவாதப் போரின் காட்சிகள் அல்ல. மேற்காசியாவில் அமெரிக்காவின் அடியாளாகச் செயல்பட்டு வரும் இனவெறி பயங்கரவாத நாடான இஸ்ரேல், பலஸ்தீனிய

## பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை எந்த டாங்கிகளாலும் ஒடுக்க முடியாது.

மக்கள் மீது கடந்த இரு மாதங்களாக நடத்திவரும் கொலைவெறியாட்டத்தின் காட்சியே இவை.

கடந்த நவம்பரில் பலஸ்தீன சுயாட்சிப் பகுதியான மேலைக் கரையி:லுள்ள ஹெப்ரான் நகரில் பேருந்து ஒன்றில் பயணம் செய்த பலஸ்தீனியர்கள் அனைவரும் இஸ்ரேலிய ஹெலிகப்டர் படையின் குண்டுவீச்சத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அந்தப் படுகொலையின் இரத்தக்கறை உறையும் முன்னரே பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த இளம் குழந்தைகள் 5 பேர் இஸ்ரேலிய இராணுவத்தின் குண்டு வீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளங்குழந்தைகளின் எண்ணிக்கை



இஸ்ரேலிய ராணுவத்தை எதிர்த்து கல்எறியும் பலஸ்தீன சிறுவர்கள்

200க்கும் மேலாகிவிட்டது. வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களும் உழுது கொண்டிருக்கும் விவசாயிகளும் கேள்விமுறையின்றி இஸ்ரேலிய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப் படுகின்றனர்.

பலஸ்தீனிய மக்களின் "இரண்டாவது இண்டிஃபதா" எனும் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க எஃப்-16 ரக போர் விமானங்கள், ஹெலிகப்டர் படை, பீரங்கி கவச வண்டிகள், எந்திரத் துப்பாக்கிகள், கண்ணி வெடிகள் என இஸ்ரேலிய இராணுவம் ஆக்கிரமிப்பு போரை நடத்தி வருகிறது. அதன் உச்சகட்டமாக கடந்த டிசம்பர் 3ஆம் நாளன்று பலஸ்தீன சுயாட்சிப் பகுதியின் அதிபரான யாசிர் அரபாத்தின் தலைமை அலுவலகம் மீதே இஸ்ரேலிய இராணுவம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளது. பலஸ்தீன சுயாட்சி பகுதியின் போலீஸ் நிலையங்கள், மருத்துவமனைகள், அகதி முகாம்கள் என கண் மூடித்தனமாக நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 20க்கும் மேற்பட்டோர் பலியாகினர். 200க்கும் மேலானோர் படுகாயமடைந்துள்ளனர். எட்டாண்டுகளுக்கு முன்பு இஸ்ரேலுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே கையெழுத்தான 'அமைதி' ஒப்பந்தம் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டுக் கிடக்கிறது.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற்ற சுதந்திரமான அரசை நிறுவவேண்டும் என்பதுதான் பலஸ்தீன மக்களின் இலட்சியம், ஆனால் 1993இல் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்ட துரோக ஒப்பந்தம், பலஸ்தீனியர்களுக்கு தேசிய சுயநிர்ணய உரிமையைத்தான் அளித்தது. ஆயினும் ஒப்பந்தப்படி பெயரளவிலான சுயாட்சி உரிமையைத் தான் அளித்தது. ஆயினும் ஒப்பந்தப்படி பெயரயளவிலான சுயாட்சி உரிமையையும் மறுத்து இஸ்ரேலிய இனவெறியர்கள் பயங்கரவாதப் படுகொலைகளைத் தொடர்ந்தனர். குறிப்பாக ஜெரிகோ, ஹெப்ரான் ஆகிய நகரங்களை

ஒப்பந்தப்படி தமது சுயாட்சியிடம் ஒப்படைக்கக் கோரியபோது, இஸ்ரேலிய இனவெறியர்கள் காட்டுமிராண்டி தனமான நரவேட்டையை பலஸ்தீனியர்கள் மீது ஏவினர்.

பயங்கரவாத இஸ்ரேலின் தொடரும் கொலை வெறியாட்டம், யாசிர் அரபாத்தால் தலைமை தாங்கப்படும் சுயாட்சி அதிகாரத்தின் சமரசம், அரபாத் ஆட்சியில் தீவிரமாகிவிட்ட ஊழல் மோசடிகள் ஆகிய அனைத்தும் பலஸ்தீன மக்களிடம் வெறுப்பையும் ஆத்திரத்தையுமே விளைவித்தன. கடந்த ஆறேழு ஆண்டுகளாக குமுறிக் கொண்டிருந்த பலஸ்தீன மக்கள் கடந்த ஆண்டில் எரிமலையாகக் கிளர்ந்தெழுந்து "இரண்டாவது இண்டிஃபதா" எனும் விடுதலைப் போரைத் தொடர்ந்தனர். இஸ்சுரேலிய பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க, பலஸ்தீன இஸ்மாலிக் ஜிகாத், ஹமாஸ் ஆகிய குழுக்கள் மனித வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தின. கடந்த ஓராண்டு காலத்தில் ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதல்களை இஸ்ரேலில் இக்குழுக்கள் நடத்தியுள்ளன.

குறிப்பாக, கடந்த நவம்பர் மாதத்தில் பலஸ்தீன தீவிரவாதக் குழுக்களின் அடுத்தடுத்த தாக்குதல்களில் 27 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். இதைக் காரணம் காட்டி, "பலஸ்தீன அரசு பயங்கரவாதத்தை ஒடுக்கத் தவறிவிட்டது" என்று குற்றம் சாட்டிய இஸ்ரேலிய இனவெறி அரசு, பலஸ்தீனத்தின் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடர்ந்தது. பலஸ்தீன சுயாட்சிப் பிரதேசத்தின் மேலைக்கரை பகுதியிலுள்ள நாப்லாஸ், ராமல்ல, பெத்லஹியா நகரங்களும் காசாமுனை பிரதேசத்தின் பெருநகரங்களும் இஸ்ரேலிய இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டன. தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் தேடுதல் வேட்டையும் பீரங்கித் தாக்குதலும் தொடர்ந்தது. ராமல்லா நகரிலிருந்து வெளியே செல்லக்கூட பலஸ்தீன சுயாட்சி அரசின் தலைவர் அரபாத்துக்

குத் தடை விதிக்கப்பட்டது. அவரது தலைமை அலுவலக வாயிலருகில் இஸ்ரேலிய இராணுவம் முற்றுகையிட்டுக் கொண்டு நின்றது. பலஸ்தீன சுயாட்சி பிரதேசத்தில் போர் விமானங்களும், ஹெலிகப்டர்களும் கண்மூடித்தனமாக குண்டு வீச்சுத் தாக்குதலைத் தொடர்ந்தன.

பலஸ்தீன தீவிரவாதக் குழுக்கள் மட்டுமல்ல: சமரசவாதி யசிர் அரபாத்தின் "படை-17" மற்றும் டான்ஜிம் படைகளும் கூட பயங்கரவாத அமைப்புக்கள் தான் என்கிறது இஸ்ரேல். பலஸ்தீன அரசின் பொலீசார்கூட பயங்கரவாதிகள் என்று குற்றம்

சாட்டுகிறது. மொத்தத்தில் பலஸ்தீனமே ஒரு பயங்கரவாதப் பிரதேசம், எந்த உரிமையும் அம்மக்களுக்கு அளிக்கக் கூடாது என்று இனவெறி பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்குவதுதான் இஸ்ரேலிய நோக்கமாக உள்ளது.

இத்தாக்குதலை எதிர்த்து பலஸ்தீன மக்கள் போராட்டங்களில் இறங்கத் தொடங்கியதும், பதற்றத்தை தணிக்க அமெரிக்கா, ரசியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய ஏகாதிபத்திய வல்லரசுகளின் சிறப்புத் தூதர்களும் ஐ.நா. மன்றத் தூதரும் ஓடோடி வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இஸ்ரேல் தனது குண்டு வீச்சுத் தாக்குதலையும் ஆக்கிரமிப்பையும் நிறுத்தினால், நாங்களும் தற்கொலைப் படைத் தாக்குதலை நிறுத்தத் தயார் என்று பலஸ்தீன தீவிரவாதக் குழுக்கள் ரம்ஜான் மாதத்தில் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு முன் வந்தன. ஆனாலும் இதை ஏற்க மறுத்து இஸ்ரேலிய இனவெறி பயங்கரவாதிகள் தாக்குதலைத் தொடர்ந்தனர். இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் போரை முடிவுக்கு கொண்டுவர ஆவன செய்வதாகக் கூறிய அமெரிக்க வல்லரசு அதேசமயம், பாலஸ்தீன தீவிரவாதிகளைக் கைது செய்து பயங்கரவாதத்தை ஒடுக்குமாறு அரபாத்திடம் கோரியது.

அதன்படி பலஸ்தீன சுயாட்சி அரசின் அதிபரான அரபாத், பலஸ்தீனத்தில் அவசரநிலையைப் பிறப்பித்தும், இதுவரை கண்டிராத அளவுக்கு மிகப் பெரும் எண்ணிக்கையில் ஹமாஸ் குழுவினரைக் கைது செய்தும், அவர்களின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்தும் தன்னை கடைந்தெடுத்த அமெரிக்கக் கைக்கூலியாகக் காட்டிக் கொண்டார். இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்களும், சந்தேகிக்கப்படுவோரும் கூட பலஸ்தீன சுயாட்சி அரசின் பொலீசாரால் விசாரணைக்கு இழுத்துச் செல்லப் பட்டனர்.

தனது சொந்த சகோதரர்களையே கைது செய்து சிறையிலடைத்து வதைக்கும் அரபாத்தின் துரோகத்தனம் வெளிப்படையாக சந்தி சிரித்தது. ஆத்திரமடைந்த பலஸ்தீன மக்கள் தீவிரவாதிகளைக் கைது செய்ய வரும் அராபத் அரசின் பொலீசாரை விரட்டியடித்து பல பகுதிகளில் மறியல் போராட்டங்களை நடத்தினர். அரபாத் அரசின் துரோகமும் தீவிரமாகிவிட்ட லஞ்ச ஊழலும் பலஸ்தீன மக்களிடம் வெறுப்பையும் ஆத்திரத்தையும் தோற்றுவித்து, அவர்களை இஸ்லாமிய தீவிரவாதிகளின் பக்கம் தள்ளிவிட்டுள்ளது.

ஏறத்தாழ மூன்று மாதங்களாக இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்புப் போரை நடத்தி வெறியாட்டம் போட்ட போதிலும், இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகள் கண்டன அறிக்கை வெளியிட்டதற்கு மேல் வேறெந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பலஸ்தீனத்தின் மீது தாக்குதலை நிறுத்தாவிடில், பலஸ்தீன மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையை அளிக்காவிடில் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எண்ணெய் கொடுக்க மாட்டோம் என்று வாயளவில் எச்சரிக்கை விடுக்கக் கூட அரபு நாடுகள் முன் வரவில்லை. "நாமனைவரும் மதத்தால் ஒன்றுபட்டவர்கள்" என்று இஸ்லாமிய அடிப்படைவாதிகள் எவ்வளவுதான் கூறிக்கொண்டாலும், இந்நாடுகளில் இஸ்லாமிய ஆளும் வர்க்க நலன்தான் முன்னே நிற்கிறது.



அரபாத்தின் தலைமையகத்தை குறிவைத்து நிற்கும் இஸ்ரேலிய டாங்கிகள்

எனவேதான் பலஸ்தீன குழந்தைகள் குண்டுவீச்சில் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்ட போதிலும், எந்தவொரு முஸ்லீம் நாட்டு அரசும் ஆளும் வர்க்கங்களும் இஸ்ரேலின் பயங்கரவாதத் தாக்குதலை எதிர்த்து உருப்படியாக எந்த நடவடிக்கை எடுக்கவும் முன் வர வில்லை. இந்நிலைமைகளைச் சாதக மாக்கிக் கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு வெறியாட்டம் போட்டு வருகிறது. அப்பயங்கரவாத நாட்டுடன் இந்தியப் பயங்கரவாத அரசு வெட்கமின்றி கைகோர்த்துக் கொண்டுள்ளது.

மறுபுறம், அரபாத்தின் புகழும் செல்வாக்கும் மங்கி பலஸ்தீன மக்களிடம் அவரும் அவரது அஃபத்தா இயக்கமும் தனிமைப்பட்டுப் போயுள்ள நிலையில், அவரை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையில் ஏகாதிபத்தியங்கள் திணறுகின்றன. அரபாத், பலஸ்தீன தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதைக் காட்டி, ஒரு சில பகுதிகளிலிருந்து இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை தற்காலிகமாக அகற்றி சமாதான நாடகமாடி வருகின்றன.

ஆனால், பலஸ்தீன மக்களுக்குச் சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் கிடைக்காதவரை அவர்களின் போராட்டங்களும் தீவிரவாதத் தாக்குதலும் ஒருக்காலும் ஓய்ந்து விடாது, ஏகாதிபத்தியங்களை எதிர்க்காமல் அவற்றின் தயவில் பெறப்படும் பெயரளவிலான சுயாட்சியால் எந்தவொரு தேசிய இனமும் விடுதலை பெற முடியாது: அது துரோகத்தையும் பேரிழப்பையுமே விளைவிக்கும் என்பதை உலகுக்கு அறிவித்துவிட்டு, மீள முடியாத துயரத்தில் பலஸ்தீனம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

நன்றி : புதிய ஜனநாயகம்.

## அமெரிக்காவும் வறுமையும்

கடந்த பத்தாண்டுகளில், மைக்ரோ சாஃப்ட் நிறுவன அதிபரின் சொத்து மதிப்பு 2,59,200 கோடி ரூபாயாகவும், உல்லாசக் கப்பல் நிறுவனமான கார்னிவல் குருயீஸ் லைன்ஸின் அதிபர் மிக்கி ஆரிசனின் சொத்து மதிப்பு 22,080 கோடி ரூபாயாகவும், லாஸ் வேகாஸ் நகரில் சூதாட்ட விடுதிகளை நடத்தி வரும் தொழிலதிபர் கிர்க் கேர்கோரியன் சொத்து மதிப்பு 25,440 கோடி ரூபாயாகவும் உயர்ந்த அதே அமெரிக்காவில் தான், 40 இலட்சம் அமெரிக்கர்களும் அடுத்த வேளை சோத்துக்கு வசதியின்றிப் பட்டினி கிடக்கிறார்கள். அரசாங்க புள்ளி விவரப்படியே 13.3 சதவீத அமெரிக்கர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள்.

பட்டினி கிடக்கும் அமெரிக்கக் குழந்தைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் அடுத்த வேளை சோத்துக்கு வழி ஏற்படுதத்தித் தராத அமெரிக்க அரசு, அமெரிக்கத் தொழிலாளர்கள் கடன் வாங்கிப் பங்குச் சந்தையில் சூதாட வசதி ஏற்படுத்தித் தந்தது. சூதாட்ட விடுதிகளில் தோற்றுப் போனவர்களுக்குக் கடன் கொடுத்துச் சூதாடச் சொல்லி கொள்ளையடிக்கும் தந்திரம்தான். அமெரிக்க அரசின் பொருளாதாரக் கொள்கை. சூதாட்ட விடுதிகளில் ஆதிக்கம் செலுத்தும் ரவுடி கும்பல் போன்றவர்கள்தான் அமெரிக்காவின் புதுப்பணக்கார கும்பல்!

## ஜோர்ஜ் புஷ்ஷின் போர்ப் பிரகடனம்!

- "தேவையான ஒவ்வொரு போர்க் கருவியையும் பயன்படுத்துவோம்".
- "அமெரிக்கர்கள் ஒரு சமரை மட்டுமல்லாமல் என்றுமே கண்டிராதவாறான நீண்ட போர் நடவடிக்கையையே எதிர்பார்க்க வேண்டும்".
- "ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பிரதேசமும் இப்போது ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். நீங்கள் எங்கள் தரப்பில் இருக்கிறீர்கள் இல்லாவிட்டால் பயங்கர வாதிகளின் தரப்பில் இருக்கிறீர்கள்".
- "ஆயுதப் படைகளை விழிப்பாயிருக்கச் சொல்லியிருக்கிறேன். அதற்கு ஒரு காரணம் உண்டு. அமெரிக்கா செயற்படும் வேளை வந்துவிட்டது. நீங்கள் நமக்குப் பெருமை சேர்ப்பீர்கள்".
- "இது உலகின் சண்டை, இது நாகரிகத்தின் சண்டை".
- "நீண்ட போரட்டமாக இருக்கப் போகிற ஒன்று பற்றி உங்களது பொறுமையை வேண்டுகிறேன்".
- "எங்களது காலத்தின் பெருஞ்சாதனையும் எங்களது காலத்தின் பெரும் நம்பிக்கையும் இப்போது எங்கள் மீதே தங்கியுள்ளது".
- "இம் மோதலின் போக்கு இன்னும் தெரியாமலே உள்ளது. எனினும் அதன் விளைவு உறுதியானது.... கடவுள் நடுநிலையானவரல்ல என நாம் அறிவோம்".

(இவற்றுக்கு விளக்கம் தேவையில்லை என்று நினைக்கிறோம்.)

## கேள்விகளுக்கு பூமிதாசன் பதிலளிக்கிறார்

**கேள்வி :** யூ.என்.பியும் விடுதலைப் புலிகளும் நிரந்தர போர் நிறுத்தத்தை ஏற்பாடு செய்யும் நேரத்தில் இந்தியா பிரபாகரனை கொலை வழக்கு விசாரணைக்கு அனுப்புவதை ஏன் வற்புறுத்துகிறது?

சங்கரதாஸ், கொழும்பு 8.

**பதில் :** இந்தியாவின் அதிகார வர்க்கம் இந்தச் சமாதானத்தைப் பற்றி என்ன லாபம் என்றே கணக்குப் போடுகிறது. எனவே, இந்தப் போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் நோர்வே மூலம் அமெரிக்காவுக்கே கூடிய நன்மையாகும் என்று இந்தியா அஞ்சுகிறது. பேச்சு வார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதை விட, அந்த விசாரனை மிரட்டலைப் பாவித்து, இந்தியா இலங்கை அரசிடமிருந்து தனக்கான சில சலுகைகளைப் பெற முயலுகிறது. அதில் வெல்லவும் கூடும். மற்றும்படி பிரபாகரனைக் கூண்டில் நிறுத்துகிற அளவுக்கு இந்திய நீதி பற்றி அவர்கட்கு அக்கறை கிடையாது.

**கேள்வி :** ஜே.வி.பி. ஒரு இனவாத, பாஸிஸக் கட்சி என்று முன்னாள் ஜே.வி.பி தலைவர் லயனல் போப்பகே கூறியிருக்கிறாரே?

மா. முருகவேள், வத்தளை.

பதில் : நமது கட்சி எப்போதிருந்தோ எச்சரித்து வந்த விடயம் இது. ஆனால் சில தமிழ்த் தேசியவாதிகள் கூட அதை ஏற்க வில்லையே. 1998 வரை கூட, ஜே.வி.பி பற்றி மழுப்பிய முன்னாள் இயக்கக்காரர்கள் இருக்கிறார்கள்.

போப்பகே சொல்வதில் உண்மை மிகவும் உண்டு. ஆனால் ஜே.வி.பியில் சிங்களப் பேரினவாதம் வேரூன்றிய காலத்தில் அவரும் அதற்கு நீரூற்றியவர் தான், அதையும் அவர் மேலும் விளக்கினால் ஜே.வி.பியின் வரலாறு பற்றி நாம் முழுமையாக அறிய உதவும்.

**கேள்வி :** முதுபெரும் தலைவர் சிவசிதம்பரம் தன்னை ஒரு அஞ்ஞானி என்றும் இனிமேற்கொண்டு விடுதலைப் புலிகளின் தொண்டனாகத் தன் வாழ்நாளை முடிப்பேன் என்றும் ஏன் சொல்லியிருக்கிறார்?

வ.ச.சிவசுப்பிரமணியம், யாழ்ப்பாணம்

பதில் : அவர் ஏன் சொன்னார் என்று நிச்சயமாகக் கூறுவது கடினம். அதன் பொருள் ஏதென்றால் ஒரு அஞ்ஞானக் கூட்டம் தான் 50 வருடங்களாகத் தலைமை தாங்கி வழிநடத்தி வந்திருக்கிறது என்பது தான். இப்போது பாராளுமன்றத்துக்குப் போயிருக்கிற தலைவர்களுடைய ஞானம் என்ன நிலையில் உள்ளது? யூ.என்.பி. ஆட்சியைத் தக்கவைக்க மட்டுமே அவர்களுக்கு அக்கறை இருக்கிறது அல்லவா, இதற்காக அவர்கள் மன்னிப்புக் கேட்கும் வரை தமிழினம் காத்திருக்க வேண்டுமா?

**கேள்வி :** அண்மை நாட்களில் மலையக அமைச்சர்கள் ஆறுமுகம் சந்திரசேகரன் ஆகியோர் கிழக்கிற்கு அடிக்கடி பயணம் செய்து உரைகள் ஆற்றி வருகிறார்களே. அதன் பின்னணி என்ன?

மா. மகேந்திரராஜா, தலவாக்கலை.

பதில் : ஒரு மர்மமும் இல்லை. பின்னணியும் கிடையாது. மலையக மக்களது சம்பள உயர்வு மற்றும் பிரச்சினைகள் பற்றிப் பேச நேரமில்லாது போய்விட்டது. ஏனென்றால் நாங்கள் முழு அமைச்சர்களாதலால் வடக்கு கிழக்கு உட்பட எங்கும் செல்ல வேண்டியிருந்தது எனக் கூறுவதற்குத் தான்.

**கேள்வி :** முன்னைய புனர்வாழ்வு அமைச்சர் இறக்கப்பட்டுவிட்டார். தற்போதைய புதிய கோவில் அமைச்சர் வந்துள்ளார் அவர் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

அ. செல்வராசா, நல்லூர்.

பதில் : முன்னையவர் ஒருகையை உயர்த்தி மறுகையால் வாங்கிதானும் எடுத்து சனத்திற்கும் ஏதோ செய்தார். ஆனால் புதிய அமைச்சர் இரண்டு கைகளையும் உயர்த்தி கொடுக்க வேண்டியவற்றை கொடுத்து எடுக்க வேண்டியதை எடுக்க தெரிந்தவர். அதனால் தான் வியாபாரத்திலும் முன்னேறி அரசியலிலும் அந்தமாதிரி இடத்திற்கு சென்று விட்டார். எல்லாம் தமிழர் பெயரால்தான்.

**கேள்வி :** பாராளுமன்றம் சென்ற அரசியல்வாதிகளிடம் நேர்மையான அரசியலை எதிர்பார்க்க முடியுமா?

வி. தங்கராசா, வவுனியா.

பதில் : அவர்களிடம் நேர்மை இருந்திருந்தால் பாராளுமன்றத்திற்கு செல்ல வாய்ப்பு இருந்திருக்காது அல்லவா?

**கேள்வி :** நீங்கள் யூஎன்.பியை சிங்கள இனவாதக் கட்சி என்கிறீர்கள். தமிழ் மக்களின் தலைவர்கள் அப்படிக் கூறவில்லையே. யூஎன்.பி. சமாதானத் தீர்வை முன்னெடுக்கும் என்று சொல்கிறார்கள். ஏன்?

ம. இரத்தினம், வவுனியா.

பதில் : இன்றைய தேசிய இனப்பிரச்சினைக்கு வித்திட்டதே யூஎன்.பி. தான். சிங்களப் பேரினவாத அரசியலைச் சென்ற நூற்றாண்டு அறிமுகப்படுத்திய யூஎன்.பி. 1948ல் மலையகத் தமிழரின் வாக்குரிமையைப் பறித்தது. அதற்கு முன்பே திட்டமிட்ட குடியேற்றங்களை கல்லோயாவில் தொடங்கி கந்தளாய், அல்லை என்று விரிவு படுத்தியது 1956ல் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழிக்கும்படி தூண்டியது. இப்படி நீண்டுகொண்டு போன கதை 1977, 1983 வன்முறைகளாக வெடிக்க யூஎன்.பியே காரணம். இனஒழிப்புப் போரைத் தொடங்கியதும் யூஎன்.பி. 2000ஆம் ஆண்டு புதிய சட்டத் திருத்தத்தை எதிர்த்து பாராளு மன்றத்தில் ரகளை செய்த யூஎன்.பி. இன்று மாறிவிட்டதா? பொருளாதார, நெருக்கடியும் வெளி நெருக்கு வாரங்களும் இன்று போரை நிறுத்து வதற்கு வசதியான நிலையை உண்டாக்கியுள்ளன. இது மிக நல்ல விடயம். ஆனால் தமிழ் மக்களுக்கு எதிரான பாரபட்சத்தை ஒழிக்க யூஎன்.பி என்ன செய்யும்? அதற்கான வேலைத்திட்டம் அதனிடம் உண்டா? திரும்பவும் யூஎன்.பிக்குள் வந்துள்ள சிஹல உறுமய பிரமுகர்கள் மனம்மாறி விட்டார்களா?

யூஎன்.பி. எடுக்கும் சமாதான முயற்சி பற்றி என்ன சந்தேகம் இருந்தாலும் அதை வரவேற்று ஊக்குவிப்போம். ஆனால் அதை நம்பி அயர்ந்து போகாமலிருப்போம். இது தான் எமது நிலைப்பாடு.

**கேள்வி :** புதிய ஜனநாயகக் கட்சி ஏன் புதிய இடதுசாரி முன்னணியிலிருந்து விலகியது? அந்த முன்னணியில் யார் இருக்கிறார்கள்?

முத்து தம்பிஐயா, மாத்தளை.

பதில் : புதிய இடதுசாரி முன்னணி யைக் கட்டி எழுப்ப மும்முரமாக உழைத்த கட்சி நம்முடையது. அதைச் சீர்குலைக்க ஜே.வி.பி. சில சூழ்ச்சிகளைச் செய்தது. பதவி மோகம் கொண்ட கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினாவை அது ஆசைக் காட்டித் தன் பக்கம் இழுத்தது. பதவி ஆசையால் புதிய இடதுசாரி முன்னணி யை கலாநிதி கருணாரத்தினா செயலற்றதாக்கினார். அதன்பின்பு தானே புதிய இடதுசாரி முன்னணி என்று அறிவித்தார். முன்னணியின் தோழமைக் கட்சிகள் சில குழம்பிப் போன நிலையில் இருந்ததால் அவரால் அதைச் செய்ய வசதியாகியது. அவருக்கு உடந்தை யாயிருந்த முஜிபுர் ரகுமான் மூலம் நவசமசமாஜக் கட்சியும் முஸ்லிம் விடுதலை முன்னணியும் சேர்ந்தே புதிய இடதுசாரி முன்னணி என்று நாடகமாட முடிந்தது. இப்போது முஜிபுர் ரகுமான் சந்திரிகாவுடன் சேர்ந்த பிறகு நவசமசமாஜக்கட்சி மட்டுமே புதிய இடதுசாரி முன்னணி என்ற பேரில் உலாவுகிறது.

**கேள்வி :** ஜே.வி.பி. இந்தளவுக்கு இனவாதம் பேசும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. ஏன் இவ்வாறு மாறினார்கள்?

அ. பசுபதிராஜா, நுவரேலியா.

பதில் : அவர்களுடைய ஆரம்பமே இனவாதம் தான். 1966ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து இனவாத ஊர்வலம் நடத்திய வேளையில் மறைந்த ஜே.வி.பி. தலைவர் றோகண விஜய வீராவும் அதில் கலந்து கொண்டார். அதில் 'மசாலவடே அப்பட்ட எப்பா' என்றும் முழங்கிக் கொண்டவர். அன்று தலைவர் ஆரம்பித்ததை இன்று தொண்டர்கள் வேகப்படுத்தி நிற்கிறார்கள். இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

---

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [2]

செண்பகன்

தமிழ்த் தேசியத்தின் உலகக் கண்ணோட்டம் ஏகாதிபத்திய பெருவல்லரசாதிக்க நலன் சாரந்தே அமைந்திருந்தமை என்பது தற்செயலாக நிகழ்ந்த ஒன்றன்று.

"இனமேன்மை வாதக் குறுநலப்பித்தம்" முற்றிவிட்டதன் அறிகுறியே இது என்று நாம் ஒரு சூத்திரத்தைச் சொல்லி 'விளக்கம்' தேடலாம். ஆனால் இவ்வாறான சூத்திரிப்புக்கள் பலநூறை நாம் கண்டுகொண்டாலும், தூலமான வரலாற்று நிலைமைகளையும் அவற்றின் ஏதுக்களையும் விளங்கிச் செயற்பட்டாலொழிய "அமைதிகாணல்' வெறும் கானல் நீராகவே நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கும்". என்று முருகையன் எச்சரிக்கை செய்திருப்பதினை நாம் நிராகரித்து விட முடியாது.

தமிழ்த் தேசியத்தின் மூலவர்கள் தமது வர்க்க நலன்சார்ந்த உலகக் கண்ணோட்டத்தில் தமிழர் விடுதலையைச் சாதிக்க முனைந்தமையே உலகு தழுவிய போர்நோய்க்கான மூலகாரணமாகும்.

கொலனித்துவ காலத்தில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய அமெரிக்க மிஷனறியின் நகர்வு தொடக்கம், சமகாலமாகிய நவகொலனித்துவ யுகத்தில் அமெரிக்க மாநிலமான மசாசூசெட்ஸ் மாநிலத்தில் தமிழீழப்பிரகடனம் செய்யப்பட்ட சம்பவங்கள் ஈறாக இரத்த உறவு ருசுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆங்கில மோகமும் அந்நியவிசுவாசமும் என்பது இத்தகு உலகக்கண்ணோட்ட நோயின் குணங்குறிகளேயாகும். தேசிய இனமுரண்பாடு சிநேகமானவை என்ற தளத்திலிருந்து பகைமயான முரன்பாடாக ஜே.ஆர். அரசாங்கத்தினால் 'யுத்தம் என்றால் யுத்தம்' எனப்பிரகடனப்படுத்தப்பட்ட அதே சமயம் முகத்துக்கு குத்துவது போல் பாவனை செய்து வயிற்றுக்கு குத்தும் வல்லமை கொண்ட ஜே.ஆர்.திறந்த பொருளாதாரம் மூலம் பூகோள மயமாதலின் எல்லா வினைகளுக்கும் இலங்கையைத் திறந்துவிட்டார்.

இச்சூழ்ச்சிக்குப் பலியானதில் தமிழர்களே முதலிடம் வகித்தனர். பொருளாதார காரணங்களாலும் இனப்பகை காரணமாகவும் புலம்பெயர்ந்தனர். இனப்பகையை விடவும் பொருளாதாரப் புலப்பெயர்வுகளே முதன்மை யுடையன. இனப்பகை போன்று இயக்கப்பகை காரணமாகவும் குறிப்பிடத்தக்களவில் புலம் பெயர்ந்தனர்.

இப்புலப் பெயர்விலும் வர்க்க நலனுக்கு ஆதிக்க மனோபாங்கும் பாதுகாக்கப்பட்டவாறே பயன்பட்டன. பிரிட்டன் அமெரிக்கா, ஒஸ்ரேலியா, கனடா ஆகிய ஆங்கில முதன்மை நாட்ட நாடுகளில் புகலிடம் பெறுவதை அதி கௌரவமாக அங்கீகரிக்கப்பட்டன.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் கோருவது இரண்டாம் தரத்திலும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் நிர்ப்பந்தத்திலும் இந்தியாவுக்கு உயிரைக் காப்பாற்றும் அகதி வாழ்கையிலுமாக ஈழத்தமிழரின் வாழ்வு நிலை குலைந்தது மறுபுறம்.

## பூகோளமயப் பூகம்பத்தை புரியாமல் போனது ஏன்?

இவற்றுக்குமப்பால் பேரினவாத இராணுவ முற்றுகைகளால் இலங்கைக் குள்ளேயே தமிழர்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றார். மிக அதிகமாக சிங்கள மக்கள் வாழும் வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயே அதிகமான மக்கள் இடம் பெயர்ந்து தமது கல்வி, கலாச்சார வாழ்வை நிலைப்படுத்திக் கொள்கின்றனர்.

பலஸ்தீனர் இஸ்ரேலுக்குள் புகலிடம் கோராமல் பிற மத்திய கிழக்கு நாடுகளை நாடினர். இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்கள் சிங்களப் பகுதிகளில் வாழ்வது உகந்ததென எண்ணுவது முரண்நகையாகும்

தமிழ்த் தேசியத்தின் விடுதலைப் போராட்டத்தினை சர்வவியாபகமாக்குவதற்குப் பதிலாக மேற்குலக மயமாக்கும் ஆசையே அதிகம் எனலாம்.

தமிழர் பிரச்சினையை உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. உலகத்துக்கு தமிழர் ஒற்றுமையைக் காட்ட ஒன்றாகப் போடுங்கள் புள்ளடி என்று தேர்தல்களில் முழக்கம் கேட்பது வழக்கமாகிவிட்டது.

தமிழ்த் தேசியம் காட்டிய உலகம் என்பது பலஸ்தீனத்தின் சுயநிர்ணயத்தைப் பறித்த இஸ்ரேலின் வழியைப் பற்றிக்கொண்டது.

உலகம் முழுமையும் வாழும் ஆறு கோடி தமிழர்களில் எவருக்கும் எங்கும் தேசப்படத்தில் ஒரு நாடு கிடையாது எனவே அதனை ஈழத்தமிழன் மட்டுமே 'தமிழீழத்தை பிரகடனப்படுத்துவதன் மூலம் உலகம் முழுமையும் வாழ்ந்த இஸ்ரேலியர்கள் நாட்டை உருவாக்கியது போல் நாமும் தமிழீழத்தை வெல்வோம், என்றனர்.

ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர் என்பதற்குப் பதிலாக உலகமெங்கும் வாழும் தமிழரின் தலையில் தமிழீழ முடி சுமத்தப்பட்டமை என்பது தமிழ்த்தேசியத்தின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடாகும். 'சிங்கள ஏகாதிபத்தியத்திடமிருந்து தமிழ் ஈழத்தை மீட்போம் என்று தமிழ்த் தேசியவாதிகள் மிக நீண்ட நாட்களாகவே சொல்லி வந்தனர்.

உலகப் பெருவல்லரசு ஆதிக்கத்தின் மறைப்புத் திரையாகவே 'சிங்கள ஏகாதிபத்தியம்' என்ற பதம் பாவிக்கப் பட்டது. சிங்களப் பேரினவாதம் என்று இடதுசாரிகளால் பயன்படுத்தப்பட்ட சொல்லை நீண்ட நாட்களாக தெரிந்து கொள்ளாதவர்களாகவே இருந்தனர். உலக ஏகாதிபத்தியத்துடன் உறவாடுவதற்கு உதவும் வகையிலேயே அமெரிக்கா புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப் படுத்திய இன்றைய நாள்வரை அமெரிக்காவை ஏகாதி பத்தியமாகவோ அதன் உலகப் பயங்கர வாதத்தையோ

தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒரு சொல்லாலும் வெளிப் படுத்தத் துணிந்ததில்லை.

உலகமக்களின் - தேசங்களின் ஆதரவைக் கோருவதே ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தின் தேவையாகும்.

ஒடுக்கப்பட்ட மூன்றாமுலக நாடுகள் ஆசிய, ஆபிரிக்க லத்தின் அமெரிக்க நாடுகள் மத்தியில் தமிழ்தேசியத்தின் மீதான ஒடுக்குமுறைகளை எடுத்துரைத்து விரிவாக்குவதே விடுதலையை விரும்பும் தேசத்தின் செயற்பாடாக அமைய முடியும்.

உலக மயமாக்கலின் மூலம் தேசங்களின் - இறைமையை பண்பாட்டை - மறுத்து மேற்குலக ஆதிக்கத்தையும் பண்பாட்டையும் ஒரு வழிப்பாதையாக ஒடுக்கப்பட்ட தேசங்கள் மீது திணிக்கும் ஒற்றைப் பரிமாணத்தை உணர்ந்து கொள்ளாதவர்களாகவே தமிழ்த் தேசியவாதிகள் தம்மை வெளிப்படுத்துவது அவர்களது ஆதிக்க மனோபாவத்தின் வர்க்கக் குணநலன் சார்ந்த விடயமாகும்.

தமிழ் மக்களின் தனித்துவத்தையும் தன்னிறைவான பொருளாதாரத்தையும் தமிழ்ப் பிரதேசத்தில் கட்டமைப்பது காலத்தின் தேவையாகும். அதை தவிர்த்து பூகோளமயப் பூகம்பத்தைப் புரியாதவர்கள் போல் தமிழ் தேசியவாதிகள் அத்தகைய ஆக்கிரமிப்பு நாடுகளுடனேயே தமது நட்பைப் பூண்டுகொள்ள ஆதங்கப்படுவது ஆச்சரியத்துக்குரியதல்ல.

அயல் நாடுகளின் தயவில் அந்நாடுகளின் அனுசரனையுடன் தமிழீழத்தை பிரித்து விடலாம் என்ற பேராசை விரலுக்கு மிஞ்சிய வீக்கத்துக்கான சிந்தனையாகும்.

இந்திய தேசத்தின் உதவியுடன் பங்களாதேஷ். பிரிக்கப்பட்டதுபோல் 'யாழ் தேஷ்' பிரிக்கப்படும் என்றும் இந்தியப் பிராந்திய வல்லரசைப் பயன்படுத்தி தமிழீழம் காணப் புறப்பட்ட தமிழ்த் தேசியத் தலைவர்களின் கனவு 1987-90களில் சிதைந்து போனது.

இந்தியாவைப் பயன்படுத்தப் புறப்பட்ட தமிழ்த் தேசியத்தலைவர்கள் இந்தியாவின் பலிக்கடாக்களாக்கப்பட்டமை வரலாற்றுப் பாடமாக்கப்பட்டுள்ளது.

இனி, அமெரிக்கா பிரிட்டன் போன்ற பெரு வல்லரசுகளைப் பயன்படுத்தும் முயற்சியில் தமிழர் தேசியத் தலைவர்கள் வீறுடன் புறப்பட்டுள்ளனர். இதன் விளைவுகளை மிகக் குறுகிய காலத்தில் நாம் படித்துக்கொள்ள எமது பாடப் புத்தகங்களைத் திறந்து வைப்போம்.

அமெரிக்காவைப் பயன்படுத்த முனைந்த இஸ்லாமியத்தீவிரவாதிகளான ஒஸாமா பின்லாடன், ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் ஆகியோரை உலகப் பயங்கரவாதிகளாகப் பிரகடனப் படுத்தி தனது நலனுக்கு விட்டுக் கொடுக்காத போது அந்நாடுகளுக்கு எதிராக உலக ஆதரவுடன் ஆக்கிரமிப்பை செய்தமை மிகக் கிட்டிய பாடமாகும்.

தமிழ்த் தேசியத்தை உலக ஆக்கிரமிப்பாளரின் அனுசரனையில் மீட்க முடியுமா என்பது பற்றி சந்தேகமின்றி மறுபரிசீலனை செய்வதும் உலகக் கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதும் இன்று எம்முன்னுள்ள முன்நிபந்தனையாகும்.

உலகத் கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதன் மூலம் இலங்கைவாழ் முஸ்லீம் சிங்கள மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்கும் உலகம் முழுமையும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்கும் தமிழ்த் தேசியம் தயாராகுமா?

கொலனித்துவத்தின் மூலம் தமிழ்த் தேசியம் பரம்பரையாகப் பெற்ற ஆதிக்க உலகக் கண்ணோட்டத்தை வீசியெறிந்துவிட்டு நவகாலனித்துவத்தின் நாசகாரச் செயல்களைப் புரிந்து கொள்வதே விடுதலை விருட்சத்துக்கான விதையை ஊன்றுவது போலாகும். நடக்குமா?

# 'மார்க்ஸ் ஒரு நல்ல வித்துவான்'

நூல் : கார்ள் மார்க்ஸின் வாழ்வும் போதனைகளும்
ஆசிரியர் : நா. சண்முகதாசன்
வெளியீடு : மார்க்சிச கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம்
விலை : ரூபா. 100.00

ஏங்கல்ஸ் எப்போதுமே தன்னலமற்றவராகத் தனக்கு இரண்டாமிடத்தை மட்டுமே ஒதுக்கிக் கொண்டவராகவும் இருந்தார். ''மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் நான் ஒத்து ஊதுகிறவனாக இருந்தேன். இதில் சிறப்புப் பெற்றுள்ளேன். மார்க்ஸ் போல ஒரு நல்ல பிரதம வித்துவான் எனக்கு அமைந்ததற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று ஏங்கெல்ஸ் கூறியிருக்கிறார்.

'அவர்களது நட்பைப்பற்றி லெனின் கூறியதாவது: ''முன்னோரிடையே காணப்பட்ட மனித நட்பைப் பற்றிய எந்த நெஞ்சை உருக்கும் கதையையும் மீறும் உறவுகொண்ட அறிஞர்களும் போராளிகளுமான இருவராலேயே தனது அறிவியல் உருவாக்கப்பட்டது என ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் சொல்லக் கூடும்''

இவ்வாறாக மார்க்ஸ் - ஏங்கல்ஸ் நட்பைப் பற்றி தோழர் நா. சண்முகதாசனால் 1983ம் ஆண்டில் கார்ள் மாக்ஸின் மறைவு நூற்றாண்டு நினைவாக எழுதப்பட்ட இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

இந்நூல் நான்கு இயல்களைக் கொண்டமைந்துள்ளது. மார்க்ஸின் வாழ்க்கை, வரலாற்றியல் பொருள் முதல்வாதம், மார்க்ஸின் பொருளியற் கோட்பாடு, அரசுபற்றி மார்க்ஸியக் கொள்கை ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரைகள் தோழர் 'சண்'ணால் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுள்ளன. இவ்வாங்கில மூலமும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது. ''இம்மூலப் பிரதியை பேராசிரியர் சி. சிவசேகரம் இலகு தமிழிலும், எளிமையான வசன அமைப்பிலும் உணர்வு கொண்ட வசன வரிகளிலும்'' மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாக வெளியீட்டாளர் குறிப்பிட்டுள்ளனர்.

''வாழும் சிந்தனையாளர்களுள் அதியுயர்ந்தவர் 1883ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி மாலை இரண்டே முக்கால் மணிக்கு சிந்திப்பதை நிறுத்தி விட்டார்'' என மார்க்ஸ் மண்ணுள் அடக்கம் செய்யப்பட்ட தருணம் ஏங்கெல்ஸ் தனது இரங்கலுரையில் குறிப்பிட்டார்.

மார்க்ஸ் பல ஐரோப்பிய நாட்டு புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். புலம் பெயர்ந்து வாழ்ந்தார். நாடுகடத்தப்பட்டார். இறுதியில் லண்டனில் 35ஆண்டுகள் வாழ்ந்து "மூலதனம்" நூலையும், பிற நூல்களையும் ஏங்கஸ்சுடன் இணைந்தும் எழுதியுள்ளார்.

மாக்ஸின் பட்டப்பெயர் "சோனகன்" (Moor) என்பதாகும் என்ற தகவலும் தரப்பட்டுள்ளது. இரண்டாவது இயலில் வரலாறு பற்றிய பொருள் முதல்வாதக் கொள்கை ஆராயப்பட்டுள்ளது. "எவ்வாறு டார்வின் உயிர்ப்பொருள் இயல்பின் விருத்தி விதியைக் கண்டறிந்தாரோ அவ்வாறே மனித வரலாற்றின் விருத்தி விதியை மார்க்ஸ் கண்டறிந்தார். ''என ஏங்கல்ஸ் குறிப்பிட்டார்."

இயங்கியலின் அடிப்படை அம்சம் மாற்றம் ஆகும். இம்மாற்றமானது சர்வவியாபகமானதும் பொருளின் சகல வடிவங்களினுள்ளும் பொதிந்துள்ளவையான முரண்பாடுகளின் அடிப்படையில் நடைபெறுகிறது. விருத்தி அல்லது அசைவு என்பது ஒரு முரண்பாட்டினுள் எதிர் மறைகளது மோதலின் விளைவானதாகும் என குறிப்பிடப்படுகிறது.

மூன்றாவது இயலில் மார்க்ஸின் பொருளியற் கோட்பாடு ஆராயப்பட்டுள்ளது.

மூலதனத்தின் முன்னுரையில் "நவீன சமுதாயத்தின் இயக்க விதியை வெளிவெளியாக்குவதே இந்த நூலின் அறுதியான இலக்கு'' என மார்க்ஸ் கூறியுள்ளார்.

மேலும் மூலதனத்துக்கு மாக்ஸ் வழங்கிய புகழ்பெற்ற வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. "மூலதனம் என்பது இறந்த




உழைப்பு. அது இரத்தங் குடிக்கும் பிசாசு போல வாழும் உழைப்பை உறிஞ்சியே வாழ்கிறது. எவ்வளவு அதிக உழைப்பை அது உறிஞ்சு கிறதோ அவ்வளவு அதிகம் அது வாழ்கிறது" என்பதே அவ்வாக்கியமாகும்.

நாலாவது இயலில் அரசு பற்றிய மார்க்சியக் கொள்கை விளக்கப்பட்டுள்ளது.

"அரசு" என்பதன் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. ''ஆயுதப்படைகள் என்ற பிரதான உருவிலுள்ள அரசு இயந்திரத்தையே அரசாங்கம் என நாம் விளங்கிக்கொள்கின்றோம். நீதி பரிபாலனம், சிறைச்சாலைகள், கொழுத்த சம்பளம் பெறும் உயர் அதிகாரத்துவம் ஆகியனவே அரசு இயந்திரத்தின் மற்றைய வடிவங்களாகும். இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்தே அரசு அல்லது அரசு இயந்திரம் எனக் கூறுகிறோம்'' எனச் சண் தெளிவாக்கியுள்ளார்.

மார்க்கியம் பற்றிய அக்கறையுடையோரும் மார்க்ஸிய விஞ்ஞான அறிவுபெற ஆர்வமுடையோரும் படிக்க வேண்டிய இந்நூல் தோழர் 'சண்'ணின் 9வது ஆண்டு ஞாபகார்த்த வெளியீடாக அச்சிடப்பட்டுள்ளமை இலங்கைத் தமிழ் வாசகர்களுக்கோர் நற்பேறாகும்.

தமிழ் ஆங்கிலம் இருமொழிகளில் ஒரே நூலாக வெளிவந்திருக்கும் இந்நூலின் விலை ரூபா 100ஆகும். சவுத் ஏசியன் புக்ஸ் உட்பட பிரதான புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# முன்னை இட்ட தீ

முதலாளியத்தின் பெருமிதத்தைக் கூறும்
இரட்டைக் கோபுரங்கள் தீப்பற்றி எரிகின்றன,
வானுற நிமிர்ந்த தூண்கள் சாம்சனின் கைகளில்
தூளாக நொருங்குகின்றன.
முழு உலகத்தையும் கைப்பற்ற அமெரிக்கா வகுத்த
ஐங்கோண வியூகத்தின்
ஒரு மூலை தகர்கின்றது.
தீ பரவுகிறது. மரண ஓலங்களும் வேதனைக்கூச்சலகளும்
புகை மூட்டத்தினூடு தடுமாறி வெளியேறுகின்றன.
தகவற் தொழிநுட்பம்
உடனுக்குடன் செய்திகளைப் பரிமாறுகிறது.
அதிர்ச்சி, வேதனை, ஆவேசம், அழுகை, தவிப்பு......
சிதைவுகளின் நடுவில் மனிதாபிமானம் தலை நிமிர்கிறது:
அழுத கண்களைத் துடைக்கிறது:
துவண்ட தோள்களைத் தூக்கி நிறுத்துகிறது.

பழிக்குப் பழி என்ற மன நிறைவு:
பழிக்குப் பழி என்ற மன உளைவு.
என்றோ தொடங்கி இன்னமும் முடியாத போர்
இன்னுமொருமுறை பிரகடனமாகிறது.
சிறிய பயங்கரவாதத்தின் மீது பெரிய பயங்கரவாதத்தின்
புதிய போர் பிரகடனம்
மீசையில் ஒட்டிய மண்ணைப்
பிறர் காணாமற் துடைக்கிறது.

உலகின் இன்னுமொரு மூலையில்
செய்தி ஊடகங்களின் கவனிப்பின்றிக்
குண்டுகள் விழுகின்றனர்
குழந்தைகள், இளையோர் முதியோர்
பால் வேறுபாடின்றி அழிகின்றனர்
அவர்களது அவலத்தின் குரல் வானலைகளைத் தொடுவதில்லை,
எங்கள் செவிகளில் விழுவதில்லை.

மரணங்கள் மலிந்த
பாலஸ்தீனத்தின் பிற்பகற் பொழுதொன்றில்
அமெரிக்காவின் அவலம்
குழந்தைகளை, இளையோரை, முதியோரை
வீதிக்கு வரவழைக்கிறது.
மரணங்களால் மரத்த நெஞ்சங்களை
அமெரிக்காவின் அவலம் மகிழ்வூட்டுகிறது.
அமெரிக்காவின் அவலம்
கைதட்டலாக, பாடலாக, இனிப்புப் பண்டமாக
வீதி வழியே பரிமாறப்படுகிறது.
பாலஸ்தீனத்தின் பிற்பகற் பொழுதொன்றில்
ஒரு பாலஸ்தீன அராபியன்
மனம் நொந்து அழுகிறான்.
நேற்று இறந்த தனது நண்பனுக்காகவோ
இன்று இறக்கக் கூடிய ஒரு உறவினனுக்காவோ
நாளை தனக்கு நிகழக் கூடிய அழிவுக்கு அஞ்சியோ இல்லை.
கோபுரங்களை மோதி அழித்த விமானங்களிலோ
இராணுவச் செயலகத்தை மோதி உடைத்த விமானத்திலோ
குறைந்தது குறி தவறி விழுந்த விமானத்திலோ கூடத்
தானொரு சாட்சியாகவேனும் அமர முடியவில்லையே என்று!

சிவா

# முருகையனின் கவிதை நூல்

# ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்

நூல் : ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்
விலை ரூபா : 125.00


கவிஞர் முருகையன் எழுதி தேசிய இலக்கியப் பேரவையின் மாதாந்த புத்தகப் பண்பாட்டுக்கான நூல் வெளியீட்டரங்கில் வெளியிடப்பட்ட இன்னுமொரு நூலின் பெயர் 'ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்' என்பதாகும்.

இது ஒரு கவிதைத் தொகுப்பாகும். 1952 - 1957 கால இடைவெளியில் எழுதப்பட்ட தனிக்கவிதைகள் 'உயிரின் வேகம்' என்ற தலைப்பிட்டும் 1984–1998 கால இடைவெளியில் எழுதப்பட்ட தனிக்கவிதைகள் "நீரும் நெருப்பும்" எனத் தலைப்பிட்டும் தொகுக்கப்பட்டுள்ளன.

'உயிரின் வேகம்' என்ற கவிதையில் புதுமை நூல்கள் குவியும் வேகம்/ புகலலாமோ நன்று நன்று / மதுவை வெல் நின்சுவையை இங்கு வரையலாமோ. இனிமை இனிமை எனத் தொடங்கி "தமிழிதன்றோ பெருமை மூச்சு, / தங்கமன்றோ கவிதை வெள்ளம், / தமிழிதன்றோ நெஞ்சில் உண்மைத்/ தமிழன் கொள்ளும் உயிரின் வேகம்! / எனப்பாடுகின்றார்.

புத்தகங்கள் கவிதைப் புனலாய் பாயும் வேகமே தமிழ் மொழியின் உயிராய் தமிழனின் உயிரின் வேகமாய் கவிதை உயிர்ப்பாய், ஊடு போய் எதையும் உள்புகுந்தேறி / ஓடி ஓடி அணுகும் நுனி கொண்ட மோடியான வடிவேலது வாங்கி / மூசி வீசுபவர் பாவலர் ஆவார்" என்ற முருகையனின் மூச்சின் வேகம் 1952ல் தமிழின் உயிராகிறது. தமிழர் பண்பாட்டுப் புரட்சியை விரும்பிய முருகையனின் கவிதை மொழிவு படிக்கப்படிக்க இனிமை பயப்பதாகும்.

"நீரும் நெருப்பும்" கவிதை 1984ல் எழுதப்பட்டது. "திரும்பி நாம் பார்க்கும்போது சென்று போய் மறைந்த ஆண்டு / நெருப்புகள் நீர்களாக / நிகழ்ந்ததை மறப்போமா? / எரிந்ததும், கருகி நைந்தே இடித்தும், தூள் தூளாகி / நொருங்கிய கதையுமாக / நொடிபல அமைத்து செல்ல / வளர்ந்த காலம்




அந்த / விரிகையாய் வளர்ந்த ஆண்டு / பிரிந்து போய் விடட்டும் என்று பிரார்த்தனை செய்கின்றோம், நாம" என்று தொடங்கி இறுதியில் "நீர்கள் நெருப்புகள் நீங்கி / மக்கள் வாழ் / ஊர்கள் ஊர்களாய் வருமா? போர்கள் குறையுமா, புதிய ஆண்டில்லே" என நிறைவு பெறுகிறது. மீண்டும் 83 போன்ற கலவரம் வரா விடினும் 2002-லும் போர்கள் குறையு மாய் போல் தெரிந்தாலும் ஊர்கள் ஊர்களாய் வருமா என்ற கவிஞரின் வினாவுக்கு விடை என்றுதான் கிடைக்குமோ?

கட்டுண்டோம். பொறுத்திருப்போம் காலம் மாறும்.

"இந்த மண்ணில் ஒவ்வொரு புல்லையும் / ஒவ்வொரு பூவையும் பாடுகிறோம் / இங்கு தோன்றும் ஒவ்வொரு / பிள்ளையும் இறைவன் ஆவதை நாடுகின்றோம்./ ஒவ்வொரு புல்லையும் பாடுகின்றோம். ஒவ்வொரு பூவையும் சூடுகிறோம் / இறை நீதியின் எதிரி தூள்பட / எறியும் ஓர் வழி நாடுகிறோம் என்று புல்லுக்கும் பூவுக்கும் பிள்ளைக்குமிடையில் சமநிலை காணும் கவிஞர் புல்லாலும் பூவாலும் பிள்ளையாலும் எதிரி தூள்பட எறியும் ஓர் வழி நாடும் கவிஞரின் ஒடுக்குமுறைக்கெதிரான தர்மாவேசம் பொங்கி வழிவதை இக்கவிதை முதல் நூலின் முழுமையும் நாம் தரிசிக்க முடிகிறது.

"முருகையனின் கவிதை" நெஞ்சின் ஆழமான தமிழுணர்வை தமிழ் வெறியினின்று வேறுபடுத்திக் காட்ட மட்டுமல்லாது முருகையன் என்கிற கவிஞர் பற்றிய முழுமையான மதிப்பீட்டை இயலுமாக்கவும் இக்கவிதைத் தொகுதி பெரும் பங்களிக்கும் என்பது நம்பிக்கையாகும்" என பதிப்புரையில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

புத்தக அட்டையை இரா. சடகோபன் வரைந்தார் என்ற தகவல் இல்லை. புத்தக வடிவமைப்பு மோசமாக அமைந்துள்ளமை கவலை தரும் சங்கதியெனினும் வேறு வழியின்றி படிப்பது நம் கடனாகிறது.

# இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் கவனமாகச் செதுக்கிய

# 'மணல்வெளி அரங்கு'

வெளியீடு : தேசிய கலை இலக்கிய பேரவை
விலை : ரூபா 125.00

"அடேய் தேவனைக் கோயிலில் கண்டாயா? மாடுகள் கொம்புகளை மறைத்த தலைகளை ஆட்டியபடி கேட்டன. லாடன் பூண்ட அவற்றின் கால்கள் துள்ளின.

அப்பு நள்ளிரவில் கோவிலில் கண்ட காட்சி சட்டென்று அப்பாவின் அப்புவின் நினைவுக்கு வந்தது. தேவர்களைக் கண்டால் சொல்லக் கூடாது. தேவர்களை மட்டுமா? தேவனையுந்தான்" என்று 'தேவர்கள்' என்ற சிறுகதை முடிவடைகிறது.

கதை முடிவடைகையில்தான் சில கேள்விகள் எழுகின்றன. அப்புவின் அப்பு தேவர்களை கண்டதாகச் சொன்ன தால்தான் அப்புவிடமிருந்து கோவில் பறிபோனதென்பதால் தேவர்கள் ஊரில் உலாவுவதைக் காட்டிக் கொடுத்தால் 'கனவு பலிக்காது என்ற நம்பிக்கையுடன் இணைக்கப்பட்ட நல்ல ஒரு குறிப்பிடுக் கதையே இக்கதையென்று புத்தகப் பண்பாட்டு மேம்பாட்டுக்கான தேசிய கலை இலக்கிய பேரவை நடத்திய பௌர்ணமி தின ஆய்வரங்கில் றோயல் கல்லூரி ஆசிரியர் திரு. கு ஸ்ரீ இராகவராஜன் குறிப்பட்டது பொருத்தமாக வேயுள்ளது.



பத்துச் சிறுகதைகளை உள்ளடக்கிய சிறுகதைத் தொகுதியே இந்நூலாகும் இச் சிறுகதைகளை 1995ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கும் 2000ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் என்னால் எழுதப்பட்ட கதைகளில் தொகுப்பு இதுவாகும்" என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் சி. சிவசேகரம் தனது முன்னுரையில் திருச்செந்திநாதன் ஆண்டுக்கு மூன்று கதைகட்கும் மேல் எழுதவில்லை என்பது அவர் எழுதிக் குவிக்கிற படைப்பாளி அல்ல என்பதை உறுதி செய்கிறது. அவரது கதைகள் ஒவ்வொன்றும் கவனமாகச் செதுக்கப் பட்டிருப்பதை அவதானிக்கும் போது தான் சொல்வது வாசகரைச் சென்றடைய வேண்டும் எனக் கருதிகிற படைப்பாளிகள் நடுவே அவரை அமர்த்துகிறது" என்றார்.

மேலும் முன்னுரையில் "கதையாசிரியரின் அரசியலுடனோ உலக நோக்குடனோ முற்றாக உடன்பட வேண்டிய தேவை இல்லாமலே அவரது கதைகள் அவர் வாழும் சமூகச் சூழலை நேர்மையாக அடையாளப்படுத்துவதை நாம் அறிய முடிகிறது" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இவை பின்னட்டையில் இடம் பெற்றுமுள்ளன.

வன்னி வாழ்வினூடே இக்கதைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பு இவரது மூன்றாவது சிறுகதை வெளியீடாகும்.

இந்நூலுக்கான அட்டைப்படத்தை ஓவியரும் கவிஞருமான இரா. சடகோபன் வரைந்துள்ளார்.

சிறுகதைத் தலைப்புகளுக்கு வரையப் பட்ட கோட்டுச் சித்திரங்களும் நூலுக்கு அழகூட்டுகின்றன.

தமிழ்த் தேசிய விடுதலைப் போரின் சில பரிமாணங்களை இந்நூலில் தரிசிக்கலாம்.

புதிய பூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 மார்ச் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 45



ஒப்பந்தத்தை எதிர்த்து வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறுகிறது.

# இந்தியாவை வற்புறுத்தத் தயங்கும் தமிழர் கூட்டமைப்புத் தலைமை!

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சமாதானம் விரும்பும் அனைத்து சக்திகளும் வரவேற்றுள்ளன. அத்துடன் அடுத்த கட்ட நகர்வைத் துரிதப்படுத்துமாறும் வேண்டுகின்றன. சர்வதேச நாடுகள் பலவும் இவ் ஒப்பந்தத்தை வரவேற்று நம்பிக்கை தெரிவித்து வருகின்றன. இந்தியா கூட ஒப்புக்கு வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆனால் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தற்போதைய ஒப்பந்த சூழலை மனம் உவந்து ஏற்றுக்கொள்ள வில்லை. அதனைக் குழப்பிக் கொள்ளவே விரும்புகின்றனர்.

இந்தியா நோர்வேயின் அனுசரனையை முன்பும் விரும்பவில்லை இப்போதும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இதனால் தான் முன்னைய நோர்வேயின் முயற்சியைத் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொள்ளாது நழுவிக் கொண்டன. தமிழ்க் கட்சிகள் தேர்தலுக்கு முன்பு பத்துக் கட்சிகளின் கூட்டுஎனக் கூறிக்கொண்ட நேரத்தில் நோர்வே அனுசரனையை கசப்புட னேயே பார்த்துநின்றன. காரணம் அவர்கள் இந்தியாவின் நம்பிக்கைக் குரிய விசவாசிகளாக இருந்து வருவது தான்.

அப்படிப்பட்ட தமிழ்க் கட்சிகள் தற்போது மாட்டுப்பட்டுப் போய்நிற்கிறார்கள். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக புலிகள் இயக்கத்தின் பக்கம் நின்று அவர்களை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கிறோம் என்றே வாக்குகள் வாங்கிப் பாராளுமன்றம் சென்றார்கள். ஆனால் தற்போதைய நோர்வேயின் அனுசரனையுடன் புலிகள் அரசாங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்தியா மறைமுகமாக நின்று எதிர்க்கிறது. ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற அமைப்புகளுக்கும் பௌத்த தீவிரவாத பிக்குமாருக்கும் பின்னால் இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களும் 'றோ' உளவுப் பிரிவினரும் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இந்தியா தலையிட்டால் பரவாயில்லை நோர்வே வெளியேற வேண்டும் என்பது மேற்படி அமைப்புகளின் கோரிக்கையாகும். இதிலிருந்து விளங்கக் கூடியது என்ன என்பது புரியும்.

அத்துடன் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு இந்திய மாநிலம் ஒன்றில் இடம் தருமாறு விட்ட கோரிக்கையும் இந்தியாவால் மறுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இந்தியாவின் கபடத்தனமான பிராந்திய மேலாதிக்க நோக்கம் பற்றி அறியாத நமது நாட்டு இந்திய ஆளும் வர்க்கப் பக்தர்கள் தமது பக்திப் பூசையை நடாத்தி வருகிறார்கள்.

தமிழர் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு தர்ம சங்கடம் ஏற்பட்டுள்ளது. அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்ற சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் புலிகளின் கிழக்குத் தலைவர் கரிகாலன் கூட்டமைப்பினர் இந்தியாவை வற்புறுத்த வேண்டும் எனக் கேட்டுள்ளார். சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்திய ஆளும் வர்க்கத்தின் இதயத்திற்கு மிக நெருக்கமான பேர்வழி. அதே போன்று கூட்டணித் தலைமைக்கும் நெருக்குதல் கிடைத்துள்ளது. ரேலோவும் எவ்வாறு இந்தியாவுடன் நடந்து கொள்வது என்பதையிட்டு முழிக்கிறது. தமிழ் காங்கிரஸ் ,குமார் பொன்னம்பலம் காலத்தில் இந்தியாவோடு நெருக்கம் இல்லை. இப்போது எப்படியெனத் தெரியவில்லை.

ஆனால் தமிழர் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளும் இந்தியாவை வற்புறுத்தவும் திண்டாடுகின்றது. இந்தியாவை வற்புறுத்திக் கேட்டால் அதன் பகையைச் சந்திக்க நேரிடும். இத் தலைவர்களுக்கு இந்தியாவில் முதலீடு வியாபாரம் கொடுக்கல் வாங்கல் பெருமளவில் உண்டு. அத்துடன் குடும்பங்கள் உறவுகள் எல்லாம் அங்கு நல்ல நிலையில் உள்ளன. இந்தியாவோடு முரண் பட்டால் ஈழவேந்தனுக்கு நடந்தது தமக்கும் ஏற்படலாம் என அஞ்சுகின்றனர்.

இங்கு யூஎன்.பியைப் பகைக்க முடியாது. அங்கே இந்தியாவை எதிர்க்க முடியாது. யாவற்றுக்கும் மேலாக புலிகள் இயக்கத்திற்கு முகம் மறுக்கவும் முடியாது. பொங்கு தமிழ் நிகழ்வுகளில் கூட்டமைப்பின் தலைவர்கள் பார்வையாளர்கள் தான். அதிலும் கூட்டணியின் தலைவர்கள் தலை கூடக் காட்ட வில்லை. கொள்கையற்ற இந்திய நலன் காக்கும் கூட்டமைப்பினர் இக் கட்டான நிலைக்குள் மாட்டுப்பட்டுக் காணப்படுகின்றனர். இது முன்னமே எதிர்பார்க்கப் பட்டது தான்.

## குறுகிய அரசியல் நோக்கம் கடந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் முன்செல்ல வேண்டும்.

கடந்த வாரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகிய இருவரும் ஜகையெழுத்திட்டுள்ள சமாதானத்திற் கான புரிந்துணர்வு ஒப்பந்தம் வரவேற்கப்படவேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆரம்ப நடவடிக்கையாகும். இதன் மூலம் காலவரையறையற்ற யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளதுடன் சமாதானப் பேச்சு வார்த்தைக்கான அடித்தளமும் இடப்பட்டுள்ளது. இதனை எமது புதிய ஜனநாயக கட்சி மிகுந்து மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. நாட்டினதும் அனைத்து மக்களினதும் சமாதானத்திற் கான அரசியல் யதார்த்தத்தின் தேவையையும் அவசியத்தையும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் உணர்த்தி நிற்கின்றது. எனவே இவ் ஒப்பந்தம் எவ்வித பின்வாங்கலும் சீர்குலைவும் இன்றி பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு நிரந்தர சமாதானம் வரை இருதரப்பாலும் பாதுகாத்து சாதகமான சகல வழிகளாலும் முன் னெடுத்துச் செல்லப்படல் வேண்டும். அதேவேளை இதனைச் சீர்குலைத்து தத்தமது குறிகிய அரசியல் நலன்களைப் பாதுகாக்க முற்பட்டுள்ள பேரினவாத பிற்போக்கு சக்திகளை எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் அரசியல் குழுக் கூட்டத்திற்குப்பின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், நாட்டின் பேரினவாத ஆளும் வர்க்க அரசாங் கங்கள் அந்நிய ஏகாதிபத்திய சக்தி களின் துணையுடன் தேசிய இனப்பிரச்சி னையை யுத்தமாக முன்னெடுக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே எமது கட்சி அதனை வன்மையாக எதிர்த்து வந்திருக்கிறது. யத்தத்தின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்றும் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் நியாயமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் எடுத்துக்கூறி வந்துள்ளது. யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழ் மக்களது தேசிய இன விடுதலைக்கான போராட்டத்தில் முதன்மைப் பிரதிநிதிகளாக இருந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வையும் சமாதானத்தையும் உறுதிப் படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தி வந்துள்ள எமது கட்சி அதற்கான அரசியல் இயக்கத்தை தனித்தும் ஏனைய இடதுசாரி ஜனநாயக சக்திகளோடு இணைந்தும் உறுதியாக முன்னெடுத்தும் வந்துள்ளது.

எனவே யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களினதும் நாட்டின் சகல மக்களினதும் நீண்டகால எதிர்பார்ப்பும் அபிலாஷையுமான யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு, நிரந்தர சமாதானம் என்பனவற்றுக்கான ஆரம்ப நடவடிக்கையாகவே இப்புரிந்துணர்வு உடன்படிக்கையை எமது கட்சி அடையாளம் கண்டு வரவேற்கின்றது. மக்களது தேவை, எதிர்பார்ப்பு, நம்பிக்கை என்பனவற்றில் அடிப்படையில் உருவாகிய இப்புரிந்துணர்வு உடன் படிக்கையை அதனை உருவாக்கி ஏற்றுக்கொண்டுள்ள இருதரப்பினரும் தத்தமது உள்ளார்ந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஒன்றாக வன்றி கடந்தகால அனுபவங்கள் பட்டறிவுகளைக் கவனத்திற்குள் கொண்டு இதய சுத்தியோடு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என கட்சி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. அதேவேளை கடந்த ஏழாண்டுகளாக மக்களது ஆணையும் போதிய சந்தர்ப்பமும் இருந்து போதிலும் தமது தவறான அணுகுமுறை கொண்ட நிலைப்பாட்டில் யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பங்களை கைநழுவவிட்ட பொதுசன முன்னணியும் ஜனாதிபதியும் தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அதன் மூலமான சாதக அம்சங்களையும் சீர்குலைக்க முற்படக் கூடாது என்ற வேண்டுகோளையும் எமது கட்சி விடுக்கின்றது. இன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகளைக் கணக்கில் கொண்டு சகல தரப்பினரும் எவரது குறுகிய அரசியல் லாப நோக்கங்களுக்கும் அந்நிய மேலாதிக்க சக்திகளின் தேவைகளுக்கும் இடமளிக்காது அதற்கு அப்பால் தூரநோக்குடன் செயல்பட வேண்டும் என்பதையும் எமது கட்சி சுட்டிக் காட்டுகின்றது.

### மலையக ஐக்கியம்

1ம் பக்க தொடர்ச்சி..

தற்போது எதிரும் புதிருமாக இருக்கின்றன. பாராளுமன்றத்திற்கு மலையக ஐக்கியம், உள்ளுராட்சி சபைக்கு தனித்துவம் என்பதே மலையக அரசியல் நிலையாகிவிட்டது இ.தொ.கா. ம.ம.மு. என்பன அவற்றின் தேவைக் காக ஐக்கியப்பட் டாலும் ஐ.தே.கட்சியின் கீழ் ஐக்கியப் படவே விருப்பம் கொண்டிருந்தன. ரணிலை எஜமானராக ஏற்றுக் கொண்டு செயற்பட தயாராகி இருந்தன.

உள்ளுராட்சி சபை தேர்தலில் போதிய இட ஒதுக்கீடு கிடைக்காவிட்டால் இ.தொ.கா. ம.ம.மு. சேர்ந்து போட்டியிடடிருக்கலாம். அதற்கு விருப்பம் இருக்கவில்லை.

எனவே மலையகத் தலைவர்களின் ஐக்கியம் மலையகத்தமிழ் மக்களுக்கு அதிகாரத்தில் பங்கை பெற்றுக் கொடுக்கவோ உரிமைகளை வென்றெடுப்பதற்கோ அன்றி தமக்கிடையே பதவிகளை பங்கிட்டுக் கொள்வதற் காகவும், இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காகவுமே காலத்திற்கு காலம் கதைக்கும் விடயமாகி விட்டது. அதை பற்றி காலத்திற்கு காலம் மக்களுக்கு அளவுக்கு அதிகமான நம்பிக்கையூட்டப் படுகிறது.

ஐ.தே.கட்சியை பலப்படுத்துவதாகவும், அதனூடாக நன்மை அடையவும் இ.தொ.கா. ம.ம.மு. தலைமைகள் விரும்பின. அது நிறைவேறிவிட்டது. அவற்றின் ஐக்கியம் என்பது மலையகத் தமிழ் மக்களின் தேவையிலிருந்து எழுந்த வொன்று அல்ல. மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பொதுவான அரசியல் வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கியம் எதுவும் கட்டியமைக்கப்படவும் இல்லை. அவ்வாறான ஐக்கியம் மக்களின பங்களிப்புடன் கட்டியமைக்கப் படவும் இல்லை. எனவே தலைமைகள் விரும்பும் போது கூடிக் கலையலாம்.

பொதுத் தேர்தல் முடிந்தவுடன் இ.தொ.கா. ம.ம.மு. தலைமைகளுக் கிடையே அபிப்பிராய பேதங்கள் ஏற்படத் தொடங்கின. பாராளுமன்றத் தில் தேசியப்பட்டியல் ஆசனங்களை பகிர்ந்து கொள்வதில் கூட்டுத்தாபன., அரசாங்க நிறுவனப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதிலும் போட்டிகள் ஏற்பட்டன. அவற்றில் இ.தொ.காவே நன்மை அடைந்தன. ம.ம.மு. புறக்கணிக்கப் பட்டது. ஆறுமுகம் தொண்டமான் அமைச்சரவை அமைச்சராக தெரிவு செய்யப்பட்டார் சந்திரசேகரன் முதலில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக தெரிவு செய்யப்படவில்லை தற்போதுதான் அமைச்சரவை அமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ம.ம.மு. கேட்டுக் கொண்டபடி பிரதியமைச்சர் பதவியும் கிடைக்கவில்லை. மனோ கணேசனுக்கு கிடைக்கவில்லை. இவ்வாறான விடயங்களில் இ.தொ.காவிற்கு கிடைத்த நன்மைகள் ம.ம.முன்னணிக்கு கிடைக்கவில்லை.

இதனால் கொஞ்சம் கொஞ்சமாக மோதல் ஏற்பட்டு, ஏற்படுத்தப்பட்டிருந்த போலியான மலையக ஐக்கியம் குலைக்கப்பட்டது. அவ்விரண்டு தலைமைகளின் போலி ஐக்கியம் அம்பலமானது. வேலைத்திட்டமும், அடிப்படையும் இல்லாத ஐக்கியதிற்கு இந்நிலையே ஏற்படும் அவ்வாறான ஐக்கியத்திற்கு பெரிய ஆரவாரங்கள் அவசியமில்லை.

இத்தகைய ஏமாற்று மோசடியும் ஆதிக்கமும் கொண்ட மலையகத் தலைமைகள் இரண்டினதும் அரசியல் பிற்போக்குத் தனங்கள் மக்களின் விழிப்புணர் வால் முறியடிக்கப்படும் போதே மாற்றத்திற்கான பாதை திறக்கப்படும்.

### ஒப்பந்தத்தை

1ம் பக்க தொடர்ச்சி

படியேறி நிற்கும் சூழலில் எவ்வாறு பேரினவாதம் பேசும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு ஆசனத்திலிருந்து கடந்த தேர்தலில் அதிக இனவாதம் பேசியதால் பதினாறு ஆசனங்களை இரட்டி மடங்காக உயர்த்தலாம் என ஜே.வி.பி. நம்புகின்றது.

அது மட்டுமன்றி பொதுசன முன்னணியையும் தனது பாதையில் பயணிக்குமாறு கேட்கின்றது. அதனாலேயே ஜனாதிபதி தனக்குள்ள அதி உயர் அதிகாரத்தைப் பயன்படுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்து வருகின்றது. ஜே.வி.பி. வைத்துள்ள பொறியில் பொதுசன முன்னணியும் ஜனாதிபதியும் வீழ்ந்து கொள்வார்களா? என்பதே கேள்வி.

பொதுசன முன்னணியும் ஜனாதிபதியும் இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புகளையும் சீர்குலைக்க முற்படக் கூடாது. பழிக்குப்பழி என்ற விதமாக நடந்து கொள்ளலாகாது. உள்நாட்டு நெருக்கடிகளும் சர்வதேசச் சூழலும் உருவாக்கியுள்ள இன்றைய சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை தக்கபடி பாதுகாத்து முன்னெடுக்க பொதுசன முன்னணி நாட்டையும் மக்களையும் அழிவிலிருந்து பாதுகாக்க உரிய தருணமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி பற்றியும் அதன் கடந்தகாலம் நிகழ்கால நிகழ்ச்சி நிரல் பற்றியும் நாம் நன்கு அறிவோம். அவர்களது வர்க்க நிலைப்பாடு பற்றியும் உறைந்துள்ள பேரினவாத அம்சங்கள் சம்மந்தமாகவும் தெளிவு நம்மிடம் உண்டு. அதன் பெருமுதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு நிலை பற்றி எமக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. அது திருந்தி விட்டது என்பதும் இல்லை.

ஆனால் சந்திரிகா அம்மையாரும் பொதுசன முன்னணியும் செய்ய வேண்டுமென மக்கள் அன்று ஆணை வழங்கியும் சந்தர்ப்பங்கள் இருந்தும் பேச்சுவார்த்தையையும் அரசியல் தீர்வையும் முன்னெடுக்காது அகங்காரத்துடன் யுத்தத்தை முன்னெடுத்து யாவற்றையும் பாழாக்கிக் கொண்டனர். தமக்கு கிடைத்த இறுதிச் சந்தர்ப்பத்தை சந்திரிகா அம்மையார் உரியவாறு பயன் படுத்தாது வீணாக்கிக் கொண்டார்.

இப்போது ரணில் விக்கிரமசிங்கா அந்த இறுதிச் சந்தர்ப்பத்தை தனது கையில் எடுத்து நிற்கிறார். அவரும் அவரது அரசாங்கமும் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் உரிய திசையில் காலடி எடுத்து வைத்துள்ளனர். முன்னெடுப்பிற்கு ஆதரவு கொடுத்தல் வேண்டும்.

தவறான முடிவுகளுக்கு திசை மாறி செல்லாதவரை அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது நாட்டையும் மக்களையும் நேசிக்கும் நேர்மையான இடதுசாரி சக்திகளது கடமையாகும். அதனை விடுத்து வெறுமனே யூஎன்.பி. எதிர்ப்பு என்ற பழைய முழக்கத்தை வைத்துக் கொண்டு தாமும் செய்யாது மற்றவர்களையும் செய்ய விடாது தடுக்கும் நிலையைக் கைவிட்டு இனப்பிரச்சினையின் தீர்வுக்கு சகல ஜனநாயக இடதுசாரி முற்போக்கு சக்திகள் தமது ஆதரவை வழங்க வேண்டும் என்பதையே புதியபூமி வற்புறுத்துகின்றது.

### இனப்பிரச்சினையில்

1ம் பக்க தொடர்ச்சி

இந்தியாவில் பேச்சுவார்த்தைக்கு இடம் தருமாறு புலிகள் விடுத்த கோரிக்கை மறுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஜே.வி.பி. சிஹல உறுமய போன்ற தீவிர பேரினவாத சக்திகளுக்குப் பின்னால் இருந்து உசுப்பி விடுவதாகவும் ,அரசியல் அவதானிப்பாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகள் இப்போது இந்தியாவின் எண்ணப்படி நடந்து கொள்ள முடியாது. திண்டாடுகின்றன. அதனால் அவை மௌனம் சாதித்தும் வருகின்றன.

எனவே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் தமது சொந்த முடிவுகளுக்கு ஏற்றவாறு பேச்சுவார்த்தை நோக்கிச் செல்ல வேண்டும். அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகளின் தாளத்துக்கு ஆட முற்படக் கூடாது. நமது நாடும் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் என்ற நிலையில் நின்றே செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்படுவதில் உறுதியாக இருந்தால் மட்டுமே தற்போதைய சூழலில் சவால்களைத் தாண்டிச் செல்ல முடியும். அல்லாதுவிடில் அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகளின் காய் நகர்த்தல்களுக்குள் சிக்கி நமது சொந்த இருப்பை இழந்து கொள்ளாது புரிந்து செயல் படுவதிலேயே பேச்சுவார்த்தையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிபு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.